3438

34.38 c c

98404

JPL
C3438

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "மனிதன் எங்கேயோ போகிறன்?"

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
பொது நூலகம்
மாநகராட்சி மன்று
31-12-1994
யாழ்ப்பாணம்
KOHA JPL
34388 CC

தவத்திரு. ஸ்ரீ சாயிமாதா
சிவ. பிருந்தாதேவி

98404
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
(இலங்கை)

I

98404 C.C
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு:

1974.

விலை ரூபா:

5-00

வெளியிட்டோர்:

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.

அச்சிட்டோர்:

ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அணிந்துரை

மனித சரித்திரம் மூன்று சொற்களுக்குள் அடங்கிவிட்டது. பிறந்தான்; இருந்தான்; இறந்தான் என்பனவே அந்த மூன்று சொற்களுமாகும். இந்தச் சரித்திரம் படைப்புக் காலந் தொட்டே நிகழ்ந்து வந்திருக்கின்றது. மனித உருவிலே விலங்கு உண்டு; மனிதர் உண்டு; தேவரும் உண்டு.

நமக்கெல்லாம் தற்செயலாக மனிதப் பிறப்புக் கிடைத்துள்ளது. அதனைப் பயன்படுத்த வேண்டியது நமது கடமை. முதலில் மனிதப்பண்பை வளர்த்து மனிதனுக வாழவேண்டும். அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை என்பது வள்ளுவர் வாக்கு.

தம்மைப்பற்றி மாத்திரம் கருதி வாழ்தல் விலங்கு வாழ்க்கையாகும். தம்மைச் சுற்றியுள்ளோரையும் கருதி வாழ்தல் தான் மனித வாழ்க்கையாகும். மனிதன் யார்? என்ற கேள்விக்கு இக்காலக் கவிஞர் ஒருவர் விடைதருகின்ருர்.

''யாருக்கும் அஞ்சாமல் அன்பு அறம்
காப்பவன் யாரவனே மனிதன்!
பேருக்கும் புகழுக்கும் பேராசையில்லாப்
பெரியவனே மனிதன்!
வேருக்கு வார்த்திடும் நீரினைப்போல
விருப்புடனே வாழ்க்கையெல்லாம்
ஊருக்கு உபகாரமாக உதவிடும்
உத்தமனே மனிதன்!''

இது சுவாமி சுத்தானந்தருடைய வாக்கு.

''தானும் நிறைவுற்றுத் தன்னவரும் இன்புறுதற்கு
ஆன ஒழுக்காறே அறம்!''

தான் நிறைவுபெற்று கலங்காதிருப்பவனே மற்றையோருக்கு வழிகாட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மனிதன் எங்கெங்கெல்லாமோ போய்க்கொண்டிருக்கின்றான். அவற்றையெல்லாம் அனுபவத்தில் ஆராய்ந்து அதற்கு வழிகூறி நம்மையெல்லாம் வழிப்படுத்துகின்றார் ஸ்ரீ சாயிமாதா சிவ. பிருந்தாதேவி அம்மையார் அவர்கள். அவர்கள் குருவருளும் திருவருளும் பெற்றவர்கள். ஆகவே அவர்கள் வாக்கு அனுபவமும் அருட்சக்தியும் நிரம்பியவை. அவற்றைப் படித்துப் பயன்பெறுவோமாக!

— நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
(இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புரை

"மனிதன் எங்கேயோ போகிறன்!"

ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே எண்ணிப்பார்த்து கொடுக்கக்கூடிய – அவன்செல்லுகின்ற வேகத்தின் மதிப்பும், ஒன்ருேடு ஒன்று இணைந்தவை. வெளி உலகில் நிகழக்கூடிய வேலைகளின் வேகம் இதிலே அடங்கி உள்ளது. இந்த வெளி உலகில் மனிதன் எண்ணுவதுபோல, இன்ப துன்பங்களை உண்டு பண்ணக்கூடிய நிகழ்ச்சிகளும் பொருளும் இல்லை. இதற்கெல்லாம் காரணம் மனம். இதற்குத்தான் தோற்றங்கள் ஏற்படுகின்றன. மனது எந்த அளவு புறவுலகிற்கு மதிப்புக் கொடுக்கிறதோ அதற்குமேல் மதிப்பில்லை. எனவே, மனிதனின் மனம்தான் ஒரு பெரிய அளவு கோலாகத் திகழ்ந்து வருகிறது.

இதைத்தான் தாயுமானவர் கூறுகிருர்:

"வாக்கால் மனத்தால்
மதிப்பரியாய்! நின்னருளை
நோக்காமல் நோக்கிநிற்கும்
நுண்ணறிவு காண்பேனே?"

மனம், போடுகின்ற மதிப்பு சரிதானு? அதுவும், எல்லாக் கருணையும் கொண்டு உலகத்தை உய்விக்கும் பரம்பொருளைப்பற்றி, மனிதனின் மனம் போடுகின்ற மதிப்பு சரிதானு? இவைகளுக்கு விடைகாண வேண்டும் என்பது என் விருப்பம்.

மனதிற்கு உகந்த முறையில், சர்ச்சை செய்து இந்து சமயத்தின் இரண்டு கண்கள் போன்ற 'சைவம்', 'வைணவம்' இரண்டிலும் உள்ள பக்தி நெறி மார்க்கங்கள் பற்றியும், நாயன்மார்கள், நால்வர், ஆழ்வாராதிகள் இவர்கள் எடுத்துக்கூறும் கருத்துக்கள் பற்றியும், எளிய முறையில் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும், என்பது எனது நீண்ட நாள் அவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்களும், நல் அறிஞர்களும், ஞானியர்களும் படித்துத் தெரிந்து கொள்ள, நிறைய சுவடிகள், அருமையான புத்தகங்கள் இருக்கின்றன. ஆனுல் என்போன்ற பாமரன், எளியவன், அதிக நுட்ப அறிவு இல்லாதவன், சொன்னதைக்கூட சரிவர ஞாபகத்தில் வைத்துக் கொள்ளச் சக்தி இல்லாதவன் போன்றவர்கள், எளிய நடையில் புரிந்து கொள்ளக்கூடிய 'ஒரு நூல்' தேவை என்பதையும், அதை யார் மூலமாகப் பெறமுடியும் என்று எண்ணிக்கொண்டு இருக்கும் வேளையில், பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய 'ஸ்ரீ சாயி மாதா', சிவ. பிருந்தாதேவி அவர்களின் நினைவு எனக்கு வந்தது.

அம்மையாரை அணுகி, எனது யோசனையைச் சொன்னேன். அவர்களும் மிகவும் ஆச்சரியப்பட்டு, தானும் இம் மாதிரி ஒரு எண்ணம் கொண்டிருப்பதாகவும், அதை எழுதிக் கொடுக்க, தனக்கு உதவியாக யாரைக் கொண்டு செய்வது? என்று எண்ணி வருவதாகவும் கூறினுர்கள்.

இதைக் கேட்டதும், "அடியேன் அந்தக் காரியத்தைச் செய்யலாமா?" என்று கேட்டேன். அவர்களும் மிகுந்த காருண்யத்துடன் என்னுடைய சந்தேகங்களுக்கெல்லாம், விடை அளிப்பது போல ஒரு அருமையான நூலை சிருஷ்டி செய்து, திருவாய் மலர்ந்து அருளினுர்கள்.

அந்தத் தொகுப்பு தான், இதோ இப்போது புத்தக வடிவில் வந்துள்ளது. எதையுமே சரிவர அறியாத மனிதன், எல்லாவற்றையும் அறிந்துவிட்டதாக போலி வேடம் போட்டுக் கொண்டு, உலகத்தையும் ஏமாற்றிக் கொண்டும், தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டும், வாழ்நாளை வீண் நாளாகக் கழித்துவிடாமல், உலகத்தில் உன்னத நிலையில் என்றென்றும் நிலைத்து நிற்க உதவுகிறது, இந்த அரிய நூலின் கருத்துக்கள்.

இதில் அடங்கி உள்ளது நல்ல இனிப்பான கரும்பின் ரசம். இதை அளவோடு பருகும்போது ஏற்படும் இன்பத்திற்கு, ஏது வர்ணனை? எவரும் விஞ்ஞானத்தை மட்டும் நம்பி வாழ்ந்துவிடாமல், நம் முன்னேர்கள் காட்டியுள்ள 'மெய்ஞான'ப் பாதையில் சென்று நிலைத்த, நீடித்த இன்பத்தைப் பெற எல்லோருக்கும் உதவக்கூடிய நூல் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்று நான் பிறந்திலேன்
பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என் நெஞ்சுளே!

—திருமழிசை ஆழ்வார்

மனிதன் எங்கெங்கோ போகிறுன்! அவனிடம் திட்டமும் இல்லை. சட்டமும் இல்லை. மனம் போன போக்கெல்லாம் போகும்போது, மனதுக்கு இவன் அடிமையாகிருன். மனம் இவனுக்கு அடிமையாகுவது எப்படி? திக்கும், திசையும் அறியாத நிலையில், வாழ்க்கைப் புயலில் சிக்குண்டு தவித்து, கஷ்டப்படும் மனிதன், தன்னை எண்ணிப் பார்த்துக்கொள்ள, இந்த நூல் மிக மிக உதவியானதாகும்—மனிதன் எங்கேயோ போனுல் என்ன?—சக்தி சிவம் என்கின்ற உணர்வை அறிந்து தன்னையும் அறிந்துகொண்டுவிட்டால் அதன்பின்—மனிதன் எங்கே போனுல் என்ன?—இந்த மாதிரி அபூர்வ மனிதர்களைப் பார்த்து, அதன் பின்னர் 'மனிதன் எங்கேயோ போகிருன்!' என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும், அல்லவா!

—கே. எஸ். ராமசாமி

குடவாசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுரை

"மனிதன் எங்கேயோ போகிறன்" அவன் எங்கே போனல் நல்லது; அவன் அங்கே போவது எப்படி? அவன் ஏன் பாதை தடுமாறி உபாதைக்கு உள்ளாகிறன்? என்பதையெல்லாம் பல்லாண்டு காலமாகச் சிந்தித்தும், அதோடல்லாமல் பலரக மனிதர்களைச் சந்தித்தும், இவர்களை எல்லாம் படைத்த பகவானை வந்தித்தும், வையகத்தின் ஆழத்தில் இனங் காண முடியாது மண்டிக் கிடக்கும் குணக் கேடுகளைக் கண்டு, உளம் நொந்து, தன்னைத்தானே நிந்தித்தும், கதறியழவும் சுதந்திரம் இல்லாது எத்தனையோ இரவுகள் கண்கள் குளமாகியும்,

"நாம் பிறந்தது ஏன்?" என்ற வினவை எண்ணற்ற முறைகள் இதயத்துள்ளே கேட்டும், விடையொன்றும் கிடைக்காது தவித்தும்,

கண்ணிருந்தும் குருடாகவும், காதிருந்தும் செவிடாகவும், வாயிருந்தும் ஊமையாகவும், மனமிருந்தும் தெம்பற்றும் தன்னைத்தானே ஒன்றுக்கும் உதவாத் துரும்பென எண்ணி; இன்று வருவானே யமன் நாளையே வருவானே மற்று என்று வருவானே என அவன் வரவை எதிர்நோக்கி இருந்த வேளையில் —

நடமாடும் தெய்வம், உலகிற்கோர் வழிகாட்டி, அருளுரை பகரும் ஆன்மீகநாதன், சகலருக்கும் சாஸ்வத மங்களத்தைத் தரும் சம்கரனை விளங்கும் ஸ்ரீசங்கரர் தரிசனம், சில பல ஆண்டுகளுக்கு முன் சித்தித்தது.

பல ஆண்டுகளாகத் தரிசனம் கிடைத்தாலும் 1970-ம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள் அதிகாலைப்போதில், காஞ்சிப் பதியில் கிடைத்த தரிசனம் — ஒரு மணி அவகாசம் குரும்கானுக்கு அருகிருந்து பெற்ற ஆனந்தானுபவம், வாழ்க்கையின் போக்கையே மாற்றி, உள்ளத்தனைய உயர்வைச் சிந்திக்க வைத்து, 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என உருகிட வைத்தது.

"ஆசைக்கு வேலி தேவையெனப் பலர் ப்ரவசனம் (சொற்பொழிவு) செய்கிறர்கள். தனக்கு அது தேவையென அவர்களுக்குத் தோன்றுவதில்லை" என்று ஜகத்குரு சொல்லிவிட்டு, ஒரு இளநகையை என் பக்கம் சற்றே நோக்கிச் சிந்தினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நோக்கு — அப்பார்வை — என் உள்ளத்தைத் தொட்டது; உணர்வைத் தட்டி எழுப்பியது.

அதுதான் 'சட்சு' அல்லது கண்களால் கடாக்ஷித்த தீக்ஷையோ?

உடன் எழுந்து நமஸ்காரம் செய்தேன். ''விடவேண்டியதை விட்டால், வரவேண்டியது வரும்'' என்று, அக்ஷரலக்ஷம் மதிக்கக்கூடிய அருளாசி வழங்கினார்கள்.

நான் கசிந்து கண்ணீர் விட்டேன்; கொட்டிய கண்ணீரிலே பாவம் கரைந்து கலந்து சென்றுவிட்டதாக ஒரு உணர்வு பற்றியது. என்னுடன் கூட, பக்தரும் பண்பாளருமான டாக்டர் திரு. E. A. கிருஷ்ணமூர்த்தி (அவர் இப்போதில்லை; இறையடி சேர்ந்து விட்டார்.) வந்திருந்தார்;

''என்னம்மா! என்னமோ பெரியவர்கள் சொன்னார்களே! அதன் பொருள் என்னவோ? ஏன் நீ அழுதாய்?'' என்றெல்லாம் கேட்டார்.

சர்க்கரை இனிக்குமென்று சொல்லலாம்; இனிப்பு எப்படிப்பட்டது என்று யாரால் உணர்த்த முடியும்? உள்ளம் உணரும் ஆனந்தானுபவத்தை அல்லது ரஸானுபவத்தைத் தாமே சுவைக்க முடியுமே தவிர அதனைச் சொல்ல நல்லுமோ?

அங்கிருந்து நேரே, திருக்கோயிலூர் தபோவனம் வந்தோம். ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் தரிசனம் தந்தார்கள். அமோகமாக வரவேற்று ஆனந்தமாகப் பேசினார்கள்.

''இவள் நம்மோடு சேர்ந்து விட்டாள்; இனி எதிலும் சோர்ந்து போக மாட்டாள்'' என்று சொல்லிவிட்டுப் பச்சைக் குழந்தைபோல சிரித்தார்கள். காஞ்சிப் பதியில் பெரியவர்கள் அருளிய அமுதமொழிக்கும், தபோவனம் சுவாமிகளது அருளாசிக்கும் மிக நெருங்கிய ஒற்றுமை இருப்பதாக உள்ளம் நினைந்தது.

> ''முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
> பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
> சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
> அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே''

என எண்ணிப் பக்திப் பரவசத்தில் மனம் மகிழ்ந்து நனைந்தது; ஊருக்குத் திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது குருநாதரும் அருளாளருமான புதுக்கோட்டை சத்குரு ஸ்ரீ சாந்தானந்த சுவாமிகள், தாம் புதிதாக நிர்மாணித்துள்ள ஸ்கந்தகிரி ஸ்கந்தன் கும்பாபிஷேகத்திற்கு வரும்படி அழைத்திருந்தார்கள். ஆங்கு சென்று இரு நாட்கள் கும்பாபிஷேகப் பெருவிழாவில் பேசிவிட்டு அவர்களது ஆசி பெற்றுத் திரும்பினேன்.

எனது இருப்பிடத்திற்கு எதிர் வீட்டில் ஒரு பெரியவர்; ஜோதிடத்தில் நிபுணர். பெயர் ராமுடு அய்யர். அன்று வெள்ளிக்கிழமை; சந்தியா காலம். பூஜை முடித்து அவரது வீடு சென்றேன்.

"அய்யா! மனம் ஒரு நிலையில் இல்லை; எங்கேயோ பறந்து திரிகின்றது. வானமுகட்டிற்கு அப்பாலும் சென்று விடுகின்றது. அதிலே இன்பம் கலந்து துன்பமும் இணைந்திருப்பதுபோல் தோன்றுகிறது. இன்னதென்று இனம் புரியவில்லை; ஒரே தவிப்பாகவும் இருக்கிறதே — மீன லக்னம், 2-ல் செவ்வாய், 4-ல் ராகு, 12-ல் வியாழன். எனவே ஆஸ்ரம வாழ்க்கை அமையுமெனத் தர்க்கரீதியாகச் சொன்னீர்களே— அது எப்போ" எனக் கேட்டேன்.

"பதினொரு படிகள் கடந்தாயிற்று; இன்னும் ஒரு படி, தானே வரும்" என்றார்.

இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே — பிராம்மண அபிவிருத்தி சங்கக் காரியதரிசி திரு. கிருஷ்ணமூர்த்தி அய்யர் "அம்மா! ஒரு பெரிய சுவாமிகள் வந்துள்ளார். பார்க்க வருகிறாயா?" எனக் கேட்டுக்கொண்டே வந்தார்.

மனிதனுக்கு மாற்றம் வர, ஆண்டவன் யார் யாரையோ எங்கிருந்தோ அனுப்புகிறான் என்றும், ஆண்டவனே குருவாக வருகிறான் என்றும் படித்தறிவேனே தவிர அன்று வரை பார்த்தறியேன். ஒரே வியப்பு! அவருடன் ஓடோடிப் பெரியவர் இருக்குமிடம் சென்றேன்.

கருணையே வடிவாகக் காட்சி தந்தார்; ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விபூதி சாயிபாபா சுவாமிகள்! நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்து அமர்ந்தேன். சுற்றியிருந்தவர்கள் என்னை சுவாமிகளிடம் அறிமுகம் செய்தார்கள்.

"எனக்கு இவளை ரொம்ப நாளாகத் தெரியுமே — எல்லாம் ஜன்மாந்த்ர வாசனைதான். உனக்கென்னம்மா வேண்டும்?" என்றார்கள்.

"எனக்கு என்ன வேண்டும் என்று எனக்கே தெரியவில்லை சுவாமி! மனம் என்னவோ தவிக்கின்றது. காணாத ஒன்றைக் காணவும், கேளாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைக் கேட்கவும் ஆசைப்படுகின்றது. இது எதனுல் என்பதும் தெரியவில்லை'' என்றேன்.

சுவாமிகள் தம்து சிந்தனையை முகத்தில் தேக்கி,

''இரு பெரிய மகான்கள் சொல்லியும் உனக்குப் புரியவில்லையா? நீ தயாரா?'' என்ருர்கள். ''இப்போதே சித்தம்'' என்றேன்.

சுவாமிகள் உடனுகத் தனியறைக்குச் சென்ருர்கள். சுவாமிகள் தங்கியிருந்தது பம்பாய் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யரது வீட்டில்; இவர் பரம் பக்தர்; வேதாத்யயனம் செய்தவர். பம்பாயில் உத்தியோகத்தி லிருந்து ஓய்வு பெற்றவர்; திருப்பணிகளில் ஈடுபாடு உடையவர்.

இவரும், என்னை அழைத்து வந்தவரும், நானுமாக சுவாமிகளைத் தனியறையில் சந்தித்தோம்.

சந்யாசத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டது. மறுநாள் போக மறுநாள் 71-ம் வருடம், பிப்ரவரி மாதம் 14-ம் நாள், ஞாயிற்றுக்கிழமை பகல் 11-15 மணிக்கு, குரு ஹோரையில், சாஸ்த்ரோக்தமாக குருமஹான் ஷி சுவாமிகளின் திருக்கரத்தால், சந்யாச வைபவம் நடத்திவைக்கப் பெற்றது.

''மூலையில் இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியாரென்றுந்திபற நம்மையும் ஆண்டாரென்
றுந்திபற''

இது திருவுந்தியார் — இவ்வாக்கு எவ்வளவு பேருண்மை!

சாதாரணப் பெண்; ஒரு பெரிய கலைக் குடும்பத்திலே கடைசிப் பெண்; இக வாழ்விலே ஈடுபட்டு, ஆடம்பரத்தின் எல்லையிலே திளைத் தவள்; பல பிரச்னைகளையும் போராட்டங்களையும் வாழ்விலே சந்தித் துக் கண்ணீர் சிந்தியவள்.

குரு மகான்களின் கடாக்ஷம் குருட்டினை நீக்கியது;
குரு மகான்களின் அருளாக்கம் இருட்டினை அகற்றியது;
துன்பம் துடைத்து இன்ப ஒளியை ஏற்றியதும் குருவருளே!

மனிதன் எங்கேயோ போகிருன்; ஆம். சாதாரண வாழ்விலே வாழ்ந்துகொண்டிருப்பவன், குருவருள் கூட்டத் திருவருளில் திளைக்கி ருன். அந்தப் பேரின்ப வாயிலை நோக்கி எல்லாரும் நடை போட முடியும். முயன்ருல் எல்லாருமே போகலாம், இன்பமாய்க் கூடலாம். எல்லா நலனும் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழியினைப் பல பெரியவர்களும் கண்ட பாதையினை, அடியேன் எளியேன் ஒரு சிறு நூலாகத் தந்துள்ளேன்.

இந்நூலைப் படித்தால், ''நான் மனிதனா?'' என்பது முதற் கேள்வியாக நம்மையே நாம் கேட்டுக் கொள்ளத் தோன்றும்.

''நான் மனிதன் என்றால், எந்த ரகம்?'' அடுத்த வினா — இப்படியாக வினாக்களைக் கேட்டு விடைகளையும் புரிந்துகொள்ளச் செய்து, மனிதன் தன் எண்ணத்தால், செயலால், சிந்தையால் மிருகமாகவும் மாறலாம்; தெய்வமாகவும் உயரலாம் என்பதையும் தெளிவுறுத்தும் இந்நூல், வெளியிடும் இடமாகிய இலங்கைக்கு மட்டுமோ, எழுதியவள் பிறந்த இந்தியாவிற்கு மட்டுமோதான் சொந்தம் என்பதில்லை.

உலகம் முழுவதும் — எங்கெங்கு மனித குலம் இருக்கின்றதோ அங்கெலாம் பரவி, மனிதன் எங்கேயோ போகிறானே — அது எங்கே என்பதை அறிந்துணர்ந்து கொள்ள வேண்டுமென்பது அடியேனது பற்று, அவா, ஆசை; இன்னும் சொல்லப்போனால் பேராசையுங்கூட!

பதினேழு வயதில் தொடங்கி கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வந்த சொற்பணிகளின் ஆக்கம், பல திசைகளில் பரவியிருந்தாலும், ஒரு காலத்தில் காற்றோடு கலந்து மறைந்து விடாமல் ஒரு நூலாக வெளிவந்து என்றும் நின்று நிலைக்கும்படி செய்த ஒரு புண்ணியம், L. I. C. வளர்ச்சி அதிகாரியும், ஸ்ரீ கோணேஸ்வர சுவாமி கோயில் மானேஜிங் டிரஸ்டியுமான குடவாசல் திரு. K. S. இராமசாமி அவர்களையே சாரும்; சேரும். என்னுடைய பல பணிகளிடையே மிகப் பொறுமையாக இருந்து, நேரம் பார்த்துத் தருணம் கிடைக்கும்போது, என்னைப் பிடித்துச் சில நாட்கள் உட்கார வைத்து, நான் நிமிடத்திற்குப் பல வார்த்தைகளை உதிர்த்தபோதும், எனது வேகத்திற்கு ஈடு கொடுத்து மிக விரைந்து எழுதி நூலை முடித்துக் கொடுத்த திரு. K. S. இராமசாமி அவர்கட்கும் இவரது பரம்பரைக்கும் எனது இதயங் கனிந்த நல்லாசிகள்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டு, அச்சுப் பிழைகளையும் திருத்திச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ள இலங்கை நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையம் அருளாளரும், பண்பின் சிகரமாய் நின்று, இலங்கையில் சமயம் பரப்பும் சிவத்திரு. நா. முத்தையா அவர்கட்கும், அவர்களது இளவல், இராமபிரானுக்கு இலக்குவன் போன்ற ஆக்கப்பணியாளர் திரு. நா. அருமைநாயகம் அவர்கட்கும், நன்றியும், வாழ்த்தும், பாராட்டும் உரித்தானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை அருளிய எனது அருள்ஞான குருமகான் திருவடிகட்கு நமஸ்காரமும், பிள்ளைப் பிராயத்திலிருந்து நல்லபடி வளர நல்லுரை பகன்றவரும், பேராசிரியருமான திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்களது அறிமுகவுரைக்கு எனது நன்றியும்,

மாபெரும் மனத்தோடு அணிந்துரை வழங்கிய சிவத்திரு நா. முத்தையா அவர்கட்கு மனங்கனிந்த பாராட்டும்,

திரு. K. S. இராமசாமி அவர்களது பொறுப்புரைக்கு வாழ்த்தும் தெரிவித்துக்கொள்வதோடு,

இருளிலிருந்து என்னை ஒளிக்குக் கொண்டு வந்த பல குருமகான்களின் திருப்பாதங்களைப்பணிந்து, அம்மகான்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக அர்ப்பணிக்கின்றேன்.

என்றும் எல்லோருடைய நலம் நாடும்,

—ஸ்ரீ சாயி மாதா
சிவ. பிருந்தாதேவி

புதுக்கோட்டை—1.
தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ் ராஜ காசார்யவரி ஸாயி விபூதி பாபா அவர்கள் சென்னை முகாமிலிருந்து, ஸ்ரீ ஸாயி பாபாவை ஸ்மரணம் செய்து ஆக்ஞாபித்தபடி அனுப்பும் சுப லிகிதம்.

புதுக்கோட்டை தபஸ்வி ஸ்ரீ ஸாயி மாதா சிவ. பிருந்தாதேவி அவர்களுக்கு இஷ்டகாம்ய அர்த்த சர்வ அபீஷ்ட சகல சௌபாக்ய சித்தி ரஸ்து.

துறவறம் பூண்டும் இறைவன் பணிக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இடைவிடாது சமய, அறப்பிரசாரங்களை செய்து, பெரியோர்கள் வகுத்த வழி முறைகளை அநுசரித்து எளிய முறையில் சர்வ ஜனங்களும் உணர்ந்து, சத் கதி பெற செய்துவரும் தங்கள் பெரு முயற்சிகளுக்கு இறைவன் எக்காலத்தும் துணைநின்று வெற்றியை அருளட்டும்.

பல சமய நூல்களில் அடங்கிய கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து திரட்டி, அவைகளின் சாரத்தை, தமிழில் ஒரு புத்தக வடிவில் கொணர்ந்து அதை ஸ்ரீலங்கா நாவலப்பிட்டி, ஆத்மஜோதி நிலையத்தினரால், பிரசுரிக்கப்படுமென்பதைக் கேட்டு மகிழ்ச்சி. தங்களின் சமயப் பிரச்சார சேவைக்கும் ஆர்வத்திற்கும் இது ஒரு அத்தாட்சியாக அமையும்.

காலந்தொட்டு சமய நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு தலைப்புகள் பல்வேறு பாஷைகள் ஆயினும் தற்போது தங்கள் நூலுக்கு தமிழில் தலைப்பு "மனிதன் எங்கேயோ போகிறுன்?" என்பது. ஆழ்ந்த தெளிந்த சிந்தனையாளர்களையும் பெரு வியப்பிலாழ்த்திவிட்டது. சர்வ அங்கங்களுக்கும் தலையே பிரதானம். அதேவிதம் நூலுக்கு தலைப்பு சிறப்பாக அமைந்துள்ளது. இந்தத் தலைப்பே பல சிந்தனைகளையும் கற்பனைகளையும் உள்ளடக்கி நூலின் பொருளையும் தரத்தையும் வெகுவாய் உயர்த்திவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே! என்ற ஒரு சப்தத்தில் எத்தனைவித எண்ணங்கள் தோன்றுகின்றன. மனிதனின் நிச்சயமற்றநிலை—குறிக்கோளற்ற வாழ்க்கை — மனக்குழப்பம் — சந்தேகம் —இவைகளைச் சுட்டிக்காண்பிக்கிறது.

நூலில் அடக்கம் பிறரின் பல கருத்துக்களுக்கு இடமுண்டு. ஆனால் தாங்களே உருக்கொடுத்திருக்கும் தலைப்பு ஒன்றே மாபெரும் காவியமாக பரிமளிக்கிறது. தங்களின் சிந்தனை விசேஷத்தை பிரதிபலிக்கும் தலைப்பில் மனிதனிடம் காட்டும் பரிவு உணர்ச்சி, ஐயோ திசைமாறி போகிறானே என்ற பச்சாத்தாபம், அவன் நல்வழியில் திரும்பானா என்கிற ஏக்கம் ஒவ்வொருவரையும் நின்று சிந்திக்கவைக்கும் யுக்தி எல்லாமே உணரமுடிகிறது. எத்தனை நாட்கள் சிந்தித்துச் சிந்தித்து இத்தகைய பொருத்தமான தலைப்பை உருவாக்க முடிந்ததோ! உள்ளத்தில் கற்பனைகளுக்கு சாதகமாயும் உண்மையைத்தேடி அலையும் அப்பாவி மனிதனுக்கு இந்தக் கிரந்தம் ஒரு கலங்கரை விளக்காய் விளங்கட்டும்.

மனிதன் பலவித பிரச்சாரங்களை ரசித்திருக்கிறான். ஒவ்வொரு பிரச்சாரமும் ஏதாவது ஒருவகையில் மனிதனின் பொது நன்மையைக் குறியாகக் கொண்டிருக்கும். விவசாய இலாகா பிரச்சாரம், சுகாதார இலாகா பிரச்சாரம், பொதுவுடமை அரசியல் பிரச்சாரம், ஜனநாயக பிரச்சாரம் முதலிய எண்ணிறந்த பிரச்சாரங்கள் நடந்து வருகின்றன. இவைகள் ஒரு வரையறைக்குட்பட்டசிலபயன்களைக்கொடுக்கலாம். சாசுவதமான உண்மையைத் தெரிந்து கொள்ளவோ, மனிதன் தன் தளைகளை உடைத்து எறிந்து சுதந்திரனாவதற்கோ இப்பிரச்சாரங்கள் பயன்படா.

ஆயிரத்தில் ஒருவனுக்காவது சத்யமானதும் சாசுவதமானதும் பூர்ணத்துவம் ஆனதுமான மகத்தான பேருண்மையை உணர, நம் நாட்டில் சமயப் பிரச்சாரங்கள் இதுவரையில் இடைவிடாமல் நடந்து வருவதால்தான் மனிதன் தன்போக்கை எப்போதாகிலும் ஒரு சமயம் உணர்ந்து, சிந்தனை வசமாகி சுதந்திரனாக மாறக்கூடிய வாய்ப்பை இன்னமும் இழக்காமலிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தாரையும், தாயுமானவரையும், சங்கரரையும், சுந்தரரையும், திருநாவுக்கரசரையும், மாணிக்கவாசகரையும், ஞானசம்பந்தரையும் மறந்து அமெரிக்க தேசத்தவர் போலவோ, ருஷ்யர்கள்போலவோ நாமும் மாறிவிடுவதில் என்ன பயன் இருக்க முடியும்.

"மனிதன் எங்கே போகிறுன்?" அவனைத் தடுத்து நிறுத்தி எங்கு தான் போகவேண்டும். அதற்கு எதைத்தான் செய்ய வேண்டும். ஏன் செய்ய வேண்டும் என்கிற வினுத் தொடர்களுக்கு விடைகளைப் புகுத்தி மனிதனும் ஒழுக்கத்தால் தேவனுகலாம், என்கிற பேருண்மையைப் பரவலாகப் பிரச்சாரம் செய்வது அத்தியாவசியம்.

இந்த முக்கிய சேவையைச் செய்துவரும் ஸ்ரீ ஸாயி மாதாவுக்கு நோய் நொடியற்ற வாழ்வும் நுவலரும் கீர்த்தியும், சிவன் திகழ் ஞானமும் சித்தியும் பெற்று வாழ்க. பல தேசங்களுக்கும் சென்று மகிழ்ந்து அருள் துணையால் வெற்றிக் கொடி நாட்டிவர சர்வ வல்லமையுள்ள ஸ்ரீ ஸாயி பாபாவை ஸ்மரணம் செய்து அளிக்கும் நல்லாசிகள் பல்லாயிரம்.

இப்படிக்கு

—ஸ்ரீ ஸாயி விபூதி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

ஸ்ரீ ஸாயி விபூதி பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதன் எங்கேயோ போகிறுன்?"

(தவத்திரு. ஸ்ரீ சாயிமாதா சிவ. பிருந்தாதேவி)

"மண்கண்ட வெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவில் பணியச்செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகலகலாவல்லியே" [உங்போல்

தக்கது இன்னது, தகாதது இன்னதென்று ஒக்க உணர்ந்து பார்க்கும் மனிதன்; அவன் நீந்தக் கற்றுன், நீள் தொலை வானில் பறக்கக்கற்றுன்; ஏனைய எல்லாவற்றையும் புரிந்து தெரிந்து கொண்ட மனிதன், வாழ்க்கை இன்னதென்றும், இப்பிடிப்பட்டதுதான் நல்வாழ்வு என்றும், எப்படியோ வாழாமல், இந்தப்படியான பண்பில்தான் வாழ வேண்டு மென்றும் எண்ணுவதும், எண்ணியபடியே நடப்பதும் பண் பாகும்.

மனிதனுல், மனித சக்தியால், இயக்க இயலாதது எது வுமே இல்லை. ஒரே நினைப்பால் ஆமை தனது முட்டைகளை ஆமைக் குஞ்சுகளாக மாற்றிவிடுகின்றது. ஒரே நினைப்பால் அதன் சக்தியின் எழுச்சியால் கண்களுக்கு வல்லமை பெற்று, மீன் தனது முட்டைகளை யெல்லாம், மீன் குஞ்சுக ளாக மாற்றிவிடுகின்றது. முட்டைகளைக் கோழி தொட்டுக் கொண்டே இருத்தலால் காலக்கெடுவில் முட்டைகள், கோழிக் குஞ்சுகளாக உருப்பெறுகின்றன. சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தத்தினையும் இவற்றிற்கு மேலாம், பகுத்தறியும் பான்மை யும், அடையப்பெற்ற மனிதன், மனம் படைத்த மனிதன், சிந்திக்கவும், வந்திக்கவும், வாழ்த்தவும், நிந்திக்கவும் தெரிந்த மனிதன், புந்திக்கிலேசமாகிய மனத் தொந்தரவையும், காயக் கிலேசமாகிய உடல் பிணியையும், மாற்றிக்கொள்ள வகை அறியாது உலகச்சுழலில்—சமுதாய நிர்ப்பந்தத்தில் அகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுக்கொண்டு, தன்னையும் அறியாது, தன் தொல்லுயிரையும் புரியாது, உயிரைத் தந்த உத்தமனையும் உணராது, ஏங்கித்தவிக்கிறன்! இது முறையோ? இது தகுமோ? இது நீதமோ?என்று எண்ணிப் பார்த்தார்கள்—மானிடத்தின் பேரிலே மாக் கருணை கொண்ட ஞானியர்கள். புத்தருக்கு எந்தக் கருணை பிறந்ததோ, ஏசுவினுடைய இதயத்திலே எந்த அன்பு குடிகொண்டிருந்ததோ, நபிகள் நாயகத்தினிடத்திலே எந்த ஒற்றுமை உலவியதோ அதனைப் போல பன்னூறு மடங்கு அன்பிலே — கருணையிலே — ஜீவகாருண்யச் சிந்தையிலே தோய்ந்து — ஆழ்ந்து — அனுபவித்து அனுபூதியாகப்பெற்று, அதன் அடிப்படையிலே மகா ஞானியாகிய தாயுமானப் பெருமான் சொல்லுகிறர்.

"ஆசைக்கோர் அளவில்லை" பாபத்திற்கே காரணம் ஆசைதான் என்கிறர் புத்தர்! "பற்றற்றுப் பலனை எதிர்பாராது கர்மாவைச் செய்" எனக் கீதை நமக்குப் பாதை காட்டுகிறது.

"ஆசையிற் கைகலந்து சுமா சுமா
பவசாசகரத்தில் அழுந்தி எழா எழா துளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகா—என
அருள்வராதோ"

என அருணகிரிநாதரும்,

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனேடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தமாமே"

எனத்திருமூலரும்,

"ஆசை யறுய், பாசம் விடாய் ஆன சிவ
பூசை பண்ணுய் நேசமுடன் ஐந்தெழுத்தை
நீ நினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்?"

என சிவபோகசார வெண்பாவும் சொல்லக் கேட்கிறேம்.

ஆசைக்கு ஏது அளவு? ஏது எல்லை? முடிவுதான் எங்கே? இராமகிருஷ்ணபரமஹம்சரிடம் ஒரு பக்தன் சென்று, கடவுளுக்கும் எனக்கும், எவ்வளவு தூரம் என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பரமஹம்சர் சொன்னராம் — "ஒரு சங்கிலியின் கோர்வையில், இடையில் உள்ள பகுதிகள் அனைத்தையும் எடுத்துவிட்டால், அடியும் நுனியும் மட்டுமே மிஞ்சி இடைவெளி இல்லாது நெருங்கிவிடும். உனக்குள்ள ஆசாபாசங்கள், மோக தாகங்கள் இல்லாது ஒழிந்துவிட்டால், கடவுளுக்கும் உனக்கும் இடையே தூரமேயில்லை" என்று பதில் சொன்னராம். இதனைத்தான் மணிவாசகப் பெருந்தகை,

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே"

என வியந்து பாடியருளினர்.

சித்தமலம், அறவேண்டுமானல், இதயம் சுத்தமாக இருக்க வேண்டும். சித்தமலம் என்றலே சிலருக்குப் புரிவதில்லை. அதற்கு மேலே இதயம் சுத்தமாக வேண்டுமென்றல் அதைச் சுத்தம் செய்துகொள்ள யாரிடம் போவது? என்ன கேட்பது? யார் தருவது? எப்படிப் பெறுவது? என்பது புதிராகத்தானே இருக்கின்றது!

ஆணவம், மாயை, கன்மம் என்று சொல்லப்படும் மூன்றும்தான் மலங்கள். மனிதர்களாகிய ஒவ்வொருவரிடத்திலும் "நான்" என்ற ஆணவம் இருக்கின்றது. "செய்தது இதையேதான் செய்துகொண்டிருப்பேன்" என்று சொல்லக்கூடிய அளவு, புரியாத மாயையொன்று திரையிட்டுக்கொண்டிருக்கிறது. யா — எது? மா — இல்லையோ அதுதான் மாயை ஆகின்றது. ஆக, இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி, மனிதன் ஏமாறுகிறனே, அதுதான் மாயை. ஏமாறினல்கூடப் பரவாயில்லை. இல்லாத ஒன்றின்மேல் பற்று வைத்து, அதை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருப்பதாக எண்ணுகிறனே அதுதான் அதனைவிட அவலநிலை.

"கன்மம்", அவரவர் வினைதனிலே அவரவர் வருவார். வினையைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. தன்வினை தன்னையே சுடும். இதெல்லாம் நமக்கு. ஆனல் பரத்திற்கோ பற்றில்லை— பாசம் இல்லை. எனவே "வினையில் நீங்கி விளங்கிய முதல்வன்" என ஞானியர் கூறுமாப்போல, அவன் ஒருவனைத் தவிர மற்றும் உள்ள அனைவருக்கும் "வினை" இருக்கின்றது. அது விட்டுப் போகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடையேனிருவினை நோய் மல மாண்டிட தீண்டிய ஒண்
சுகமோகினி வள்ளி நாயகி பாங்கென நாம் பகர்மின்
கலை நூலிடை முருகா, அழலோங்கிய ஓங்கலின் ஒண்
பெருமாளே"

எனத் திருப்புகழிலும் சொல்லப் பெறுவதால், வினை எல்லோரையும் பற்றி நிற்கக் கூடியது எனத் தெரியும்.

முற்பிறவியில் செய்த நன்மை தீமை, தொடர்ந்து பற்றி எடுத்த பிறவியில் தொடுத்து வந்து, அடுத்து நின்று, கெடுப்பதோ விடுப்பதோ செய்கின்றது. இதுதான் கன்மம் (கர்மா). இந்த மூன்றையும் ஒழித்துவிட முடியாது; அழித்துவிட முடியாது: அகற்றி விடவும் முடியாது. இல்லாததாகவும் ஆக்கி விட முடியாது. பின் விமோசனத்திற்கு வழிதான் என்ன? முடியாது என்று சொல்லிவிட்டால் கதை முடிந்து விடுமா? வினா எழுப்பினால், விடையும் இருந்து ஆக வேண்டுமே! சிந்தித்துப் பெரியவர்கள், இறைவனை வந்தித்த நிலையிலே வகை கண்டு நமக்கு வக்கணையாகச் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

மாயை அகன்று — அகன்று என்றுதான் சொல்லப்பட்டது. இருள் அகன்றது என்று சொன்னால் 'இல்லவே இல்லை' என்பது பொருள் அல்ல. ஒதுங்கி உள்ளது என்பதுதான் பொருள். அகன்ற இருள் மறுபடியும் பற்றலாம். தொடர்ந்து மாயை பற்றி வரச் செய்யாது பக்குவப்படுத்திக்கொள்வது நம் முயற்சி — தெய்வத்தின் கருணை. ஆக, மாயை அகன்று, கன்மம் தறைந்து, ஆணவம் ஒடுக்கப்பெற்றால், இந்த மலங்களுக்கு பக்குவ நிலை என்று சொல்லுகின்ற ஒரு தக்க பரிபாகம் (மலபரிபாகம்) வருகிறது. மலங்களுக்குப் பரிபாகம் வந்தவுடன், இன்பத்துள் இன்பமும், துன்பத்துள் துன்பமும் காணாத நிலை — கடந்த மனோபாவம் ஏற்படுகிறது. இந்த உயர்ந்த கருத்தை வள்ளுவரும்,

"இன்பத்துள் இன்பம் விழையாதான்
துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்"

எனச் சொன்னார். இந்நிலையைத்தான் சைவசித்தாந்த சாத்திரம், "இருவினை ஒப்பு" என்று சொல்லுகின்றது. மலபரிபாகம் வந்த மனிதனுக்கு, 'இருவினை ஒப்பு' (சமநிலை) எளிதில் வந்து விடும். இன்ப துன்பத்தை, வெயிலை, மழையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நூலகம் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

சினத்தைக் குணத்தை, புகழை, இகழை, செல்வத்தை, ஏழ்மையை, ஒன்ருகக் கருதும் உயர் மனப்பான்மையாகிய 'மல பரிபாகம்' ஏற்பட்டு, 'இருவினை ஒப்பு' வந்தபின், அருட்சக்தி பொத்தென்று அவன் பெயரில் பெய்யப் பெறுகிறதாம்.

இதனையே சித்தாந்த பரிபாஷையிலே, 'சத்திநிபாதம்' (அருட்சக்தி பொத்தென்று விழுதல்) எனச் சொல்லுவர் மேலோராகிய நூலோர்! இவ்வளவு உயரலாமே—மனிதன் நினைத்தால்!—மனிதன் செய்ய வேண்டியது ஒன்றுதான். ஆசைக்கு ஒரு வேலியை வைக்க வேண்டும். தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்தில், மூங்கில் காடுகள் அதிகம். அந்த மூங்கில் முள்களைக் கொண்டு, மிகப்பெரிய இடங்களுக்குக் கூட நெருக்கமான வேலி வைத்து விடுவார்கள். அந்தச் சிறிய முள்வேலிக்குள்ளே ஆடு போகாது, மாடு போகாது, பன்றி போகாது, கோழிக்குஞ்சுகூட நுழைய முடியாது. ஆனுல், எத்தனை வேலி போடப்பட்டிருந்தாலும், எத்தனை பூட்டுகள் போடப்பட்டிருந்தாலும் இரும்புக்கதவுகளுக்கு அப்பால்கூட இந்த மனித இதயம் சென்று திரும்பிவிடுகின்றது. புகைகூடப் புக முடியாத இடத்தில், மனித மனம் புகுந்து விளையாடித் திரும்புகின்றது.

மனத்தின் வழி நாம் நடப்பதா? நம் வழி மனம் நடப்பதா?—புத்தியுள்ளவர்கள், நம்வழிதான் மனம் நடக்க வேண்டும் என்பதை ஏற்பார்கள். மனம் எதையும் நினைக்கும். மனிதன் அவ்வழி யெல்லாம் நடக்க முடியுமா? கார்மேல் நாம் ஏறலாம். நம்மேல் கார் ஏறினுல் நம்கதி என்ன? கடல் மேல் கப்பல் போகலாம். கப்பலுக்குள் கடல் வந்தால் என்ன ஆவது?

"தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே ஒரு
தந்திரம் நீ சொல்ல வேணும் வெண்ணிலாவே"

என்ருர் வள்ளலார் பெருமான்.

தன்னையறிய வேண்டுமானுல், மனம் அடங்கக் கற்க வேண்டும். "மனத்துக் கண்மாசிலன்" ஆதல் வேண்டும்.

"மனமன மெங்குண்டு வாயுவும் அங்குண்டு
மனமன மெங்கில்லை வாயுவும் அங்கில்லை
மனமனத் துள்ளே மகிழ்ந்திருப் போர்க்கு
மனமனத் துள்ளே மனேலயமாமே"

என்பது ஞானியர் வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனமனத்துள்ளே' என்கின்ற போது, 'உள்மனம்,' 'புற மனம்' என்று இரண்டு உண்டு. புறமனத்தின் தன்மையை எல்லோரும் எளிதில் உணரலாம். உள்மனத்தின் தன்மையே அளப்பரிது; வியப்புக்குரியது.

இவைகள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முன்னே விட்டோமே, யாரிடம் போவது? என்ன கேட்பது? எதைக் கேட்பது? என்று கேட்டோமே அதைப்பற்றிச் சற்று சிந் திப்போம். அப்படிச் சிந்தித்தால்தான் அவிழ முடியாத முடிச்சை அவிழ்க்க முடியும்.

நம் எல்லோரிடத்திலும் அன்பு இருக்கின்றது. அதற்குக் கொஞ்சமும் பஞ்சமில்லை. அதுமட்டும் போதுமா? அதனைக் கொண்டு, உலகத்தை உய்வித்துவிட முடியுமா? அன்பு, எல் லாம் செய்ய வல்லதுதான். அன்பும் சிவமும் ஒன்றுதான். ஆண்டவன், அன்பெனும் பிடியில் அகப்படும் மலைதான். பெருங்கருணைப் பேராருகிய ஆண்டவன் இடத்தில் உள்ள அன்பு, அனைத்தையும் அரவணைத்துப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அனுக்கிரகம் செய்ய வல்லது. நம்மிடம் உள்ள அன்போ நம்மைச் சேர்ந்தவர்களிடம், நம்மைச் சார்ந்தவர்களிடம் மட்டுமே செலுத்தக்கூடிய அளவிற்குத் தகுதியுடையது. இதனைக்கொண்டு உலகத்தை உய்விக்கவோ ஜீவன்கள் அனைத்திடமும் கருணைகாட்டவோ முடியாது. இந்த அன்பு, ஒரு எல்லைக்கு உட்பட்டது. வரம்புக்கு அடங் கியது. இவற்றிற்கு மேலாக அருள் நோக்கு எவரிடம் உண் டோ, தன்னிடத்தில் உள்ள அருளால், பார்த்த மாத்திரத் தில் அனுக்கிரஹம் செய்ய முடிகின்றதோ, அவர்களிடத்தில் நாம் சென்றால், அவர்கள் நம்மை ஆற்றுப்படுத்த முடியும்— வழிகாட்ட முடியும்.

அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? எப்படி அவர்களை அறி வது? காய்ந்த ஓலை சலசலக்கும். பச்சை ஓலை படபடக்காது. அப்படிப்பட்ட ஞானியர்கள், விளம்பரத்தை விரும்பமாட் டார்கள். வேக தாகத்தை நாடமாட்டார்கள். பசியையும் தாகத்தையும் கூடப் பொருள்படுத்த மாட்டார்கள். பசிக்குப் புசிக்க வேண்டும் என்ற எண்ணம் கூட இருக்காது. அவர் களுடைய செயலும், சிந்தையும் கூட உன்மத்தமானதோ, உணர்ச்சி வசப்பட்டதோ என்று கூட மற்றவர்களுக்குத் தோ ன்றும். மற்றவர்களது காட்சிக்கு அவர்கள், ஒன்றுக்கும் உத வாத பலஹீனப்பட்டவர்களாகக் கூடக் காட்சி யளிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தரோ, பேயரோ, என்று எண்ணுகிறவகையில் அவர்களது போக்கும், வாக்கும், நோக்கும் இருக்கும். எந்தத் தாக்குதல்களுக்கும் செவிசாய்க்கமாட்டார்கள். எதையும் தாக்குப்பிடிக்கும்தன்மை அவர்களிடம் உண்டு என்று உலகம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும், போற்றினாலும் தூற்றினாலும், ஏற்றினாலும், இகழ்ந்தாலும் அவர் அவராகவேதான் இருப்பார். குழந்தையுள்ளம் அவரிடத்தில் குடிகொண்டிருக்கும்.

பேய்போல் சுற்றுவார்கள்; சுற்றினால் மட்டும் போதுமா? சும்மாவும் இருக்கத்தெரிய வேண்டாமா? பிணமோ என்று எண்ணுகிற வகையில் செயலற்றுச் சிந்தையற்று உலகோடு உரையும் அற்று, அறிவற்று, அறியாமையும் அற்றுச் சும்மா இருக்கும் சுகத்தையும் அறிந்து, 'அம்-மா' பொருள் (பெரிய பொருள்) விளங்கிய நிலையிலே, பிணம் போலவும் கிடப்பார்கள்.

இன்ன இடத்தில் சாப்பிடவேண்டும்; இப்படித்தான் சாப்பிடவேண்டும் என்கிற சம்பிரதாயங்களும் அற்றவர்களாக அவர்கள் நிற்பார்கள். நாயோடு போட்டி போட்டுக்கொண்டு, எச்சற்கலையில் இருக்கின்ற பொருளை எடுத்து உண்ணுகின்ற அதிவர்ணாஸ்ரம ஞானியர்களும் உண்டு. சுகபோகம் என்று சொல்லி, ஒரிடத்தில் தங்கிவிடாது நரிபோல உழன்று சுற்றுவார்கள். நன்மங்கையர்களைக் கண்டால், தனை ஈன்றெடுத்த தாயாகக் கருதுவார்கள். தன்னைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லுவதுபோல, தன்னைச் சார்ந்தவர்களுக்குச் சொல்லுவதுபோல சோர்ந்த உள்ளங்கள் அத்தனைக்கும், அருள்மொழி வழங்குவார்கள். குழந்தை மனம் படைத்த அந்த ஞானியர்கள்தான், உணர்ந்த சத்தியப் பொருளை உண்மை ஞானியர் என்று, சுத்த இதயம் படைத்த சித்தர் ஒருவர் சொல்லி வைத்துள்ளார்.

"பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து இட்டபிச்சை எல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன் மங்கையரைத்
தாய்போல் கருதி, தமர்போல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லிச்
சேய்போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் பெற்றவரே"

உபநிஷதப் பெரியவர், இதே உண்மையை நமக்கு உணர்த்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

("யதோ வாசோ நிவர்த்தந்தே
அப்ராப்ய மனஸா ஸ:
ஆனந்தம் பிரஹ்மணோ வித்வான்
ந விபாதி கதாஸ்ச நேதி")

"எதனின்றும் வாக்குகள், மனத்தை எட்டாமல் திரும்பி விடுகின்றனவோ, அப்படிப்பட்ட பிரும்மத்தினுடைய ஆனந்த ஸ்வரூபத்தை அறிந்தவன் எதற்கும் பயப்படுவதில்லை."

பிரும்மத்தினுடைய ஆனந்த ஸ்வரூபத்தை அறிந்தவன் உண்மை ஞானி. அவனை, நாம் நாடிப்போவது ஒரு முறை. அவன், நம்மைத் தேடிவருவது ஒருவகை. ஆண்டவனுடைய திருவருளை, நேரடியாக நாம் பெறமுடியாது. "குரு அருள்" மூலமாகத்தான் "திருவருள்" பெறமுடியும். மேற்கண்ட தன்மைகளையுடைய குருநாதரை, அவரை நம்மை நோக்கி இறங்க விடாமல், நாம் அவரை நோக்கி ஏறப்பார்க்க வேண்டும். தக்க ஞானி யார் என்பதைப் புரிந்துகொண்டபின் அவரைத் தேடிச் செல்வதில் சிரமம் ஒன்றும் இருக்காது. குரு சிஷ்ய "பாவம்" (அனுபவிப்பு) வேண்டும். இன்றைய நிலையிலே அது மகா பாபமாக இருக்கின்றது.

மாலறநேயம் மலிந்தவர் வேடத்தையும், ஆலயத்தையும் "அரன்" எனத் தொழுதவர்கள்—சிவஞான யோகிகள். அப்படிப்பட்ட குருநாதரைச் சீடர்கள் அண்டி நின்ற மாத்திரத்தில் சீடர்களது பக்குவ நிலைக்கு ஏற்ப பாங்காக உணர்த்துகிறார்.

நமக்கு, நம்மைப்பற்றியும் தெரியாது. நமது தொல்லுயிரைப்பற்றியும் புரியாது. நமக்கு, நல்ல உயிரைத் தந்த நாதனையும் விளங்காது. இப்படிப்பட்ட அறியாமையில் மூழ்கிக்கிடக்கின்ற, நம்பால் இரக்கம் மிகக்கொண்டு, இறைவன், "எளிவந்த வான் கருணையினால்" தான் இரங்கியும் இறங்கியும் வருகிறான். அந்த மூர்த்தம்தான் குரு மூர்த்தம். அதனை விளக்க, சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம், ஒரு பெரிய தான விஷயத்தை மிக அரிதாக நமக்கு உணர்த்துகின்றது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கு' என்ருல் இருள். 'ரு' என்ருல் நீக்குபவர். மனிதக் கூட்டத்தில், மண்டிக்கிடக்கும் மாய இருளை அகற்றி ஒளியாகிய அருளை, அள்ளி வழங்குபவர் குருநாதரென உபநிஷதம் கூறுகின்றது.

"அஸதோ மா சத் கமய;
தமஸோ மா ஜோதிர் கமய
ம்ருத்யோ மா அம்ருதம் கமய;
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:"

மாயையற்ற மெய்வழியில், — இருளகன்ற ஒளிமிகுந்த பாதையில், மரணமற்ற அமரத்வ நிலையடைய எமக்கு, வழி காட்டுவாய் ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிவஞானபோதம் 8-ம் சூத்திரத்திற்கு விளக்க உரையாக சைவசித்தாந்த சாத்திரத்தில் சாலச் சிறந்ததெனச் சான்ருேர்களால் துதிக்கப்பெற்ற "சிவஞான சித்தியார்", அரும் பொருளை நமக்கு மிக எளிதாக உணர்த்துகின்றது.

ஒரு மன்னன், அவனுக்கொரு மகன். ஐந்து வயதுப் பாலகன்; அறியாப் பருவம். இப்படிப்பட்ட மகனையும் அழைத்துக்கொண்டு, அந்த மன்னன் காட்டிற்கு வேட்டையாடச் சென்ருன். வேட்டையிலே நாட்டம் சென்றது. தன்னையும் சுற்றியிருந்தவைகளையும் மறந்தநிலை வந்தது. வேட்டை முடிந்து அரண்மனைக்குத் திரும்ப, நாட்டம் கொண்ட போது, "மகன் எங்கே?" என்று மனத்திலே எண்ணினுன். மகனைக் காணும். தானும் தன்னுடன் வந்த ஆட்களுமாகக் கானகம் முழுதும் தேடியும் மைந்தன் கிடைக்கவில்லை. மனம் சோர்ந்தான். மாற்றம் அறியா வகையில் அரண்மனை சேர்ந்தான். வேட்டையாடச் சென்றதனுல் தானே மைந்தனை இழந்தோம் என்ற எண்ணத்தில் வைராக்யம் பிறந்தது. மூன்று வகையான வைராக்யங்கள் நாட்டிலே உண்டு. ஒன்று பிரசவ வேதனைப்படும்போது, இனிப் பிள்ளையே வேண்டாமெனத் தாய் எண்ணுவாள்.

அடுத்த ஆண்டிலே மறு குழந்தை பிறக்கும்போதும், இதே எண்ணம், வைராக்யமாக வருவதும் உண்டு; அதை மறப்பதும் உண்டு. இது பிரசவ வைராக்யம். அடுத்துப் புராண வைராக்யம் என்று ஒன்றுண்டு. இதிகாச புராணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உபன்யாசகர் பேருரையாக நிகழ்த்துகின்ற பொழுது-காரணகாரியங்களோடு, உபகதைகளோடு பேசுகின்ற வேளையில், கேட்கின்றவர்களுடைய உள்ளங்கள் நெகிழ்ந்து, உணர்வுகள் உட்கலந்து, 'ஐயா' அல்லது 'அம்மா' சொல்லுவதை அப்படியே செயல்முறைக்கு கொண்டுவர வேண்டும் என்று சிந்திப்பாரும் உண்டு. இருப்பிடம் வந்ததும் அந்த எண்ணங்கள் மறப்பதும் உண்டு. இல்லத்தரசி 'சொற்பொழிவாளர் சொன்னபடி நடக்க வேண்டும் என்றீர்களே – அது என்னவாயிற்று' என்று கேட்டால், 'அது எனக்கும் உனக்கும் இல்லை; ஊருக்குத்தான்' என்று உரைப்பாரும் உளர்.

மூன்றாவதாக, "மயான வைராக்யம்". ஒரு பெரியவர் இருந்தார்; திடீரென இறந்தார். அடக்கம் செய்யப் போனவர்கள் — "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்றும், "முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பல் ஆவர்" என்றும் எண்ணிப் பார்த்து "இது என்ன வாழ்க்கை? நாமும் ஒரு நாள் இப்படித்தானே ஆவோம்" என்று ஒரு விரக்தி மனப்பான்மையுடன், கண்ணீர் விடா விட்டாலும் கசிவது உண்டு. குளித்து முழுகி வீட்டிற்கு வந்ததும் மலவாசனை விடாது என்பது போல, பழைய பற்றுக்கள்; அதிகப்படியான அவாக்கள் வந்தே தீரும். இதற்குப் பெயர்தான் மயான வைராக்யம்.

இந்த வைராக்யங்கள் போல இந்த மன்னனும் காட்டிற்கு வேட்டையாடச் செல்லக்கூடாது. சென்றதால்தானே மைந்தனை யிழந்தோம் என்கிற வைராக்ய சித்தத்தில் சில பல ஆண்டுகள் கானகம் பக்கமே எட்டிப் பார்க்காமல் இருந்தான். 10, 12 ஆண்டுகள் கடந்தன — வைராக்யத்தின் பிடிப்புத் தளர்ந்தது. வேட்டையில் ஒருநாள் நாட்டம் எழுந்தது. தன்னுடைய பரிவாரங்களுடன் கானகம் நோக்கிப் புறப்பட்டான்.

காட்டின் தலைப்பிலே அழகும், கம்பீரமும் உடைய ஒரு இளம் வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும், இம் மன்னனுக்கு ஒரு சபலம் ஏற்பட்டது. "தன் மைந்தனும் இருந்திருந்தால் இப்படித்தானே வளர்ந்திருப்பான்" என்று எண்ணினான். அந்த எண்ணத்தின் அடிப்படையில் ஆசை உந்த, பாசத்துடன் அவனைப் பரிந்து நோக்கினான். தன் மைந்தனைப் போலத் தெரிந்தது. இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் சற்று உன்னிப்பாகவே கூர்ந்து பார்த்தான். காணுமல் சென்றுவிட்ட தன் மகன் "இவன்தான்" என்ற முடிந்த முடிவிற்கு வந்தான். அவனை அருகில் அழைத்தான்.

"அப்பனே! நீ யார்? உன் தந்தை யார்? உன் இருப்பிடம் எது?" என்றெல்லாம் கனிவுடன் விசாரித்தான். அந்த இளம் வாலிபன், "நான் யார் என்று எனக்குத் தெரியாது; பல ஆண்டுகளுக்கு முன்னே என்னையறியாது எங்கோ கானகத்தின் மத்தியில் அழுதுகொண்டிருந்த என்னை, ஒரு வேடர் குலத் தலைவர் அழைத்துச்சென்று வளர்த்து வருகிருர். அவர், எனக்கு வேண்டியதெல்லாம் செய்வதோடு, தனது குலத் தொழிலாகிய அம்பு எய்தல், வில்வித்தை முதலியவற்றையும் கற்றுத் தந்துள்ளார். பக்கத்திலேதான் அவரது இருப்பிடமும் இருக்கிறது" என்று, எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே மூச்சாக விடைபகர்ந்தான். இவ்விடையைக் கேட்ட மன்னன் மன மகிழ்ச்சியுடன், "தன் மகன் இவன்தான்" என்ற தீர்மானத்தோடு, அவ்விளைஞன் காட்டிய வேடர் குலத் தலைவன் வீட்டிற்குச் சென்ருன்.

"பையன் யார்? எங்கு கிடைத்தான்? எப்போது கிடைத்தான்? கிடைத்தபோது அணிந்திருந்தஉடையும்அலங்காரமும் யாவை?" என்பதெல்லாம் கேட்டறிந்து, நாட்டின் மன்னன் 'தான்' என்பதையும் உணர்த்தி, "இளைஞன் தன் மகன்" என்பதையும் புரியச்செய்து, வேடர் குலத்தலைவனிடமிருந்து, தன் மகனைப் பிரித்து, அரண்மனைக்கு அழைத்து வந்து, வேடர்குல ஆடை — அணிகளை அகற்றி, இளவரசனுக்குரிய அணி ஆடைகளை அளித்துப் பெருமையோடு இளவரசுப் பட்டம் நல்கித் தன்னுடைய சிங்காதனத்தின் அருகிலேயே அமர்த்திக் கொண்டான்.

அதுபோல —

ஐம்புல வேடர்களின் சுழலுக்குள்ளே அகப்பட்டுத் தவிக்கும் இத்தொன்மையான நல்லுயிரை ஆண்டவன் அளித்த, தனு, கரண, புவன, போகங்களைச் சரியாக உணர்ந்து (தனு —உடம்பு. கரணம்—மனம், சித்தம், புத்தி, அகங்காரம். புவனம்—உலகம். போகம்—சுகங்கள்.) துய்த்தற் பொருட்டும், துய்த்தபின், நிலையான பெரும்பேறு அடைதல் வேண்டி, ஐந்து பொறிகளுக்கும் உட்பட்டுக் கெட்டுவிடாமல், அவற்றிலிருந்து பிரித்து, மட்டற்ற பேரின்பத்தை நல்கி, அவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாணுக்கித் தன்னுடைய சானித்யத்தால்—அருள்பாலிக்கின்ற இறைவன்—மனித உருத்தாங்கிய குருவாகவே எழுந்தருளி இந்த அருளியல் நாடகத்தை நடத்துகின்ருர்.

அந்த அருட்பாடலுக்கு வருவோம் —

"மன்னவன் தன்மகன் வேடரிடத்தே தங்கி வளர்ந்தவனை
அறியாது மயங்கி நிற்ப,
பின்னவனும் என்மகன்நீ என்றவரில் பிரித்துப் பெருமை
யோடும் தாமாக்கிப் பேணுமாபோல்
துன்னிய ஐம்புலவேடரின் சுழலிற்பட்டுத் துணைவனையும்
அறியாது துயருறும் தொல்லுயிரை
மன்னும் அருட் குருவாகி வந்து மலமகற்றித் தாமாக்கி
மலரடிக்கீழ் வைப்பன்."

மலமகற்றி, மலரடிக்கு ஆளாக்கக்கூடிய வல்லமை, குரு மகானுக்கு உண்டு என்பதை சிவஞானசித்தியார் இப்பாடலின் மூலம் நமக்கு நல்விளக்கம் தருவதோடு, நமது ஆன்மதாகம், ஜீவநாதம் இவைகளுக்கும் வழிகாண முடிகின்றது.

எல்லாம் தெரிந்துகொண்டோம்; அல்லது புரிந்துகொண்டோம் என்று எண்ண, நமக்கு என்ன சக்தியிருக்கின்றது?

'அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்ருன் தானே'

என்கிருர் காரைக்காலம்மையார்!

அவன் அறிந்தால் மட்டும் போதாது. அவன் நமக்கும் அறிவிக்க வேண்டும். அவன் அறிவித்தால்தான் நாம் அறிய முடியும்; என்பதையுணர்கின்றபோது, ஐயம், திரிபு, அறியாமை மூன்றும் நம்மிடமிருந்து அகலுகின்றன. ஐயம் என்கின்ற சந்தேகம் ஏற்பட்டால், ஒன்றை ஒன்ருக மாற்றிக் காண்கின்ற திரிந்த மனநிலை வருகின்றது. திரிபு வந்துவிட்டாலோ அங்கே அறியாமை அடிகோலுகின்றது.

ஐயத்தை அகற்றித் திரிபை விலக்கி, அறியாமைக்கு நிரந்தர விலக்குத் தரவேண்டும். இது எதனுல் ஏற்படும்? எங்கிருந்து வரும்? மனக்குரங்கு ஆட்டம்போடாமல்; குரங்கைப் பிடித்துக்கட்டமுயன்ருல் வைராக்ய சித்தம் வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அன்பர், "வைராக்ய சித்தம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், மேற்கண்ட மன்னன் மறுபடியும் கானகம் சென்றிருக்க முடியாதே, தன் மைந்தனையும் கண்டிருக்க முடியாதே! நீங்கள் வைராக்ய சித்தம் வேண்டும் என்கிறீர்களா? அல்லது, இடையிலே வைராக்யத்தை, சமயோசிதம் போலத் தளர்த்திவிடுவது நல்லது என்கிறீர்களா? என்கின்ற ஒரு கேள்வியைக் கேட்டார்!

இறைவன், அருட்கருணை புரிவதற்காக, நமக்காக – நம்மிடத்தில் உள்ள குற்றங்களைக் குறைகளைக் களைவதற்காகத் தன்னுடைய இருக்கைவிட்டு இறங்கி வருதல் ஒரு மரபு. நாம் அவனை நோக்கிச் செல்லுவது பக்திமார்க்கம். இறைவன், எப்படி நமக்காக இறங்கி வருகிறானோ அது போலத்தான், மேற்கண்ட மன்னனும், வைராக்கியச் சித்தத்துடன் இருந்திருந்தாலும், வினையின் வழிநின்று, இறைவன் கூட்டுவிக்கக் காலத்தை அனுசரித்த புத்தியும், புத்தியை அனுசரித்த காலமும் ஒன்று சேர்க்க ஒரு நாள் அவன் மறுபடியும் கானகம் நோக்கிச் செல்ல வைத்தது.

இவனாகவா கானகம் செல்லாது இருந்தான்? அல்லது இவனாகத்தான் 10, 12 ஆண்டுகளுக்குப் பின் கானகம் சென்றானா? இவன் சென்ற நேரத்தில்—அதே வேளையில், காட்டின் தலைப்பில் அந்த மைந்தன் எப்படி நிற்க முடிந்தது? இதெல்லாம் நம் செயலா? நம் செயல் என்று, சிந்திக்கத்தான் முடியுமா? ஒரு கதைபோலத் தெரிகின்றதே!

வியத்தகு செயல்கள், அளப்பரிய ஆற்றல் உடைய ஆண்டவன் அருளால் நிகழ்கின்ற நேரத்தில், இந்த மனத்தில் என்ன தோன்றுகின்றது? "ஆண்டவனே! இறைவனே! செம்பொருளே! பரம்பொருளே! என்செயலால் ஆவது இனி ஒன்றுமில்லை-தெய்வமே! நின்செயல் என்றுஉணரப்பட்டேன்! என்ற மனநிலைக்கல்லவா அது நம்மை அழைத்துச் செல்லுகின்றது! வைராக்யங்கள் மூன்றோடு, கானகம் செல்லாது மறந்திருந்து ஒருநாள் மறுபடியும் கானகம் சென்ற மன்னனை இணைத்துச் சொன்னது.

லௌகீகச் செயல்களுக்கும்—அதாவது உலகச் செயல்களுக்கும், பாரமார்த்திகமாகிய இறைச் செயல்கள், ஒரு பாலமாக அமைந்து பக்தி பரவசத்தை ஊட்டி, முக்திப் பேற்றிற்கு



KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி வகை செய்யும் என்ற உணர்விலேதான் உதாரணங்கள் குறிக்கப்பெற்றன என்பதை உணர்ந்தால், உண்மை விளங்கும்; நன்மை பெருகும்; நானிலம் சிறக்கும்.

வைராக்கிய சித்தத்தால் அரும் பெருஞ் செயல்களைச் சாதிக்கமுடியும். போதிக்கவும் முடியும். எதையும் வாதிக்கவும் இயலும். தூரக் காட்சியையும் தன் அருகிலே, தன் கண் முன்னே கொண்டுவந்து காணமுடியும். பின்னர், நடக்கப் போகின்ற நிகழ்ச்சிகளையெல்லாம் முன்னரே உணர்ந்து உரைக்கவும் முடியும். ஒருவனுடைய பேச்சு ஒலியிலிருந்து, அவனது மூச்சு எத்தனை நாளைக்கு இருக்கும் என்பதையும் எடுத்து இயம்பமுடியும். மற்றவர் மனநிலையைக் கருவி கொண்டு அளக்காமலே, கணக்கிட்டு விடவும் முடியும். இன்னும் எத்தனை எத்தனையோ வகையான அதிசய அற்புதங்களையெல்லாம் விஞ்ஞானத்திற்கு எட்டாத பல மர்மமான காரியங்களையும் நிகழ்த்தக்கூடும்.

மனிதன், தனக்குள்ள ஆற்றல்களை ஒருங்கிணைப்பதால், மதம் பிடித்த யானையை ஒரு சொல்லால் அடக்கிவிட முடிகின்றது. விடாப்பிடியுடைய கரடியின் வாயையும், கொடும் புலியின் வாயையும் மனிதன் தனது ஆற்றலால் கட்டி விடுகிறான். மிருக ராஜவான சிங்கத்தின் முதுகின்மேலே ஏறியும் சவாரி செய்ய இயலும். படம் எடுத்தாடுகின்ற நல்லபாம்பையும், ஆட்டி வைத்து விளையாட்டுக் காட்டலாம்.

ரச குளிகையினாலே இரும்பைப் பொன்னாகவும் மாற்ற இயலுகின்றது. உலகத்தில் வேறொருவர் காணாது உலவவும் முடிகின்றது. நெருப்பின் மேல் அமரவும், நீரின்மேல் நடக்கவும் செய்யலாம். எப்போதும் இளமையோடும் இருக்கலாம். வேறொரு உடலுக்குள்ளும் உட்புகுந்து கொள்ளலாம். தனக்கு நிகர் இல்லாத அஷ்டமாசித்திகள் (எட்டு வகை சித்திகள்) அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால், பாழும் சிந்தையிருக்கிறதே — அந்தச் சிந்தையைப் பிடித்து, இழுத்து நிறுத்தி சும்மா இருக்கும்படி செய்கின்ற திறமை மட்டும் பெறுவது அரிது அரிது; அரிதிலும் அரிது. இதெல்லாம் நானா சொல்லுகிறேன் இல்லை. தன்னையுணர்ந்து, தலைவனைப் புரிந்து, தத்துவங்கள் அனைத்தையும் நித்திய வாழ்க்கையில் கண்டு மகிழ்ந்து, முக்திப்பேறுபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுதபுரம் சமஸ்தானத்தில் அதிஷ்டானமாகியுள்ள (சமாதி) தாயுமான சுவாமிகள் சொல்லுகின்ருர்:—

“கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம்புலி வாயையும்
கட்டலாம் ஒரு சிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத்து ஆட்டலாம்
வெந்தணலில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேருெருவர் காணுமல் உலகத்து உலாவலாம்
விண்ணவரை யேவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்ருெரு
சரீரத்தினும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோமயானந்தமே”

நாம் கற்கின்ற கல்வி, மனமடங்க வழிகாட்டியாக இருக்க வேண்டும். இதனைத்தான் சாகாக் கல்வி என்றும் வேகாக் கலை என்றும் வள்ளலார் பெருமான் சுட்டிக்காட்டிச் சொன்னுர். ‘சாகாக் கலை’ என்றவுடனே, மனிதன் சாவின் பிடிப்பிலிருந்து நிரந்தரமாக விடுதலை பெறுவதென்பது பொருள் அல்ல. சாவு என்பது பொது; அது எங்கும் உள்ளது; அது எப்போதும் வரக்கூடியது. அதைத் தடுப்பதற்கோ, தடை செய்வதற்கோ, மறுப்பதற்கோ மாற்றுவதற்கோ அல்லது கூட்டுவதற்கோ யாருக்கும் சக்தி கிடையாது.

“அமரத்வம்” என்பது, உடலையோ, உயிரையோ பொறுத்தது அல்ல. “நிலைத்த ஒன்று” நினைப்பின் சக்தியால் ஆற்றலின் வல்லமையால் கிடைக்கக்கூடிய ஒரு பெரும் பேருகும். அப்படிப்பட்ட நிலையை எய்தியவர்கள், மகரிஷிகளும், ஞானிகளும், தவயோகிகளும், அருள்ஞானச் செம்மல்களும் ஆவார்கள். யாக்ஞவல்கியர், ஆதிசங்கரர், 63 நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்கள் இவர்கள் இன்று நம்மிடையே இல்லை. ஆனுலும், இவர்களைச் செத்தவர்களோடு சேர்த்துவிட முடியுமா? என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்பவர்கள் இவர்கள். வேகாக் கல்வியின் மூலமாகச் சாகாகல்வியை வளர்த்து, மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்பவர்கள் இந்த மேற்கண்ட ஞானியர்கள் என்கின்றபோது, சாகாக்கலையும், வேகாக்கல்வியும், மரணமிலாப் பெருவாழ்வும், எந்தவகையான அமரத்வத்தை அல்லது ஒன்றி நிலைத்து விட்ட தரத்தை நமக்கு அறிவிக்கின்றது என்பது புலனாகும்.

அற்ப உடலைவிட்டு, உயிர் பிரிந்த பின்னரும்; மனிதனது புகழ், செயல், அவனது அருமை, அவன் வையகத்தில் நடந்து கொண்ட எளிமை இவைகள் அனைத்தும், காலம் கடந்தும் நிலைக்குமேயானால்—நின்று உலகில் புகழ்கூறுமேயானால், அதுஅவன்பெற்றபண்பட்ட-எதனாலும் அழியாதவேகாக் கலை விளைவித்துத் தந்த பூரணத்துவமான சாகாக்கல்வியின் வாயிலாகப் பெற்று நிலைத்துவிட்ட பெருவாழ்வாகும். இது தான் மரணமிலாப் பெருவாழ்வு. இது யாருக்குக் கிடைக்கும்? எதனால் கிடைக்கும்? எப்போது கிடைச்கும்?

எல்லோருக்கும் ஆண்டவன், ஐந்து புலன்களையும் ஐந்து பொறிகளையும், ஞானேந்திரியங்கள் எனவும் கர்மேந்திரியங்கள் எனவும் சொல்லக்கூடியவற்றை அருமையாக தந்து விட்டான். அதனைப் பெருமையாக எண்ணிப் பேணிப் பாது காக்க யாருக்கு முடியுமோ யாருக்குப் புலனைந்தையும் பொறிகலங்கிவிடாமல் பாதுகாக்க இயலுமோ, யாருக்கு நெறிபிழன்று நடக்காமல் ஐந்தும் அடக்க வல்லமையுண்டோ, அப்படிப்பட்ட தன்மையுடையவர்கள், மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவர்களாகின்றனர்.

ஆதிசங்கரர் பாலப் பருவத்திலே ஞானத்தைப் பெற்றார். தன் தாயினிடம் துறவுக்கு அனுமதி கேட்க, அவரும் ஒரு சாதுர்யத்தைத்தான் கையாள வேண்டியிருந்தது. யாராக இருந்தாலும், நேராகக் கேட்டால் பெற்ற பிள்ளையை உற்ற வயதிலே உலகுக்குத் தத்தம் செய்துவிட, பத்து மாதம் நொந்து, சுமந்து பெற்ற எந்தத் தாய்க்குத்தான் மனம் வரும்? ஆதிசங்கரர் ஒரு மடுவிலே இறங்கினார். தாயும் உடன் போய் இருந்தாள். முதலை யொன்று சிறு பாலகனாக இருந்த ஆதிசங்கரரின் காலைக் கவ்வியது. "அம்மா! முதலை, காலைக் கவ்வுகிறதே" என்று குழந்தை கதறியது. "அப்பா! மகனே என் செய்வேன்?" என்று தாயும் கதறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா! ஒருவழியிருக்கிறது. நான் உயிருடன் இருக்கவேண்டுமேயானால் நீ ஒன்று செய்வாயா அம்மா?" என்று அந்தக் குழந்தை பரிதாபத்துடன் கேட்டது.

"எது வேண்டுமானாலும் செய்கிறேனடா கண்ணா! சத்தியமாகச் செய்கிறேன்", என்று தானே சத்தியத்தின் பிடிப்பில் அந்தக் கருணையுடைய தாய், அகப்பட்டுக்கொண்டாள். குழந்தை சிரித்தது. சிரித்த குழந்தை செப்பியது, "அம்மா! நான் சந்யாசம் ஏற்றுக் கொள்வதற்கு நீ, சம்மதித்துவிட்டால் நான் இப்பொழுதே மானஸீக சன்யாசம் பெற்றுக் கொள்வேன். மறு பிறவியையும் அது வேரறுத்துவிடும். முதலையின் வாயில் அகப்பட்ட பேராபத்திலிருந்தும் மீளும் வகையும் கிடைக்கும்" என்று சொல்லிற்று.

உயிரோடு மகன் இருந்தால் போதும்—விழுங்க வரும் முதலை, மைந்தனின் காலை விட்டால் போதும், நீ எதனையும் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன் என்று சொன்னாள்.

அச்சொல்லையே அனுமதியாகப் பெற்று, மானஸீக சந்யாசத்தை, மனத்தால் ஏற்றுக் கொண்டார். முதலையும் கவ்வியிருந்த காலை விட்டது. இதனை நாம் எண்ணிப் பார்த்தால் இது எத்தனை வியக்கத்தக்க செயல் என்பது சிந்திப்பார் மனதில், வந்தனைக்குரிய வகையில் இடம்பெறும்.

முதலை, காலைப் பிடித்ததும், குழந்தை தாயிடம் சன்யாசத்திற்கு உத்தரவு கேட்டதும், தாய், பிள்ளை பிழைத்தால் போதும் என்ற உணர்வில் அனுமதி அளித்ததும், அதன் வாயிலாக, உலகத்திற்கே ஒரு குருமஹான், குருபீடம், குருநாதர் கிடைத்ததும், ஷண்மத ஸ்தாபனம் —காணுபத்யம்— கணபதி.

கௌமாரம் — முருகன்.
சாக்தம் — அம்பாள்.
சைவம் — சிவபெருமான்.
வைணவம் — திருமால்.
சௌரம் — சூரியன்

ஆகிய ஆறு கடவுளர்களை ஆறு மதங்களுக்கும் தலைவர்களாக்கி ஷண்மத ஸ்தாபனம் செய்தருளியதும், கன்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரியிலிருந்து காஷ்மீர் வரைக்கும் கால்நடையாகச் சென்று கடவுள் தத்துவத்தை, காட்சிப் பொருளாகவும் சாட்சிப் பொருளாகவும் உபதேசித்தருளியதும் எவ்வளவோ பயனும் பலனும் அள்ளித்தந்த அருள்மாட்சியாகும்!

திருக்கோஷ்டியூரில், பட்டப்பகலில் — உச்சிக்காலப் பொழுதில் ஓர் மனித உரு, மாபெரும் மாடக்கோபுரத்தில் ஏறி நின்றது. "இது ஒரு பைத்தியமோ? இதற்கு எப்படி வைத்யம் செய்வது? இந்த மனிதனைக் கோபுரத்திலிருந்து கீழே இறக்குவது எப்படி?" என்று எண்ணிக் கோவிலைச் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. கூட்டத்தைக் கண்டதும், அந்த மாமனிதன், கோபுரத்தின் உச்சியில் ஏறி நின்று அஷ்டாக்ஷரமாகிய "ஓம் நமோ நாராயண" என்று உலகம் உய்யும் மந்திரத்தை, உரக்கச் சொல்லி அலறியது. எல்லோர் காதிலும் விழுந்து விட்டது என்ற திருப்தியோடு கீழே இறங்கியது. 'ஓம் நமோ நாராயண' என்பது சாதாரணமாகப் பார்க்கும்போது, மகாவிஷ்ணுவை, ஓங்காரத்தில் உள்ளடக்கி, புருஷார்த்தங்கள் அத்தனையும் அளிப்பவன் என்ற கருத்தினை அளித்து நமஸ்காரம் செய்வதுபோல் தோன்றினாலும். அது மகா மந்திரமாகும் சப்தகோடி மந்திரங்கள் அனைத்திற்கும் அது வித்தாகும்.

சப்தகோடி என்று சொன்னால், ஏழு கோடி என்றோ, நூறு லட்சம் சேர்ந்த ஒரு கோடி போல ஏழு கோடி என்றோ கணக்கிட்டுக் கொள்ளக் கூடாது. கோடி வீடு என்று சொன்னால், கடைசி வீடு அல்லது நுனி வீடு என்பது பொருள். இந்தக் கோடிக்கு அந்தக் கோடி கடைசி ஏழு மந்திரங்கள்--அவைகள்:—

1. நம:
2. ஸ்வதா
3. ஸ்வாஹா
4. பட்
5. வஷட்
6, வௌம் ஷட்
7. ஹூம் பட்

இவைகள்தான் அந்த மகா மந்திரங்கள். ஏழு கோடியும் இவைகள்தாம். மந்திரத்திற்கு அதிதேவதையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்திர தேவதையை அழைத்து, 'நம:' எனச்சொல்லி, 'நமஸ் கரிக்கிறேன் அல்லது துதிக்கிறேன்' என்று சொல்லுவது ஆரம்பம் 'அஸ்திராய ஸ்வதா' எனச் சொல்லி, அஸ்திர தேவதைக்குத் தனது இஷ்டமான பொருளைத் தருவது இரண்டாவது கோடி மந்திரமாம். அஸ்திர தேவதைக்கு, ஹோம குண்டங்கள் அமைத்து, யாகாக்னி வளர்த்து அதிலே பிரீதியான — விருப்பமான பொருள்களை அர்ப்பணித்து ஏற்றுக்கொள்ளச் செய்கின்றவேளையிலே "அஸ்திராய ஸ்வாஹா" உச்சரித்தல் வேண்டும்.

செய்வினைகள், செய்யப்பட்டவினைகள் அனைத்தும் அகல, விலக, இல்லாது ஒழிய "அஸ்திராயபட்" உபயோகிக்கப் பெறல் வேண்டும். இந்த வகையான ஏழுகோடி மந்திரங்களை இந்த உலகை ஆக்கவும், காக்கவும் மட்டுமே பயனுக்காது அழிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

'மன்' என்றால் மனம். 'த்ரா' என்றால் காப்பாற்றுவது. மனத்தால் நினைப்பவரைக் காப்பாற்றுவது மந்திரம். அருளைக் கொடுப்பது மந்திரம். அழிப்பதல்ல மந்திரம். உருவாக்குவது மந்திரம். உருக்குலைப்பதல்ல மந்திரம். ஏற்றத்தைத் தருவது மந்திரம்; இன்னலைத் துடைப்பது மந்திரம். இன்பத்தைப் பெருக்குவது மந்திரம். பேரின்பத்திற்கு வழி காட்டுவது மந்திரம்.

அதனால்தான் பெரியவர்கள், மந்திரத்தை உபதேசமாக்கினார்கள். 'உப' என்றால் சமீபம் என்பது பொருள். "தேசம்" என்றால் இடம். மனத்தால் நினைப்பவரை, ஆண்டவனது சமீப இடத்திற்கு – இறைவனது அருகாமைக்கு அழைத்துச் செல்லுவதுதான் "மந்திர உபதேசம்."

அனுபூதி உணர்ந்த அருணகிரி,

"ஆனதனி மந்திர ரூப நிலை கொண்டது ஆடுமயில்
என்பதறியேனே" என்றார்.

முருகப்பெருமான் முன்னே நின்று ஆடுகின்றதே அழகு மயில் – அது ஓர் எழுத்து உடையதா அல்லது ஆறு எழுத்தில் அமைந்ததா என்பதை யாரறிவார்? அறிய மாட்டாதே இவ்வையகம் என்பதை அநுபவ முதிர்ச்சியால் அறிந்து கொண்ட அருணகிரி, ஓர் எழுத்தில் ஆறெழுத்தை உணர்த்திய முருகனை, முன்னே கண்டு, அவன் அருள் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்'' தான் 'சரவணபவ' என்றும், அந்த ஆறெழுத்தாகிய 'சரவணபவ' தான் 'ஓம்' என்றும்,

"ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதிய பெருமாளே'' என்றும், சடாக்ஷர மந்திரத்தின் (ஆறெழுத்து – சரவணபவ) வாயிலாக, சாயுஜ்ய நிலையைக் காட்டியருளினர். ஓரெழுத்தும்; ஆறெழுத்துமே 'மயில்' என்றும், அதுவே மந்திர ரூபமாக வந்தது என்றும் நமக்கு உணர்த்தினர். அப்படிப்பட்ட மந்திரம், நாம் உருப்போட்டால் உருப்படுவதற்குச் சாதகமாக உள்ளது. அதனை மாற்றிக் கண்டால் - மாற்றிச் செய்தால்- வேற்றுமைக்குப் பயனுக்கினுல் அது, அதளபாதாளத்திலும் அதற்கு அடியிலும் அழுத்தி, நசுக்கிவிடக்கூடிய அபாயகர மானது.

தந்திரத்தால் (தன்திறன்) தன்னை உயர்த்துவதைவிட, மந்திரத்தால், மனதைச் சிந்தையை, எண்ணத்தை, நினைவை, நெஞ்சத்தை, நினைந்து கசிந்துருகும் உள்ளத்தை, அதன் விளைவால் நிகழும் உணர்வை, ஒருமைப்படுத்திவிட்டால், அங்கு காணக்கிடைப்பது அருமையான காட்சியாகும். இக்காட்சியை, ஞானியார் ஒருவர் எப்போது கண்டாரோ, எங்கு கண்டாரோ? அப்படியே பாடுகிருர்.

**"வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்**
**மயில் குயிலாச் சுதடி — அக்கச்சி**
**மயில் குயிலாச் சுதடி.**

**பொய்யை யொழித்துப் புறப்பட்டேன் மன்ருடும்**
**ஐயரைக் கண்டேனடி — அக்கச்சி**
**ஐயரைக் கண்டேனடி''**

மயில் எப்படிக் குயிலாகும்? குயில் எப்படி மயிலாகும்? எவ்வளவு பெரிய வினு? ஆடும் ஒன்று பாடுமா? பாடும் ஒன்று ஆடுமா? பொய்யை ஒழித்துப் புலப்பட்ட சத்தியத்தைச் சுத்த மயத்தோடு ஏற்றுக்கொள்ளத் தெரிந்தவர்களுக்கு, "அதிகம் கருப்பான நிலக்கரி வைரமாகிறது'' என்பது போல், "அதிகக் கசப்புச் சிலருக்கு இனிப்பாகிறது'' என்பது போல், ''கரைகாணுத துன்பமே சிலருக்குப் பேரின்பமாகிறது'' என்பது போல் இறப்பே, பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை தருகிறது என்பதுவும், புரிந்து, தெரிந்து, உணர்ந்து, மயிலைக் குயிலாகவும், குயிலைமயிலாகவும்உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவே உன்னதமாக ஒப்பற்ற அரும்பெரும் காட்சியாக அறிய முடிகின்றது. எல்லாம் மனம் செய்யும் மாயா விநோ தம்தான். இருப்பதைக் கொண்டு திருப்தி உறுவதும், என்ன இருந்தாலும் போதும் என்ற மனம் வராது போவதும், எது வுமே இல்லாதிருந்தாலும் எல்லாம் இருப்பதாகப் பாவிப் பதும், ஒருவரை ஒருவர் காணாத போதும் கண்டதாகக் கழறிக்கொண்டதாகக் கலந்துரையாடியதாக, காகம் போல ஒன்று சேர்ந்து உண்டதாக, இன்னும் என்னவெல்லாமாக வோ எண்ணி எண்ணி இறும்பூது (மகிழ்ச்சி) அடைகின்ற இதயங்களும் எத்தனையோ உண்டு.

'சந்துஷ்டியே கல்பதாம்' மகிழ்ச்சியைக் கற்பனை செய்து கொள்வோரும் உண்டு.

"More things are wrangh by Prayer, than this world dreame of" என்று மேல்நாட்டறிஞன் சொன்னான். உலகத்தைப் பற்றிக் கற்பனை செய்வதைவிட, உலகை உருவாக்கிய உத்தமனைப் பற்றி எண்ணினால் எத்தனையோ இன்பங்கள் பெற முடியு மாம்.

சிலர் உணவு உண்டவுடன் உறங்கிவிடுகின்றனர். அதனை ஒரு வரப்பிரசாதமாகக் கருதுவாரும் உண்டு. சிலருக்கு, "உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டு" என்ற எண் ணத்தோடு உறக்கம் பற்றிக் கொள்ளும். வேறு சிலரோ உறக்கத்திற்கு மருந்து தேடி அலைவார்கள். அப்போதும் வராது. ஆனால், உண்பதும் உறங்குவதும்தான் நாம் கண்ட பலனா? முதன் முதலிலே எடுத்தோமே, ஒரு பாடல் ஒரு அடி — அதிலே ஒரு வரி,

"ஆசைக்கோர் அளவில்லை" — அந்த ஒரு வரிக்குத்தான் இதுவரை நாம் கண்ட விளக்கங்கள் பலவும் பொருந்தும். இனி, முழுப் பாடலுக்கும் வருவோம்.

"ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாங் கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெலவே நினைவர் அளகேசர் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்,
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்;
நெடுநாளிருந்த பேரும்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாகவேயினும் காயகற்பந்தேடி
நெஞ்சு புண்ணுவரெல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆகவேமுடியும்
உள்ளதே போதும் நான்நான் எனக்குளறியே
ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்
பாசக் கடற்குள் வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணு னந்தமே.''

இங்குகூட வேண்டுதல் என்ன தெரியுமா? ''மனதற்ற பரிசுத்த நிலைதான்'' அது வந்து விட்டால், 'கடல்' என தென்று சொல்ல மனம் வராது. தேவேந்திரனைப் போலக் கட்டிப் பொன் பெற்றிருந்தாலும் ரசகுளிகையினுல் இரும்பைப் பொன்னுக்க எண்ணம் வராது. நீண்ட நாள் இருந்தது போதும் என்ற எண்ணம் வராமல், இன்னும் இருக்க வேண்டும் என்ற பேராசையில் நிலைத்து வாழக் காயகல்பம் தேடி, வாடி, உள்ளம் சோர்ந்து நிற்கின்ற அவலநிலையும் ஏற்படாது. இத்தனைக்கும் காரணம் ஆசைதானே? அந்த ஆசைதான் அழிவிற்குக்காரணம் என்று புத்தபிரானும் போதி மரத்தடியில், தான் உணர்ந்ததை உலகிற்குப் போதித்தார்.

'ஆன சிவபூசை செய்தால் ஆசையறும்'

என்றனர் பெரியோர்.

'ஆன' என்கிறபோது — வாழ்க்கைக்கு ஆனது — இகத்திற்கு ஏற்றது. பரத்திற்கும் உகந்தது. பாரம் அனைத்தையும் தாங்க வல்லது. பார் அனைத்திற்கும் தாரகமானது, என்பதெல்லாம் அதிலே பொதிந்து கிடக்கின்றது.

''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்''
''உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்''

என்றுதானே திருமுறையாளர்கள் ஆண்டவனிடம் மெய்யுருகி நின்று பொய்யகல, ஆசையறப் பாப்புனைந்து துதித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாத — தேவையற்ற — அவசியமல்லாத — சிந்திக்க வேண்டாத — பேசத் தேவையற்றவற்றை நீக்கிவிட்டு, சிந்திக்க வேண்டியதைப் பேச வேண்டியதைச் செய்ய வேண்டியதைச் செய்வதுதான் "ஆனசிவபூசை" என்று எண்ணவும் இடமுண்டு. "ஆனசிவபூசை" செய்தால், நேசமுடன் ஐந்தெழுத்து நினைவிற்கு வரும். அந்த ஐந்தெழுத்து "நமசிவாய".

இது ஆண்டவனது — சிவபெருமானது திருநாமம். இதனை எல்லாரும் சொல்லலாம். எங்கும் சொல்லலாம். எப்போதும் சொல்லலாம். எப்படியிருக்கும்போதும் சொல்லலாம். ஆனால் இந்த ஆண்டவனது திருப்பெயரை, மகாமந்திரமாக மாற்றி, 'சிவாயநம' எனச் சொல்லுவதற்குக் குரு மூலமாக உபதேசம் பெற்றிருக்க வேண்டும்.

சி — சிவ பரம்பொருள்
வ — அவனது அருட் சக்தி
ய — உயிர்கள்
ந — மறைப்புச் சக்தி (திரோதான சக்தி)
ம — மலங்கள்

இந்தப் பொருளைக் காண்கின்றபோது, சிவத்திற்கும் உயிருக்கும் உள்ள ஒரு பெருந் தொடர்பு, அரும் உறவு உணர முடிகின்றது. இதை உணர்ந்தவர் மணிவாசகர். திருவாசகத்தில், எடுத்த எடுப்பில், எல்லோரும் சொல்லக்கூடிய ஆண்டவனது நாமத்தை வைத்து, 'நமச்சிவாய வாழ்க' எனத் தொடங்கினர். ஞானுனுபூதி பெறப்பெற, சிவானுபூதி வரவர உண்மை புலப்பட்டது. ஆண்டவனுடைய திருநாமம், உள்ளத்தில் பதிந்து, உணர்வைத் தொட்டு இன்பத்திலே திளைக்கச் செய்து ஆனந்தத்தை அள்ளி அள்ளிச் சொரிந்தது.

"எனக்கா, இப்பேற்றை நல்கினுன்? அதற்குரிய தவத்தை நானு செய்தேன்? காட்டாதன எல்லாம் காட்டி, கருணையையும் கூட்டிக் குழைத்துத் தந்த "இத்தவம் எத்தகையதோ?" என எண்ணும் அளவிற்கு, அருளை அள்ளி வழங்கிய அந்த ஆண்டவன், நான் ஒரு அடிகூட எடுத்து வைக்காத நிலையில், நூறு அடிகள் என்னை நோக்கி விரைந்து தாமே வந்து, எனதுள்ளம் புகுந்து அடியேனை ஆட்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை எப்படி உரைப்பேன்! அன்றே என்றன் ஆவி, உடல், உடைமை எல்லாவற்றையும், குன்றே போன்ற அவன், எனை ஆட்கொண்டபோதே கொண்டுவிட்ட எளிவந்த வான் கருணையினுலேதான், நாமத்தை நான் சொல்ல, நாம ரூபம் கடந்த மகாமந்திரத்தை யான் அறியப் பெற்றேன். இதற்கு நான் செய்ததுதான் என்ன?''

''நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனுய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எமதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''

என்று மணிவாசகர் பாடினுர்.

'சிவாயநம' என்பது, மகாமந்திரமாகி முக்திப் பேற்றிற்குப் பல அடியவர்களுக்கு வழிகோலியிருக்கின்றது. ஆகையினுல், மனத்தினுல் நினைப்பவரைக் காப்பாற்றி, ஆண்டவனுக்கு அருகில் அழைத்துச் செல்லுகின்ற மந்திரத்தை, விடாப்பிடியாக அனவரதமும், எழும்போதும், தொழும்போதும், ஆசையுந்த அழும்போதும், அறியாது தடுமாறி விழும்போதும், எப்போதும் உருப்போட்டால் மனித சமுதாயம், நிச்சயமாக உருப்பட்டு மனிதன் தெய்வமாகும் நிலையும் அடைகிருன் எனப் பெரியவர்கள், அனுபவத்தின் வாயிலாக அறிந்து கூறினுர்கள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவிட்டால், வானுறையும் தெய்வத்துள் வைத்து வணங்குகின்ற தன்மையும் மனிதனுக்கு ஏற்பட்டு விடுகின்றது என்று மறைதந்த வள்ளுவரும் சொன்னுர்.

மனிதன், தன் சக்தியை — ஆற்றலை — வல்லமையை, இறையுணர்வோடு எண்ணிப் பார்க்கின்ற போது, இரை (உணவு) தேடுவதை மறந்து இறையை மட்டும் தேடுவான்.

மனத்தில் உள்ள ஆசாபாசம், மற்ற தேவையற்ற அழுக்குகள் போக, ஆண்டாள் நாச்சியார், அரிய பெரிய வழியைக் கண்டு அதனை, இனிய எளிய முறையில் காட்டுகிருள்-

''தூயோமாய் வந்துதூமலர் தூவி
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய பிழையும் புகுதருவான்
நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்கிருள்.

'தூயோமாய்' என்பதற்குப் பொருள் காணவேண்டுமே! புறத்தூய்மை நீரால் அமையும். நீராடினுல் போதும்–உடம்பு தூய்மையாகிவிடும். அகம் தூய்மை — வாய்மையால்தான் பெறப்படும். 'வாய்மை' என்பது உண்மை. அதுதான் "சத்தியம்", அங்கேதான் ஆண்டவன் உறைகின்ருன். அது கருதித்தான் வேதகாலப் பெரியவர்கள், 'சத்யமேவ ஜயதே' என்றும், 'சத்யம் வத' என்றும், (உண்மை வெல்லும். உண்மை பேசு) சொன்னுர்கள்.

'சத்' என்ற உண்மை சித்தத்தில் படிந்து விட்டால், இருதயம் சுத்தமாவதோடு, சதா ஆனந்தமும் சரண் அடைகின்றது.

"ஜீவபோதம்", நாதவிந்துவாகிய சிறுதுளியால் உருவாக்கப்பட்ட உடலுக்குள்ளே உட்புகுந்து ஆசாபாசம் அகற்றி, ஆணவம் நீக்கி, மாயையை போக்கிக் கன்மத்தையும் குறைத்து, "கடவுள் தத்துவம்" இதுதான், என்பதைக் கருணையுடன் உணர்த்துகின்றது.

அந்த மனத்தூய்மையையே ஆண்டாள் நாச்சியார், ஆண்டவன் சன்னிதானத்திற்கு வரும்போது, அந்த சானித்யத்தை அல்லது பேரருளை அப்படியே அள்ளிக் கொள்ள வேண்டுமென்ற ஆசையில் சும்மா வரவில்லை—"தூயோமாய் வந்தோம் — தூமலர் தூவத் தகுதியுடன் வந்தோம் — வாயினுல் பாடுகிறேம் – மனத்தினுல் சிந்திக்கிறேம்—" என்கிருள்.

'தூமலர் தூவி' என்கிறபோது, "உடலால்" செய்யப்படும் சரியையாகிய படி காட்டப்பெறுகின்றது. 'வாயினுல் பாடி' என்கின்ற போது, 'மொழி' வருகின்றது. 'மனத்தினுல் சிந்திக்க என்கின்ற போது, 'மனம்' குறிக்கப்பெறுகின்றது. "மனம், மெய், மொழி" மூன்றும் அவனுக்கு அடிமைப்பட்டு விட்டால், பிறவி தோறும் பிறவிதோறும் சேர்த்துக்கொண்டு வந்த பாவமூட்டைகள் அனைத்தும், இல்லாது ஒழிவதோடு, இப்போது செய்கின்ற பிழைகளும் நெருப்பில் பட்ட பஞ்சு போல இல்லாது ஒழிந்து விடுகின்றது என்ற மிகப்பெரிய வேதசார உபநிஷத விளக்க மெய்ப்பாட்டுக் கருத்துக்களை இந்த நான்கு வரிகளுக்குள்ளே உணர்த்தி — மனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பை, தூய்மையாக்கும் பண்பை, மனம் மெய் மொழி களால் சாதிக்கப்படும் சாதனைகளைக் கண்ணுகிய நாதனை வழிகாட்டியாக வைத்து நம் வாழ்க்கையையும் தூய்மைக் குரியதாக ஆக்கி ஆற்றுப்படுத்துகிருள்.

இந்த இறைவனை, இவனுடைய இன்னருளை ஏற்று அனு பவித்து உணர்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய்
என்னுடைய தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனுகி" என்கிருர்.

சப்தஸ்வரங்களிலே — அந்த ஸ்வரங்களின் நாதமாகி — நாதத்திலே விளைகின்ற கீதமாகி – அதன் உச்சகட்டத்திலே உயர் போதமாகி – அனைத்துப் பயன்களையும் சேர்த்து, சங் கீதம் சாயுஜ்யத்திற்கு வழிகாட்டும் என்னும் வகையில் இசைக் குரிய பயனை நல்கி, இனிய அமுதமாகி நிற்கின்ற அந்தப் பெரும் பொருளாகிய ஆண்டவன், என்னுடைய தோழனுக வும் இருக்கின்ருன்.

'தோழன்' என்ருல் இடித்துச் சொல்ல வேண்டும். அடித் தும் சொல்ல வேண்டும். பிடித்து வைத்தும் சொல்ல வேண் டும். ஆனுல், தம்பிரான் தோழராகிய அந்த ஆண்டவன், சுந்தரமூர்த்தி செய்கின்ற குற்றங்களுக்கெல்லாம், துணை யாக மட்டுமல்ல உடனுகியும் நிற்கின்ருன். சைவ சித்தாந் தத்திலே இறைவனைப்பற்றி நான்கு நிலைகள் வர்ணிக்கப் பெறுகின்றன.

"ஒன்ருகிப் பலவாகி உடனுகி வேருகி"

என்பதுதான் அந்த நான்கு நிலைகளும்.

ஒன்ருகி, 'ஏகம் தேவா' என்கிறது வேதம்.

"ஏகன் அனேகன் இறைவனடி வெல்க"

என்கிறது சிவபுராணம்.

"ஏகனுமாகி அனேகனும் ஆனவன்
நாதனும் ஆனுன் என்றுந்தீபற
நம்மையும் ஆண்டா னென்றுந்தீபற"

என்கிறது திருவுந்தியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலசம்ஹாரகாலத்திலே—அதாவது ஊழிக்காலம் முடிந்த போது, சிவபெருமான், தானேஒருவனாகத் தனித்துநிற்கிறான். அவன் ஒப்பிலான்; உவமைஇல்லாதவன். ஊரிலான். உரைக்கும் பெயர் கூட இல்லாதவன். வரல் போக்கில்லாதவன். நம்மைப் போல ஒரு கட்சியில் சார்பில்லாதவன். ("பிரிதோர் சார்விலான்" — கந்தபுராணம்) உயிர்க்கடவுளாய் நம்முள்ளே நிற்கக் கூடியவன் அவன் ஒருவன்தான்!

ஒன்றாகி நிற்கும் அவன், நமக்காக, நம்பேரில் வைத்த கருணைக்காக நமக்கு உணர்த்துமாப் போல, நம் அறிவாற்றல் தகுதி தன்மைகளுக்கு ஏற்ப, பக்குவபரிபாவங்களுக்கு ஏற்ப, மல பந்தங்களுக்கேற்ப, இவைகள் அனைத்தையும் சிறிது சிறிதாக அகற்ற வேண்டிப் பல உருவங்களோடு, பல நாமங்களோடு காட்சியளிக்கிறான்.

ஆலய வழிபாட்டில் 'ஷோடசோபசாரம்'' பதினாறு வகைகளில் — தீபம் காட்டுதல் ஒரு முறையாகும். ஒன்றாக நிற்கும் ஆண்டவன், இரண்டாகி, மூன்றாகி, ஐந்தாகி, அடுக்கு தீபமாகிக் காட்சிக்குத் தோன்றுவதெல்லாம், ஒன்றிலிருந்து பல பிரிந்தன என்பது உணர்த்த வேண்டித்தான்.

'ஏகன்தான் அநேகன்' என்கிறது திருவாசகம். ஒன்றாகிப் பலவாகி நிற்கின்ற அந்தப் "பரம்'', நமக்கு உடனாகியும் இருக்கின்றது. அது அறிவிக்கின்றது அனைத்தையும்!

நம் கண்ணிற்கு ஒளி இருக்கிறது. அந்த ஒளியை வைத்துக் கொண்டு, ஒரு இருட்டறை மூலைக்குள்ளே நின்று கொண்டு, விழித்து விழித்துப் பார்த்தால் பொருள் புரியுமோ? கண்ணுக்கு இயல்பாக ஒளி யிருந்தாலும், பொருள் களைக்காண சூரிய ஒளியோ, சந்திர ஒளியோ, விளக்குகளின் ஒளியோ தேவைப்படுகின்றது. அது போல இந்த உயிருக்கு இயல்பாகவே உணரும் தன்மையிருந்தாலும், அனுபவிக்கின்ற அல்லது துய்க்கின்ற ஒரு நிலை வரவேண்டுமேயானால், அந்தப் பரம்பொருள், உடன் நின்று உணர்த்தினால்தான் உணர முடியும்! காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்று சொல்லக்கூடிய; ஞாதுரு ஞான ஞேயம் நமக்குப் புரிய வேண்டுமானால், அவன் நம்முடன் கலந்து நின்றால்தான் ஆனபயன் அனைத்தும் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவானும் அவன்தான். நமக்கு அறிவிப்பானும் அவன் தான். அறிவாய் அறிபவனும் அவன்தான் என்கின்ற நிலை நமக்குப் புரிகின்றபொழுது, உலகோடு உறவும் அற்றுவிடுகின்றது. பேச்சும் அறுகின்றது. நாம் உயர்ந்தவர்-சிறந்தவர் என்ற உளப்பாங்கும் ஓடி மறைந்துவிடுகின்றது. குறியைக் குறியாது குறித்தறியும் தனிநெறியும் பிறந்துவிடுகின்றது. அறிவு அறுகிறது. அறியாமையும், எங்கோ ஓடி ஒளிந்துவிடுகிறது.

இந்த மாயா ஜாலங்கள்; இந்திர ஜால விநோதங்கள் அனைத்தும், அவன் இவனோடு உடனாகி நிற்பதால்—அவன் ஆட்டுவிக்க இவன் ஆடுவதால் — அவன் கூட்டுவிக்க இவன் கூடுவதால்—அவன் அடக்கி வைக்க இவன் அடங்குவதால் நிகழ்கின்ற அதிசய அற்புதச் செயல்களாகும்.

மலையில், அதன் உச்சியில் காய்க்கின்ற ஒரு நாரத்தங்காயும், கடலில் — ஆழ்தரங்கத்தில் இருந்து கிடைக்கின்ற உப்பும், ஏதோ ஒரு சக்தியால் ஒன்றுபட்டு உணவுப் பொருளாக உருவாவதுபோல, எங்கோ உள்ள இருவேறு உடல்களை, இருவேறு உள்ளங்களை ஒன்றுபடுத்தி; இன்பத்தையும் துன்பத்தையும் இணைத்துப், பரிவையும் பாசத்தையும் பிணைத்து வைப்பதெல்லாம் அவன் நம்முடனே உடனாகி நிற்பதால்விளைகின்ற போக போக்யங்களாகும். போகத்தைத் தரும் அவன் கால எல்லையிலே அதன் தாகத்தையும் உணர்த்தியருளுகின்றான். இவை அனைத்தும் அவன் நம்முடன் உடனாகி நிற்பதால் நிகழும் நிகழ்ச்சிகளாகும்.

ஒன்றாகிப் பலவாகி உடனாகி நிற்கும்

அந்த "வாலறிவன்" (முற்றும் உணர்ந்தபேரறிவு) வேறாகியும் நிற்கிறான்.

எப்பொழுது அவன் வேறாகின்றான்?
ஏன் அவன் அப்படி ஆகவேண்டும்?

உயிர்களாகிய நாம் ஆணவம் உடையவர்கள். ஆசாபாசம் உடையவர்கள். மாயைக்கு உட்பட்டவர்கள். மும்மலம் அற்ற மூலப்பொருள் அவன். நம்மைக்கடந்து, நமக்கு 'உள்' நின்று உணர்த்தினாலும், 'அவன்' அவனாகவே இருக்கிறான். அவன் ஆண்டவன். நாம் அடிமை. அவன், எல்லாம் வல்லவன். நாம் எதுவும் அற்றவர்கள். அவனுக்குத்தான் 'உடையான்' என்று பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதி அணுகிற் பசுபாசம் நில்லாவே"

என்பது திருமந்திரம். பசு—உயிர், பாசம்—ஆணவம், இவற்றை அணுகவிடாத் தன்மையுடைய, அதாவது உயிர், மலம் இரண்டையும் கடந்து, அற்ற நிலையை உற்ற பொருளாகக் கொண்டு நிற்கும் ஒன்று, எதிலும் கலவாது. அது வேருகத்தான் நிற்கிறது. நாம் அதுவாக முடியாது. அது நினைத்தால் எதுவாகவும் வரலாம்.

'தத்வமஸி' தத்—அது, தவம்—நீ, அஸி—இருக்கிருய். அது நீயாக இருக்கிருய் என்றுதான் வேதமும் சொல்லுகிறது.

'அஹம் பிரம்மாஸ்மி' நான் பிரும்மமாக இருக்கிறேன் என்பதைவிட, அது நாஞக இருக்கிறேன் என்று சொல்லுவதை, சைவசித்தாந்தம் வரவேற்கிறது.

'நான் இருக்கிறேன்'—இந்த சொற்ருெடரிலே முப்பொருள் உண்மையும் முறையே உணரலாம். "நான்" என்பது ஆன்மா. "இருக்கிறேன்" என்பது உலகில். இந்த உலகையோ, இந்த உலகில் உள்ள ஒரு சிறு புழுவையோ நம்மால் உருவாக்க முடியாத காரணத்தால், "இதைப் படைத்தவன் ஒருவன் உண்டு" என்ற எண்ணமும் வரச்செய்கின்றது.

எனவே, "நான் இருக்கிறேன்" என்பதிலே உலகு, உயிர், கடவுள் மூன்றும் நமக்குத் தெரிய வருகின்றது.

உலகையும் உயிரையும் கடந்து நிற்கும் தலைவன், வேருகவே நின்று, அதே நேரத்தில் தாஞகவே வந்து, நமக்கு உயிர்த்துணையாய் நின்று, உற்றது அனைத்தும் கொடுத்துக் காத்து ரக்ஷிக்கிருன்.

அப்படிப்பட்டவன், சாதாரண மக்களுக்கு உருவத்திருமேனியும் (நடராஜ மூர்த்தம்)

பக்தர்களுக்கு அருஉருவமாகவும் (சிவலிங்கம்)
ஞானியர்களுக்கு அருவமாகவும் (உருவம் அற்றது)

காட்சியளிக்கிருன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதியாகவும் அந்த ஆண்டவன் இருக்கிறான். 'அனாதி' என்றால், தோற்றம் அற்றவன் என்பது பொருள். பலவாக வும் விரிகிறான். 'பலவாக' என்றால், எல்லாவற்றிலும் கலத் தல் என்பது பெறப்படுகின்றது. ஒன்றில் பலவாகவும், பல வற்றில் ஒன்றாகவும் காணப்படுகின்றான். பிரும்மமாகவும் விளங்குகிறான். 'பிரும்மம்' என்பது பெரும்பொருள். 'எதி னின்றும் வாக்குகள், மனத்தை எட்டாமல் திரும்பி விடுகின் றனவோ அப்படிப்பட்ட பிரும்மத்தை' என உபநிஷதம் பிரும்மத்திற்கு விளக்கம் தருகின்றது. அப்பெரும் பொருளா கவும் அவன் ஆகின்றான்.

மனிதனுக்கு பிரும்மநிலை வரும்போது அவனே பிரும்ம மாகவும் ஆகின்றான். நெருள் சதாசிவமுனிவருக்கு 'சதாசிவ பிரும்மம்' என்ற பெயரும், திருவையாறு தியாகராஜ சுவா மிகளுக்கு 'தியாகப்ரும்மம்' என்ற பெயரும், பிரும்ம நிலையை அவர்கள் எட்டிவிட்டார்கள் என்பதன் விளைவால் வந்த நாம தேயமாகும்.

முருகனது திருவுருவை உள்ளத்தில் பதித்துக்கொண்ட கச்சியப்பசிவாச்சாரியார் மேற்கண்ட கருத்துக்களை உள்ள டக்கி ஒப்பற்ற பாடலை நமக்குத் தருகிறார்.

"அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரும்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர்முகங்கள் ஆறும், கரங்கள்பன்னிரெண்டும்கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

உலகம் உய்ய – எடுத்த பிறவித்துயர் தீர, ஆண்டவனிடம் அனைத்தையும் ஒப்படைத்தார்கள்—ஞானியர்கள்.

"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்கிறார் சேக்கிழார் பெருமான்.

பக்தியிலே திளைத்த அறுபத்துமூன்று நாயன்மார்களுக் கும் பெருமை கூறும் வகையில் சிறப்புரையாக மேற்கண்ட இரு வரிகளையும் எழுதியுள்ளார். பக்தி செலுத்துவதுதான் அடியவர்களின் மரபு. முக்தி வேண்டுமென்று கேட்பதுகூட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடாத செயல்' எனப் பெரியவர்கள் எண்ணினுர்கள். அப்படிப்பட்ட பெரியவர்களின் மனநிலேயும், இன்றைய ஆசைப் பெருக்குகள் உள்ள நமது மனநிலேயும் எண்ணிப்பார்த்தால், இரக்கம்தான் பிறக்கின்றது.

"நின் கருணை நிதி வேண்டும்"

அதனுல் உன்னிடம், எல்லாம் பெற்றுவிட முடியும் என்றெண்ணிய மனப்பாங்கும், "அப்பா, நான் வேண்டுதல் கேட்டு நீ அருள் புரிதல் வேண்டும்" என்று வேண்டிய ஜீவ காருண்ய சிந்தையும், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் நானும் வாடினேன்' என்ற சோகக் குரலும், நம் இதயத்தைத் தொட்டுக் கல் மனத்தைக் கரைத்து, எட்டாத இதயத்தை இளகச் செய்து கனியாக்குகின்றது.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலேயாக ஆண்டவனைக் கண்ட வள்ளலார், திருத்தணிகை முருகனது திருப்பாத மலர் தரிசனம் காணுது ஏக்கத்தால் அதனுல் விளைந்த வருத்தத்தால் மனம் உருகிப் பாடுகிருர்.

நான்கு பாவினங்களும் (வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, விருத்தப்பா) நன்ருகத் தெரிந்த புலவர்கள், "நாதா, குமரா, குகா" என ஓதியது எப்பொருளே அப்பெரும் பொருளே, அந்தத் திருவடியை, இந்தப் பெரும்பாவியாகிய யான் பார்க்கில் கண்திருஷ்டி பட்டுவிடும் என்று எண்ணியோ, உன் திருப்பாத மலர் அழகினைக் கனவில்கூடக் காட்டாது மறைத்து வைத்திருக்கிருய்? இதுதான் நீ என்பால் கொண்ட கருணையோ?" என மிக ஏங்கி, ஏங்கிய நிலேயில் தூங்காது தவித்துப் புலம்புகிருர்.

"பண்ணேறு மொழியடியார் பரவியேத்தும்
பாதமலர் அழகினைப் பாவி பார்க்கில்
கண்ணேறு படுமென்றே கனவிலேனும்
காட்டென்ருல் காட்டுகிலாய் கருணையீதோ?"

என, அருட்பாடல்கள் ஆயிரம் ஆயிரம் அள்ளி வழங்கினர் வள்ளலார்!

அருளாளர்களுக்கெல்லாம் ஆண்டவன் அருள்மயமாகவே தென்பட்டான். மூன்று மலங்கள் கொண்ட நமக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இறைவன், "விறகில் தீயினன்" போலத் தோன்று கிருன். "விறகிற் தீ" யென்று சொன்ஞல், விறகிலே உள்ள தீயை உடனே கண்டுவிட முடியாது. மிகவும் சிரமப்பட்டுத் தீயை உண்டாக்கித்தான் பெறவேண்டும். மும்மலம் உடைய வர்கள் ஆண்டவனைப் பார்ப்பது சிரமம். பாலில் உள்ள நெய்யையோ உடனே பாலிலிருந்து பிரித்துவிட முடியாது. மிக நன்ருகக் காய்ச்சிப் பிறை ஊற்றிய மறுநாள், மத்திட் டுக் கடைந்து வெண்ணெ யெடுத்து அதனை உருக்கி, நெய் யாகக் காணவேண்டும். 'இருமலம் உடைய'வர்களுக்குப் பாலில் நெய்போலத் தோன்றுகிருன். ஒரு மலம் உடையவர் களுக்கு இரத்தினத்தில் இருந்து ஒளிகாந்துவதைப் போல, பார்த்தமாத்திரத்திலே அவனது பேரருள் உணரத் தெரி கிறது. இதனை அறிந்தவர்கள் — அவன் திருவருளைப் பரு கியவர்கள் அழகு தமிழிலே பாவாக்கிப் பாருக்கழித்தனர்.

"விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே!"

பசியில் இரண்டு வகை. ஒன்று உடற்பசி; மற்ருென்று உள்ளத்தின் பசி! உடற்பசி, மனிதர்களுக்கே மட்டுமல்லா மல் மாக்களுக்கும் உண்டு! அது மிக மிகச் சாதாரணமா னது என்பதையும் — மிருகங்களும் துய்க்கக் கூடியது; அவ் வளவு எளிமையானது — அதிலே ஒன்றும் பெரிய அருமை யில்லை என்பதையும், மனிதன் நன்ருகத் தெரிந்து கொண்ட பின்னரும் கூட, அந்தப் பசி, க்ஷண நேரத்தில் தீரக்கூடி யது அல்லது மாறக் கூடியது என்று உணர்ந்த பின்னருங் கூட, வழி வழி அதிலே மனிதனுக்குள்ள மோகதாகம் குறைந்தபாடில்லை.

புளியம்பழத்தில் ஓடு ஒட்டியிருப்பது போல, மற்றவர் களுக்குத் தோன்றினுலும், பழத்தோடு ஒட்டாத ஓட்டைப் போல இருக்கத் தெரிந்தால், வையகத்திலே யாருக்குமே, எவருக்கும், எப்போதும், எதனுலும் துன்பம் உண்டாகாது.

துளசிதாசருக்கு அவருடைய மனைவியிடத்தில் ஆருத காதல். அது ஒரு நாளும் தீரவே இல்லை. மனைவி ஒரு சமயம் தன்னுடைய தாயார் வீட்டிற்குச் சென்றிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை விட்டுப் பிரிந்திருந்த துளசிதாசருக்கு ஒருகணம், ஒரு யுகம் போலத் தெரிந்தது. நடு இரவு; ஆற்றின் அக் கரையிலே அவளது வீடு. எப்படியும் அவளை அன்றிரவே சந்தித்துத் தீரவேண்டும் என்ற சிந்தனையில், சூழல்கள் அத்தனையும் மறந்து வீட்டை விட்டுத் துளசிதாசர் புறப் பட்டார்.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அந்தகார மான இருட்டு. வான வீதியில் நட்சத்திரங்கள் கூட மினுக் கிடவில்லை. பாதை புரியவில்லை. உடல் உபாதையும் புரிய வில்லை. தட்டுத்தடுமாறி, ஆற்றின் கரைக்குச் சென்றுவிட் டார். அக்கரைக்குச் செல்வதற்கு வழி எதுவென்று ஆலோ சித்தார். பக்கத்தில் இருந்த மயானத்தில் ஒரு பிணம் எரிந்து கொண்டிருந்தது. தன்னுடைய மேல் துண்டிலே நீரை நனைத்து அந்த நீரை எரிகின்ற பிணத்திலே விட்டு நெருப் பை அணைத்தார். அந்தக் கட்டைப் பிணத்தை உருட்டிக் கொண்டு வந்து ஆற்றிலே தள்ளி அதைக் கட்டையாக்கி அந்தத் துணைபற்றி அக்கரை சேர்ந்தார். மறுபடியும் வழியே தெரியவில்லை. விதி, வழிகாட்டியது. மதி அதைத் தொடர்ந்து சென்றது. ஒரே ஒரு இலட்சியம்; எப்படியும் விடிவதற்குள் மனைவியைச் சந்திக்க வேண்டும். அந்த ஒரு நினைவு மட்டுமே உள்ளத்தை உந்த, ஓடோடி நடந்தார். வீடு நெருங்கிவிட்டது. வாசற் கதவைத் தட்டினார். யாரும், உறக்கத்திலிருந்து விழிக்கவில்லை. எந்த வீட்டில், யார்தாம் அந்த நிசியில், கொட்டுகிற மழையில், கும்மிருட்டில் மாப் பிள்ளை வருவார் என்று எதிர்பார்க்க முடியும்? அசதியாக அனைவரும் உறங்கினர். இவருக்கு, வேறு வழி தோன்ற வில்லை. பின்பக்கத்தைச் சுற்றி வந்தார்.

பின்புறச் சுவரிலே ஒரு மலைப்பாம்பு நீண்டு தொங்கி யது. அதனைக் கயிறு போலத் துணையாகப் பற்றிக்கொண்டு, சுவரில் ஏறி, வீட்டின் உள்ளே இறங்கினார். மனையாளின் இருப்பிடம் அடைந்தார். அருகில் சென்றார். அந்த அம்மாள் சுகவாசி; ஆனந்தமயமான நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். அவளது உடலை இவர் தீண்டிய உடன், உணர்வுபெற்று உடன் விழித்தாள். எதிரே நிற்கின்ற கணவனைப் பார்த்து அதிசயித்தாள்.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
8404
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த நடுநிசியில், கொட்டுகின்ற மழையில், அடர்ந்த இருட்டில், எப்படி வந்தீர்கள்?" என வினவினுள்.

தன் ஆசையையும், அடக்க முடியாத மோகதாகத்தையும், அதன் காரணமாகச் சிதையில் எரிந்த பிணத்தைத் தெப்பக்கட்டையாக்கி வந்த விதத்தையும், வாயிற்கதவைத் தட்டியும் திறக்கப்படாததால், மலைப்பாம்பைக் கயிருக்கிச் சுவரைத் தாண்டி வந்த விவரத்தையும், ஆதுரத்துடன் விவரித்தார். அந்த அம்மாள் சிரித்தாள்!

"பாழும் இந்த உடம்பு, தசையும் நாரும், சீயும்நோயும், எலும்பும் தோலும் நிறைந்த ஒன்றுக்கும் பற்ருத இந்த உடம்பின் பேரில் வைத்த அளப்பரிய ஆசையைத் — தணியாத தாகத்தை, ஆண்டவன் பேரிலே வைத்தால் எவ்வளவு ஆனந்தம் கிட்டும்" என்ருள்!

பஞ்சுப் பொதியிலே, சிறு நெருப்புப் பொறிபட்டதும் தீப்பற்றிக் கொள்வது போல, உடற் பசியிலே வெந்து சுவாலையாக (தீயாக) நின்ற உள்ளம், ஆன்மீகப் பசியாக அடுத்த கணமே மாறியது. மனைவியின் பாதத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார்.

"தாயே! நீ என் மனைவியல்ல; மகா உத்தமி! எனக்கு இலட்சியப் பாதையைக் காட்டி விட்டாய்" என்று சொல்லி அவளது எந்த விடையும் தனக்குத் தடை ஆதற்கு முன்னே வீட்டை விட்டுக் கீழே இறங்கினுர். தமது மனப்பூட்டையும் திறந்து பார்த்தார். அந்தகாரத்தில் மூழ்கியிருந்த ஆன்மா, செல்ல வேண்டிய ஒளிமயமான உன்னத இலட்சியப் பாதைக்கு வழிவகுத்துத் தந்தது.

ஆண்டவனது அருளைப்பெற ஆன்மதாகம் கொண்டு, முற்றிலும் உடற்பசி நீங்கி உள்ளப்பசி உருவெடுக்க, எட்டாத தொலைவில் நிற்கும் இறைவனது திருக்கழல்களை நாடி விரைந்து ஓடினுர். உலகிற்கு, உன்னதமான "இராமசரித மானஸம்" என்ற பக்திமயமான அமரகாவியத்தை ஆக்கியருளினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சொல்; ஒரு பார்வை; மனிதனை மிருகமாகவும் மாற்றும்; தெய்வமாகவும் உயர்த்தும். அது எங்கிருந்து வந்தால் என்ன? அது யார் வாயிலிருந்து புறப்பட்டால் என்ன?

நெரூர், சதாசிவ பிரும்மேந்திரருக்குத் தாயின் ஒரு 'சொல்', துறவுக்கு வழிகோலியது. குருநாதரின் "ஒரு வார்த்தை" மகா மௌனத்திற்கு மார்க்கத்தைக் காட்டியது.

'நசிகேதஸ்' என்பான், தன் தந்தையிடத்தில், வேதனைக் குரலோடு, "என்னை யாருக்குக் கொடுப்பாய்; யாருக்குக் கொடுப்பாய்" என்று திரும்பத் திரும்பக் கேட்ட போது, மகா தபஸ்வியான — ஆனால் அதே நேரத்தில் மிகக் கருமியான தந்தை, சினத்தின் எல்லையில்,

"உன்னை யமனுக்குக் கொடுப்பேன்" என்று சொன்ன விடையை மாற்ற முடியாமல் — தவிர்க்க முடியாமல் தவித்த ஒரு அரும்பெரும் காட்சி, கடோபநிஷத்தில் கருத்தொன்றியவர்களுக்கு மட்டுமே புரியும்.

எனவே, எதனால், யாரால், எங்கு, எப்போது? ஞானம் பிறக்கிறது என்பதற்கும், எதன் சேர்க்கையால் — எதன் கூட்டுறவால் எங்கு எப்பொழுது அஞ்ஞானம் கவ்வுகிறது என்பதற்கும் விளக்கம் காண முடியாது.

பிரும்மஞானம் அல்லது பிரும்ம வித்தை என்று சொல்லப்படுகின்ற ஒன்று, "சமதிருஷ்டி" யால் ஏற்படக்கூடியதாகும். வீடும், ஓடும்; நாடும் காடும்; தட்பமும் வெப்பமும்; இனிப்பும் கசப்பும் ஒன்றாக யாருக்கு உணரமுடிகின்றதோ அங்குதான் பிரும்மஞானம் உதயமாகின்றது.

துன்பத்திலும் சிலர் வாடாது வதங்காது, கண்ணீர் விட்டுத் தவிக்காது, சம நிலையில் இருக்கின்றனர். 'சிலர்' என்று சொல்லுவதைவிட, விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலே சிலரினும் சிலராகத்தான் அவர்கள் இருப்பார்கள்.

நகரமே தீப்பிடித்து எரிந்த போது அரண்மனைத் தடாகத்தில் அமைதியாக நீராடிக்கொண்டிருந்த ஜனகரைப் போல எல்லோராலும் பேரமைதியைப் பெற்றுவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனகருடைய அரண்மனைக்கு, ஆத்மஞானி என்று சொல்லப்பட்ட ஒரு சந்யாசி — பற்றற்ற துறவி வந்தார். இராஜ உபசாரத்துடன் ஜனகர் அவரை வரவேற்ருர். உப சரித்தார். அந்தத் துறவிக்கு அரண்மனைத் தடாகத்திலே நீராட வேண்டுமென்று அவா வந்தது. ஜனகர், அவரை அரண்மனை தடாகத்திற்கு அழைத்துச் சென்ருர். சாவகாச மாக இருவரும் தடாகத்தில் நீராடிக்கொண்டிருக்கும் போது மிதிலை மாநகரில் தீப்பிடித்து அந்த மாநகரமே அல்லோலப் பட்டது. குளித்துக்கொண்டிருந்த துறவி, குளிப்பதைவிட்டு ஓடோடிக் கரைக்கு வந்தார். தனது மற்ருெரு காவியுடை யைக் கையிலே எடுத்துக் கொண்டு தண்ணீரிலே இறங்கி ஞர்.

"சுவாமி! எங்கே மேலே சென்று வந்தீர்கள்" என்று ஜனகர் கேட்டார். அந்தத் துறவி சொன்ஞர்:—

"மிதிலை நகரமே தீப்பிடித்து எரிகிறது. அந்தத் தீ எங் கும் பரவித் தடாகத்தரைக்கும் வந்துவிட்டால், எனக்கிருப்ப தோ மாற்றுடை ஒன்றுதான். அது எரிந்துவிடுமே என்று அஞ்சித்தான், எடுத்துக்கொண்டு வந்தேன்" என்று சொன் ஞராம்.

அப்போது அமைதியாகக் குளித்துக் கொண்டிருந்த ஜனகர், "சுவாமி நகரத்தில் உள்ளவர்கள் தீயை எப்ப டியும் பரவாமல் தடுத்துவிடுவார்கள். ஆண்டவன் சித்தம், எதையும் நம்மால் மாற்றி அமைக்க முடியாதே — அவ்வ ளவு தூரத்திலிருந்து இந்தத் தீ வருமா? வந்தாலும், நகர மே, அழிகின்ற போது, நம் மாற்றுடை எம்மாத்திரம்" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்ஞராம். துறவி வெட் கித் தலை குனிந்தாராம்.

இப்போது சிந்திப்போமே! ஆத்மஞானி யார்?—பற்றுக்கள், பாசங்கள் எல்லாம் களைந்துவிட்ட துறவிக்கும்மாற்றுடையை விட மனமில்லை. தனது நகரமே தீப்பிடித்த போதும் அமைதி யாக இருந்த ஜனகரா? அல்லது துறவியா? — இனி யார் ஆத்ம ஞானி என்பது எளிதில் விளங்கிக்கொள்ள முடியுமே!

எதற்கும் கலங்காத, எதனுலும் வேதனையுருத, எந்த நிலையிலும் சஞ்சலம் உருத மனிதர்களும் நம்மிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சரிக்கிருர்கள். நம்மால் அவர்களை விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

“ஒன்று என்று இரு — தெய்வம் உண்டு என்று இரு — பசித்தோர் முகம்பார்” என்று உபதேசித்த அருளாளர்கள் பலர், அமைதிக்கடலிலே ஆனந்தமான முத்துக்குவியலைக் கண்டு எடுத்துக் காப்பாற்றியவர்களாகும்.

தீதும் நன்றும் பிறரால் உண்டாக்க முடியாது. தன்வினையால் — தன் செயலால் உருவாகக் கூடியது என்பதைக் கண்டு கொண்டால் மட்டும் போதாது. நல்லதை நாடவும், தீயதிலிருந்து விடுபடவும் பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுது, பிறவிப் பிணியிலிருந்து விடுபட விமோசனம் கிடைக்கிறது.

‘விமோசனம்’ என்ற சொல்லுக்கு எத்தனையோ ‘பொருள்’ பெறலாம். விமோசனம் இல்லாத வாழ்வு, விடியாத வாழ்வாகிறது. மனிதன், மற்றவருக்குப் பிடிக்காதவனுக இருக்கலாம். படிக்காதவனுகவும் இருக்கக் கூடாது. படிமானம் இருந்தால்தான் வாழ்க்கையிலும் பிடிமானம் இருக்கும். அடிமுதல் முடி வரை உள்ள தத்துவங்கள், கோட்பாடுகள், இலட்சியங்கள், எண்ணக் குவியல்கள், நினைவு அலைகள் எல்லாவற்றையும் புரிந்து தெரிந்து கொண்ட போதிலும் இவை அனைத்திற்கும் அப்பால், எங்கோ ஒன்று, எட்ட முடியாத தொலைவில் நின்று, மனிதன் ஆன்மதாகம் கொண்டால்மட்டும் அருகே நெருங்கக்கூடிய தொலைவில் அது இருக்கிறது. நெருங்கினுல் அது சுடாது. குளிர்ச்சியாக, இனிமையாக, எல்லாம் அதுவாக, இது அதுவாக, அது இதுவாக இருக்கும். அது நிலைத்த ஒன்று என்பது புரிவதுதான் பிரும்மவித்தை. அதைப் புரிந்துகொண்ட பின்னர், சித்த மலம் அறுகிறது. அங்கு ‘நான்’ இல்லை. ஆசாபாசம் ஆணவம் இல்லை. இந்த நிலைதான் அருணகிரிநாதர் சொன்ன,

“யானுகிய என்னை விழுங்கி வெறுந்தானுய்
நிலை நின்றது தற்பரனே” அருள்வாக்கு!

“யான்” — “எனது” என்ற தற்போதங்கள் அறுந்த பின்னர், எதற்கும் அச்சமில்லை. கவலையில்லை. ஆனந்தமயமான உளப்பாங்கு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிய முறையிலே சொல்லப்போனல், "நான் தான் செய்தேன்" — "எனக்குத்தான் தெரியும்" — "எல்லாம் எனது தான்" என்று நினைக்கின்ற நினைப்பில், செய்கின்ற செயலில், பேசுகின்ற பேச்சில் எத்தனையோ சாம்ராஜ்யங்கள், அழிவுப் பாதையை நோக்கி நடந்து விடியாத வாழ்வில் வீழ்ந்து ஒழிந்திருப்பதைச் சரித்திரத்தின் வாயிலாகச் சரியாக அறிந்திருக்கிறோம்.

அன்பையும் பண்பையும் ஒருங்கே வாழ்வின் நிறை பொருளாகக் கொண்ட தர்ம சக்கரவர்த்தியான அசோகன் எங்கே? வையகத்தையே தனதாக்கி, உலகையே ஒரு குடைக் கீழ் ஆண்ட சகரன் எங்கே? பல்லாயிரக்கணக்கான மனைவிகளை அடைந்து, உலகம் போற்றும் — உலகம் கடவுளென மதிக்கும் இராமனையே பெற்றெடுத்த தசரதச் சக்கரவர்த்தி எங்கே? எங்கே??

தர்மத்தை நிலைநாட்டியவர்கள் கூட ஒருநாள் மடிந்து தான் போகிறார்கள். ஆனல் அவர்கள் எண்ணிய எண்ணங்கள் மூலமாக உருப்பெற்ற செயற்பாடுகள், இந்தப் பரந்த கடல் சூழ்ந்த உலகம் இருக்கின்றவரைக்கும் நிலைத்து நிற்கும். அவர்கள் புகழ் பேசும்.

தன்னைமட்டும் நோக்காது, தரணியின் நலத்தை—அதன் இன்பத்தை எண்ணிப் பார்த்தவர்கள், மாமன்னர்களாக இருந்தாலும் அவர்களை இராஜரிஷிகள் என்றும், ஆத்மஞானத்தையுணர்ந்த அருந்தவச் செல்வர்கள் என்றும், மகான்கள் பாராட்டியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் 'உயர்வுள்ளல்' என்ற ஒன்றுதான்! உயர்வான எண்ணங்களையே எண்ணுதல். அப்படி எல்லோராலும் எண்ணத்தான் முடியுமா? எண்ணினாலும் நடக்குமா?—

மகாகவி பாரதியார், "எண்ணிய முடிதல் வேண்டும்" என்று இறைவியிடம் கேட்டார். அதோடு நிறுத்தியிருந்தால், யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்வேண்டலாம். வேண்டுதலும் பலிதமாகலாம் என்று ஆகிவிட்டால், 'உயர்வுள்ளல்' கொண்ட நெஞ்சமோ, நல்லதையே நாடும். தீய எண்ணம் கொண்ட நெஞ்சமோ, அல்லாததையே வேண்டிக் கொண்டிருக்கும். அப்போது, "எண்ணிய முடிதல் வேண்டும்" என்று வேண்டிவிட்டால் போதுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் நன்ருக ஆலோசித்து, 'எண்ணிய முடிதல் வேண்டும்' என்று கேட்டவுடனே, மறுவரியிலேயே, "நல்ல னவே எண்ணல் வேண்டும்" என்று விளக்கம் கொடுத்தார்.

அடுத்து, உரமான நெஞ்சம் வேண்டும் என்ற ஆவலில், "திண்ணிய நெஞ்சம் வேண்டும்" என்று கேட்டார். திண் ணிய நெஞ்சம் என்ருல், ஹிட்லரைப் போல, முசோலினி யைப்போல அழிவுப் பாதையைத் தாமாகவே தேடிக்கொள் ளும் அந்தத் திண்ணிய நெஞ்சங்களா? அல்ல; அல்ல,

"திண்ணிய நெஞ்சம் வேண்டும்",

அதன் ஊடே,

"தெளிந்த நல் அறிவும் வேண்டும்"

என்று சொல்லி அந்தத் தெளிந்த நல்லறிவு என்ற சொல்லிலே ஆன்மஞானத்தை அரிதாக இழையோடச் செய்துவிட்டார். மிக எளிய பாடல்தான். ஆனுல் அதிலே உள்ள தத்துவமோ அருமையானது.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லனவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்",

தாயே! அகில லோக நாயகியே! பரமேஸ்வரியே! பாவங் கள் ஒன்றல்ல—இரண்டல்ல—சங்கிலித்தொடர்போல செய்யத் தகாத செயல்களைச் செய்து அதனுல் — அவற்றின் பரிசாகப் பாவமூட்டைகளைச் சேர்த்துக்கொண்டு வந்துள் ளேன்.

மூங்கிலிலே மேலே தூங்கும் பனிநீர், கதிரவனைக் கண்டால், காயும் பனிநீராக ஆகிவிடுதல் போல நீ பெற்ற பிள்ளையாகிய என்மீது இரக்கங்கொண்டு, நான் விரும்புகிற — உன் முன் என் பாவங்கள் எல்லாம் கரைந்தோடிமட்டுமல்ல; பறந்தோடி யும் போகவேண்டுமென்று பாடுகிருர்.

"பண்ணிய பாவங்கள் எல்லாம்
நண்ணிய நின்முன் இங்கு
நலிதல் வேண்டும் அன்னய்"

என்று முடிக்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகம், சொர்க்கம் என்ற இரண்டையும் சைவமும், வைணவமும், சித்தாந்தமும், வேதாந்தமும் ஒன்று கலந்து ஒத்துக்கொள்ளுகின்றன. மனிதன், நூறு புண்ணியங்கள் செய்திருந்தால் அதற்கேற்ப நற்கதியும், ஒரு பாவம் செய்திருந்தால்—செய்திருந்தால் மட்டுமல்ல; பாவத்தைக் கற்பனை பண்ணியிருந்தால் கூட — அதற்கேற்ப நரகமும் மனிதன் பெற்றே தீருவான் என்று சைவசித்தாந்தம் சாதிக்கின்றது.

நூறு புண்ணியத்திலிருந்து ஒரு பாவத்தைக் கழித்து, மீதம் 99 புண்ணியங்கள் என்று இறைவன் கணக்கெடுத்துக் கொள்ளமாட்டான். ஒன்றுயினும் பாவம், பாவம்தான். அதற்கு மன்னிப்புக் கிடையாது. அதிலிருந்து மீள, விமோசனம் கிடையாது என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லி, பாவத்தின் பக்கம்கூட மனிதன் திரும்பிப்பார்க்கக் கூட அஞ்சும் வகையில், மனிதனை மாண்புடையவனுக நடக்கச்செய்ய வழிகோலுகிறது—சித்தாந்தம்!

இதற்கும் மிஞ்சி சைவசித்தாந்தம், நரகத்திற்கும் ஒரு விளக்கம் தருகின்றது.

ஆண்டவன், மனிதனுக்கு நரகத்தை அளிப்பது "அவன் வருந்த அல்ல -அவன் திருந்த" என்கின்றது.

தாய், தன் குழந்தைக்கு விளக்கெண்ணெயைப் புகட்டுவது, புகட்டும்போது அந்தக் குழந்தை அதனில் சுவையில்லாது அழுது அடம்பிடித்தாலும் தாய், விடாது விளக்கெண்ணெய்புகட்டுவது அக்குழந்தைபுஷ்டியுடன் வளரவேண்டும் என்பதற்காகவேதான். அதுபோலத்தான் ஆண்டவன், நரகத்தை மனிதனுக்களித்து அவன் அதனை விரும்பாது போனாலும், அவன் அதனை வெறுத்தாலும், அந்தக் கொடுமையை அவனைத் துய்க்கச்செய்து, செய்து வந்த வினைகள் நீங்கிய பின்னர், என்றும் இன்பமயமான நற்கதிக்கு இட்டுச் செல்லுகிருன். மலங்கெடுத்து மலரடி காட்டுகிருர்.

சித்தமலத்தை இறைவன் மணிவாசகருக்கு, அறுத்து விட்டான். செம்மை நெறி படர்ந்தது. உண்மைப் பொருளை உணர முடிந்தது. உள்ளம் இறையருளுக்கு உருகியது. கனிவின் முதிர்விலே அந்த இறைவன்பால் ஆருக்காதல், தீரா அன்பு, பேரா உணர்வு, மாருமனம் கொண்டு பாடுகிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ! தோழி!! கேட்டாயோ செய்தியை! என்னைப் பைத்தியமாக ஒருவன் அடித்து விட்டான். நான் நானாக இல்லை. பின்னே – என்னவென்று பேசுகிறாயோ? 'நான்' இல்லாத இடத்திலே அவன் தானாக நிற்கிறான். அந்த அளவிற்கு எண்ணக்கூடிய வகையில், என்னை அவன் பித்தாக்கி விட்டான். அவன்தான் யார் என்று தெரியுமோ? அவன்தான், தென்னனாகிய என் மன்னன். திருப்பெருந்துறையை உறைவிடமாகக் கொண்டவன். உருவும் அற்றவன். ஆத்மாவுக்குள்ளே நாதனாக இருப்பவன். அவன் எனக்கு, யாருக்குமே காட்டாத பொருளை யெல்லாம் காட்டினான். சிவமாகிற மங்கலப் பொருளையும் காட்டினான். தன்னுடைய திருவடி மலர்களையும் காட்டினான்.

அந்தத் திருவடி மலரை நான் கண்டவுடனே எனக்கு எது வேண்டும் என்பது அவனுக்குத்தானே புரியும். எனக்குத் தேவையான அவனது கருணைத் தேனையும் அள்ளி அள்ளிப் பொழிந்தான். நான் என்ன ஆனேன் என்பதுவும் என் நிலை — தோற்றம் என்ன ஆனது என்பதுவும் என்னால் விளங்கிக்கொள்ள முடியாத வகையில் இருக்கின்ற என் இருப்பைப் பார்த்து; உற்றார், உறவினர், ஊரார், மற்றார், நாட்டார், நகரத்தார் அனைவருமே என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். அவர்கள் சிரித்தால் என்ன ஆகிறது. அவர்கள் சிரித்துக் கொண்டே இருக்க, நானோ மேலை வீடு என்ற சதா ஆனந்தம் தருகின்ற சாயுஜ்யப் பெரும் பேற்றைக் சடுதியிலே அடைந்து முக்தியிலே திளைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த வகையில் என்னை ஆண்டவன், அவனது கருணை இவற்றை யெண்ணி நான் ஆனந்தக்களிப்பிலே இன்பமயமான எக்களிப்பிலே அம்மானை ஆடுகின்றேன்'' என்று ஒரு அகத்துறை இலக்கியத்தை அன்பு நாடகமாக்கி நமக்குத் தருகிறார் — மணிவார்த்தை கொண்ட மாணிக்கவாசகர்!

''கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
நீட்டார் மதிப்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத்தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த
ஆள்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்''

என்று நயம்பட நற்பாடல் நவின்றார். இறைவனுக்கும் தமக்கும் உள்ள உணர்வு, உறவாகப் பரிணமித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர், பாண்டிய மன்னனிடத்திலே அமைச்சராகவே காலம் கழித்திருந்தால், மண்ணகத்தில் எத்தனையோ மாமன்னர்கள் பிறந்து இறக்க, அவர்களுக்கு எத்தனையோ அமைச்சர்கள் ஆலோசனை கூற, அப்படி ஆலோசனை கூறியவர்களும் ஒரு நாள் இறந்து, ஒரு நாள் பிறந்து, "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார்" என்று தேவார ஆசிரியர் சொன்னது போல, மாணிக்கவாசகரும், பிறந்து, இறந்து, மறுபடியும் பிறந்து இருந்து, இறந்து இதனையே தொழிலாகக் கொண்டிருக்கக் கூடும்.

திருவாசகம்பாடி, அதன் பொருள்கேட்ட, தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர்க்கும் "இதுதான் பொருள்" எனத் தில்லைக்கூத்தன் திருவடியைக் காட்டிவிட்டு, திருவடியோடு இரண்டற ஒன்றியிருக்க முடியாது.

'இகவாழ்வு' என்ற இருளிலிருந்து அருள் ஞானச்செல்வர் என்ற ஒளிக்கு வந்தது, இவரது வாழ்வில் ஏற்பட்ட மாபெரும் விமோசனம் ஆகும். சொல்லி வைத்துக்கொண்டு வருவது அல்ல விமோசனம். வேண்டும் போதும் வருவதல்ல விமோசனம். 'விமோசனம்' என்பதன் பொருளே, "விடிவு" என்பதாகும். அந்தகாரம் நிறைந்த இருளுக்குப் பின், ஒளிமயமான உலகை நாம் சந்திக்க இருக்கின்ற தருணத்தில், வையகத்திற்கே காலைப்பொழுது உதயமாகிறது. "இருளில் இருந்து என்னை ஒளிக்குக் கொண்டு வா" என வேதகால ரிஷிகள் வேண்டிய அந்தக் காலைக்குப் பெயர், 'விடியற்காலை' என்பது போல, வாழ்வில் கண்ட பல போராட்டங்களிலிருந்து — இடர்பாடுகளிலிருந்து—இருளில் இருந்து — விடிவுகாணுவது தான் 'விமோசனம்'. மாணிக்கவாசகரது வாழ்விற்கு 'விமோசனம்' தர நினைத்த இறைவன் — அவரது அயரா அன்பினை உணர்ந்த சிவபெருமான், பதவியிலிருந்து அவருக்கு விமோசனம் தர எண்ணி, குருந்த மரத்தின் நிழலில், குருமூர்த்தமாக எழுந்தருளி, வீதிவழி சென்ற அவரை இவன் எப்போதோ அவருக்கென்று விதித்த விதியின்படி, "அரஹர" என்ற ஒலியை, சிஷ்யர்கள் மூலம் எழுப்பி, அவரது சிந்தையைத் திருப்பி, அவரது மதியை, நல்விதியின்வழி இழுத்து, அவருக்கு 'விடிவு' காலமாகிய நற்கதியை, நலம்பெற — நானிலமும் வளம்பெற நல்கினார்.

பிறக்கும்பொழுதே அல்லது பிறப்பதற்கு முன்பே, அருளை யாரொருவர், கூட்டிக் கொண்டு பிறக்கிறார்களோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் "கருவிலே திருவுடையவர்" என்று சொல்லுவது மரபு! அப்படிக் கருவிலே திருவுடையவர் திருஞானசம்பந்தர்.

தந்தையார், சீர்காழிக்கு அருகிலே உள்ள தோணியப்பர் திருக்கோயிலுக்கு நீராடச் சென்றார். மூன்று வயதுடைய தமது குழந்தையாகிய ஞானசம்பந்தரையும் அழைத்துச் சென்றார். குழந்தையைத் தோணியப்பர் கோயிலின் திருக்குளக்கரையிலே வைத்துவிட்டு நீரிலே தோய்ந்தார். நீரிலே மூழ்கிக் குளித்த தந்தையைக் காணாது, தனயன் அழுதான். இந்த அழுகை, அந்தக் கோயிலில் உள்ள அம்மை அப்பன், திருச்செவியிலே விழுந்தது.

உடனே இருவரும் ரிஷபவாகனத்தில் காட்சிதந்து, பொற்கிண்ணத்தில், ஞானசம்பந்தமுடைய குழந்தைக்கு ஞானப்பாலை ஊட்டினார்கள். குழந்தையின் அழுகை நின்றது. அம்மையப்பனும் இருக்கை சேர்ந்தார்கள். தடாகத்திலே நீராடிய தந்தை, கரை ஏறி வந்தார். குழந்தையின் வாயிலே பால் வடிந்து கொண்டு இருந்தது. பால் ஏது? யார் தந்தது? என்றெல்லாம் தந்தை அதிசயித்துக்கேட்டார். அம்மையப்பன் ஊட்டிய ஞானப்பாலை உண்ட ஞானசம்பந்தக் குழந்தை ஆண்டவனது ஐந்தொழில் வல்லமையையும் அருமையாக அனைவர் மனதிலும் படியும்படி 'பா' ஆக்கித் தேவாரமாகப் பாடியது.

"தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே"

தோடுடைய செவி — வந்தது அம்மையும் அப்பனும்—அம்மையப்பனது இடப்பக்கம் குழந்தைக்கு முதலிலே தெரிந்திருக்கிறது. தெரிந்த உடன் அந்தத் திருமுகத்திலே ஒளிப்பிழம்பாக ஒளிர்ந்ததோடு முதலிலே கண்ணுக்குப் புலப்பட்டும் இருக்கின்றது. இது படைத்தலைக் காட்டுகின்றது.

"விடையேறி ஓர் தூவெண்மதிசூடி" — ரிஷபவாகனத்தின் மேல் ஆரோகணித்துள்ள ஆண்டவன், தலையிலே சந்திரனைச் சூடிக்கொண்டதும், குழந்தைக்கு அழகிய காட்சியாக மனத்திலே பதிய, அடுத்து இந்நிலையை விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையேறி வந்ததும், சந்திரனைத் தலையிலே தாங்கி நிற்பதும், காத்தல் தொழிலைக் குறிக்கின்றது.

'காடுடைய சுடலைப் பொடி பூசி' இறைவனது வண்ணத்தைத் தான் கண்டவாறு குழந்தை சொல்லியது. இதற்கு மேலே உள்ள நயம், "முடிசார்ந்த மன்னரும், முடிவிலொரு பிடிசாம்பலாகப் போவார்" என்பதை உணர்த்தி, ஆண்டவனது அழித்தல் தொழிலை அரிதாகப் புலப்படுத்துகின்றது.

"என் உள்ளங்கவர் கள்வன்" என்கின்ற பொழுது—எப்படித் தன்னுடைய உள்ளத்தை அவன் கொள்ளை கொண்டான் என்பதைச் சொல்லுவதோடு, கள்வனது தொழில்—எதையும் மறைத்தல் என்பதைப் புரியவைத்து, இறைவனது திரோதான சக்தி அல்லது மறைத்தல் தொழிலை மாண்பாக உணர்த்துகிறது.

முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த — எத்தனையெத்தனை பிறவி எடுத்து வந்தேனோ அத்தனை பிறவிகளிலும் இறைவனை ஏற்றிப் போற்றி இறைஞ்சித் துதிக்க அருள் செய்த — என்று சொல்லி, இறைவனது அனுக்கிரக அல்லது 'அருளல்' தொழிலைத் தெளிவாக்குகிறது.

சிருஷ்டி -- படைத்தல்
ஸ்திதி — காத்தல்
சங்காரம் — அழித்தல்
திரோதானம் — மறைத்தல்
அனுக்கிரகம் — அருளல், என்ற பஞ்சகிருத்தியங்களாகிய அவனது ஐந்தொழில் வல்லமையை அருமையாகத் தேவாரப் பாடலாக ஆக்கித் தந்து, பெருமையை உலகிற்குத் திருஞானசம்பந்தக் குழந்தை அளிக்கின்றது. இதே ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்து அருட்பாடல்கள் ஆயிரம் ஆயிரம் வழங்கி, ஒவ்வொரு தலத்திலும் அந்தந்த இறைவன் இறைவியை நெஞ்சார நினைந்து, தலையாரக்கும்பிட்டு, வாயார வாழ்த்திய வகையில் மனிதர்களை நன்னெறிப் படுத்துவது, நாதன் நாமமாகிய 'நமசிவாய' தான் என்று தன்னுடைய தேவாரத்தின் மூலகாக நமக்கு உணர்த்துகிறார். வேதம் நான்கிற்கும் மெய்ப்பொருளாவது அந்த 'நமசிவாய' தான் என்றும் நமக்கு உணர்த்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நின்று ஓதுவார்"— சும்மா வெறுமனே அவசர அவசரமாக அள்ளித் தெளிக்காமல் — ஆண்டவனை அவனது நாமத்தைச் சொல்லுகின்ற போது — தன்னை மறந்த நிலையிலே கண்ணீரும் ஆறுகப் பெருக வேண்டும். அப்படித்தான் பெரியவர்கள் வழிபட்டிருக்கிறார்கள்.

"அரும்பொனே மணியே என்னன்பே அன்பான
அறிவே என்னறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் ஆடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த்து இருகை கூப்பி
விண்மாரியென என்னிரு கண்மாரி பெய்யவே
பேசற்றயர்ந்தேன் யான்
இரும்புநேர் நெஞ்சக் கள்வனுனாலும் உனை
இடையிட்டு நின்றதுண்டோ
என்று நீ அன்று நான் உன்னடிமையல்லவோ
யாதேனும் அறியா வெறுந்
துரும்பனேன் எனினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே"

என்றெல்லாம் தாயுமான அடிகள் போன்றவர்கள் கண்ணீர் விட்டுக் கதறி — அலறிப் போற்றி வழிபாடு செய்திருக்கிறார்கள். ஞானசம்பந்தரும், மனித மனங்களுக்கு, இறைவனிடம், காதல் வேண்டும்; கனிவு வேண்டும்; கசிவு வேண்டும்; இந்த மூன்றும் முறையே பெற்றுவிட்டால் வழிபாடு சிறக்குமெனச் சொல்லுகிறார்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே"

என்று சொல்லி, ஆண்டவன் நாமத்தின் பெருமையை அருமைப் பாட்டை அருளுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினைமாளும்"

என்பது திருமூலர் வாக்கு.

திருச்சாய்க்காடு எம்பெருமானுக்கு, மலர்களைத் தலையிலே தாங்கிச் சென்று, திருக்கோயிலிலே ஓதப் பெறுகின்ற தேவார, திருவாசக, திவ்யப் பிரபந்தங்களைச் செவியிலே கேட்டு, கேட்டவற்றை வாயினாலே பாடி நல்வினை பெற்று விடலாம். மனிதன், நல்வினை பெற எவ்வளவு சுலபமான வழி! – சொல்லுகிறார் ஞானசம்பந்தர்! நம்மையும் அதற்குச் சம்பந்தமுடையவர்களாக ஆக்குகின்றார்!

ஏ! நல்ல நெஞ்சே! உனக்கு இந்தத் தரையிலே, எத்தனை நாள் இருப்பாய் என்று தெரியாது. வேறு ஏதேதோ தெரிந்திருக்கலாம். ஆனால், என்று இத்தரையை விட்டு நீள் பயணம் புறப்படுவாய் என்றும் தெரியாது. இது தெரிந்தவன்;உன் இருப்பும் பொறுப்பும்,வரத்தும் போக்கும் தெரிந்து புரிந்தவன், இந்தப் பெரிய வையகத்தில் ஒருவன் உண்டு. அவன்தான், திருச்சாய்க்காடு எம்பெருமான். அவனைப் பூவோடு வழிபடு. அவன் புகழ் நாமத்தைச் செவியிலே கேள். நீயும் அதனைத் திருப்பிச் சொல்லு. அப்போது உன் தீவினை மாளும். உன்னை நல்வினை ஆளும், என்று நம்மையும் ஆற்றுப்படுத்துகிறார் திருஞானசம்பந்தர்!

"நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும், சாய்க்காட்டு எம்பெருமானுக்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாம் நல்வினையே!"

நல்வினைப் பயனாக நாம் எடுத்த பிறவி ஈடேற்றமடைகின்றது. அதுதானே பிறவியின் குறிக்கோள்! இந்நூலின் துவக்கத்திலே, ஏன் பிறந்தோம்? எதற்காகப் பிறந்தோம்? என்றெல்லாம் கேட்டோமே – அதற்கு விடையாக நாம் செய்கின்ற செயல் மூலமாக – எண்ணத்தின் வாயிலாக, வழிபாட்டின் உறுதுணையிலே நல்வினைப் பயன் பெற்று, நாதன் திருவடி கண்டு, மற்றன மறந்து, உற்றது உணர்ந்து, கற்ற கல்வியின் பயனால் பெற்ற பேறுகளும், எல்லாமும் அவன் தந்தது — எதுவும் அவன் அருள் — என் செயல் எதுவும் இல்லை என்று உணரப் பெற்ற நிலைக்கு ஆளாகும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு வரவேண்டிய உயர்வுகள், ஏற்றங்கள், இன்பங்கள் அனைத்தும் இவனைச் சரணடைகின்றன. அனைத்தையும் தரக்கூடிய ஆற்றல், அவன் ஒருவனுக்குத்தான் உண்டு.

இதனைக் கண்டு கொண்ட சிவஞான போதம்,

"மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம்தானும்
அரனெனத் தொழுமே" என்று கூறுகிறது.

இதனையே சிவஞான சித்தியாரும்,

"யாதொரு தெய்வம் கண்டீர் அங்கே அந்தெய்வமாகி,
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்றும், முடிந்த முடிபாகக் கூறுகின்றது.

விஞ்ஞானத்திற்கு எட்டாத பல பேருண்மைகள் மெய்ஞானத்தின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

"Where Science ends there Religion begings"

எங்கே விஞ்ஞானம், செயல் இழந்து முடிவுற்று நிற்கின்றதோ அங்கிருந்துதான் 'சமயம்' தோன்றுகின்றது என்றும்,

"Religion without religion science is lame;
Science without religion is blind."

"விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி;
சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு"

என்றும், அறிஞர்கள் நன்கறிந்துள்ளனர்.

கால் இல்லாத நொண்டி, உயிர் வாழ்ந்துவிட முடியும்-கட்டைக் காலின் உதவியால்! கண் இல்லாதவன் கபோதி. அவன் வாழ முடியாது. 'சமயம்' கண் போன்றது. அந்த இரு கண்களே சைவமும்—வைணவமும்.

"அறிவாலறிந்துன் இருதாளிறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் களைவோனே"

என அருணகிரி அருளுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவால் அறிந்து பார்த்தால் மெய்ஞ்ஞானத்தின் பரிணமம், விண்ணையும் மண்ணையும் ஒன்றாக இணைத்துக் காட்டுவதை நாம் அறிய முடியும். 'அஷ்டமா சித்தி' என்று சித்தர்கள் கையாண்ட ஒன்று விஞ்ஞான அறிவிற்கு எட்டாதது.

(1) அணிமா — பூதவுடலை அணுப்போன்று சிறிதாக்குவது,
(2) மகிமா — பூத உடலை, மேரு போன்று பெரிதாக்குவது,
(3) இலகிமா — இந்த உடலைக் காற்றுப் போல எளிதாக்குவது,
(4) கரிமா — உடலை மிகப்பெரிய பளுவாக்குதல்,
(5) பிராப்தி — எல்லாவற்றையும் தனது ஆக்கி ஆட்சி செலுத்துவது,
(6) வசித்துவம் — எல்லோரையும் தன்வயப்படுத்துதல்,
(7) பிராகாமியம் — கூடுவிட்டுக் கூடுபாய்தல்,
(8) ஈசத்துவம் — விரும்பியதெல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்.

இந்த எட்டு சித்திகளும், விஞ்ஞானத்திற்கு எட்டாத, கண்டுபிடிக்க முடியாத, விஞ்ஞானக் கட்டிற்கு உட்படாத, பேரதிசயச் செயல்களாகும்.

இவற்றிற்கும் மேலே, விஞ்ஞானத்திற்கு எட்டாத மர்மங்களுக்கு, எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னே உள்ள சமய இலக்கியங்கள், சரியான விடைகண்டு, பொருளுணர்ந்து பகர்ந்து இருக்கின்றன.

சினத்தின் மிகுதியிலே மனிதன், அடுத்தவனுக்கு "இம்மி கூடத் தர முடியாது" என்கிறான். அந்த 'இம்மி' என்றால் எவ்வளவு? என்பதொன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

தீராக் கோபத்தில் மனிதன், மற்றவனைப் பார்த்து "தூள் தூள்" ஆக்கி விடுவேன் என்கிறான். அந்தத் தூள் என்று சொல்லக்கூடியதுகளுக்குரிய அளவும் நமக்குப் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசா நிகளந் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்கிறுர் — அருணகிரியார் — கந்தரனுபூதியில்! ஆசையாகிய தளை, தூள் தூளாகத் தெறித்துப் போன பின்னர், பேசா அனுபூதியாகிய நிர்விகர்ப்ப சமாதி நிலையாகிய 'மகாமௌன நிலை' வந்து எய்தியது எனச் சொல்லுகிறுர். அங்கும் தூளுக்கு விளக்கம் இல்லை.

அடுத்து, அணுவைப்பற்றி, இருபதாம் நூற்றுண்டு விஞ்ஞானி, அலசி ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வந்த நாளில் எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் என்று எத்தனையோ கோடிப் பொருள்கள், அணுவிற்குள் இருப்பதாகக் கண்டு பிடித்திருப்பதை, இன்றைக்கு 600 அல்லது 800 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அருளாளர், மணிவாசகர்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி
ஒன்றனுக் கொன்று, நின்றெழில் பகரின்
நூற்றெரு கோடியின் மேற்பட விரியும்"

என்று, அணுவின் தன்மையை, அதன் மிகப் பெரிய எண்ணிக்கையின் விரிவை, எடுத்து இயம்புகிறுர்.

இங்கும் அணுவிற்குரிய அளவு குறிப்பிடப்படவில்லை. தேவாரப் பேராசிரியராகிய அப்பர் பெருமான், இறைவனுக்கு இலக்கணம் சொல்லுகின்றபோது,

"அரியானை, அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை, அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனை"
என்று பாடினுர்.

அறிய முடியாதவன்; அளவிற்கு எட்டாதவன்; செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் உள்ளத்தில் உறைபவன், ஆறுமறைகளின் உட்பொருளாக இருப்பவன், அணுவைப் போல சிறியதாகவும் தோன்றுபவன். யார்க்கும் புரிந்து கொள்ள முடியாத தத்துவப் பொருள்களை உடையவன் என்று சொன்னுரே, தவிர அப்பரும் அணுவிற்கு விளக்கம் சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழில் அருணகிரிநாதரும், ''பரமகுருவாய் அணுவில் அசைவாய்'' என்ருர்! அங்கிருந்தும் நமக்கு விளக்கம் வரவில்லை. கம்பர் தம் இராமாயணத்தில்,

''சாணிலும் உளன் தண்மை அணுவைச்
சத கூறிட்ட கோணிலும் உளன்''

என்று சொல்லுகிருர். நரசிம்மம் தூணிலும் இருக்கிறது. துரும்பிலும் கலந்திருக்கிறது. அணுவை நூறு கூறிட்ட ஒரு பகுதியிலும் இருக்கிறது என்ருரே தவிர அந்த அணு எவ்வளவு என்று சொன்னுல்தானே அந்த அளவில் நூறில் ஒன்று எவ்வளவு என்று கண்டுபிடிக்க முடியும்?

கடைசியாக ஒரே ஒருவர், தமது காப்பியமாகிய ஒரு பெரு நூலிலே, கலை விளக்கம்பற்றிக் காட்டுகின்ற பொழுது, 7 கோல் அகலமும், 8 கோல் நீளமும் கொண்டதாக, மாதவியின் அரங்கேற்றத்திற்காக அலங்கார ஆடல் அரங்கு அமைக்கப்பெற்ற போது அதிலே 'இம்மி' 'துகள்' 'அணு' இவற்றின் அளவை நமக்குப் புரிய வைக்கிருர்.

எட்டு அணுக் கொண்டது ஒரு துகள்;
எட்டுத் துகள் கொண்டது ஒரு இம்மி;
எட்டு இம்மி கொண்டது ஒரு எள்;
எட்டு எள் கொண்டது ஒரு நெல்;
எட்டு நெல் கொண்டது ஒரு பெருவிரல்.
இருபத்துநான்கு பெருவிரல் கொண்டது ஒருதலைக்கோல்.
இப்படிப்பட்ட தலைக்கோலினுல் 7 கோல் அகலமும் 8 கோல் நீளமும் கொண்டு மாதவியின் ஆடலரங்கு அமைந்தாக சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் செப்புகின்ருர்.

மின்மினிப்பூச்சிக்கு, இரவில், ''ஜிவ்''வென்று பறக்கும் பொழுது மின் ஒளி ஒன்று எங்கிருந்தோ சேர்கிறது. இந்த ஒளி, எங்கிருந்து எப்படி உண்டாகிறது என்று விஞ்ஞானத்திற்கு விளக்கம் கிடைக்கவில்லை.

மனம், அதன் இயல்பு, செயல்பாட்டு முறை முதலியவைகளைப் பற்றியும், விஞ்ஞானத்திற்கு எட்டாத பல மர்மங்கள் இன்னும் புதிராகவே இருக்கின்றன. பாம்பைக் கண்டதும் பயமும், மலரைக் கண்டதும் மகிழ்ச்சியும், இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவகை இயல்பும் எப்படி ஏற்படுகின்றது? என்பதுவும் விஞ்ஞான அறிவிற்கு இன்னும் கிட்டாத விடையாகவே இருக்கின்றது.

யுத்தத்தில் ஆண்கள் அதிகமாக மடிகின்றபொழுது, அது எந்த நாடாக இருந்தாலும், அப்போது அங்கு பிறக்கின்ற குழந்தைகள் பெரும் பகுதியும் ஆண் குழந்தைகளாகவே பிறக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இதன் காரணத்திற்கும் உற்ற பதில் பெற்றபாடில்லை. ஒரு சில பறவைகளைக் கண்காணுத பிரதேசத்தில் கொண்டுபோய்விட்டாலும் அவைகள் நாடுவிட்டு நாடு கடந்து, தன்னுடைய இருப்பிடத்திற்குத் திரும்பி விடுகின்றன. பட்டப் பகலிலே ஒரு நகரத்தைச் சுற்றி வரும் மனிதனுக்கு, தான் எங்கிருந்து புறப்பட்டோம் என்கிற 'இலக்கு'ப் புரியவில்லை. பறவைக்குள்ள புரிந்து கொள்ளுகிறதன்மை, மனிதனுக்கு ஏன் ஏற்படவில்லை? என்பதுவும் இன்னும் தீர்மானிக்க முடியாத விஷயமாகவே இருக்கின்றது.

மனிதன் எவ்வளவுதான் ஆற்றல் பெற்றிருந்தாலும் இதற்கு முந்திய பிறவியும், அடுத்து எடுக்கப்போகின்ற பிறவியும் தெரிந்து கொள்ள இயலாமையிலே இருக்கிறுன். தத்துவங்களும், சாத்திரங்களும், தோத்திரங்களும் ஓதி உணர்ந்திருந்தாலும், ஓதாது உணரப்பெற்றிருந்தாலும் இப்பிறவி மட்டும்தான் தெரியுமே தவிர, முந்திய பிறவியும், இனி வர இருக்கின்ற பிறவியும் உணரமுடிவதற்கில்லை. இது கருதித்தான் திருநாவுக்கரசர்,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி
என்மனத்தே வழுவாதிருக்க நீ வரந்தர வேண்டும்"

என்று வேண்டினுர்.

அடிபற்றி வாழ்ந்தால் அனைத்தும் பெறலாம் என்பது அவரது தேவாரக் கருத்து. இறைவனது கொய்மலர்ச்சேவடியைத் தஞ்சமெனு நெஞ்சத்தில் கொண்டதால் நான் யார்க்கும் அடிமை இல்லை; யமன் என்னிடம் வரமாட்டான்; நரகம் எனக்குக் கிடையாது. பிணியும் கிடையாது; துன்பம் துயரம் ஏமாற்றம் எதுவும் அண்டாது. எந்த நாளும் இன்பம் தவிர இன்னல் கிடையாது. நான் பற்றிப்பிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இருக்கிருனே அவன் யாருக்கும் அடிமையில்லா தவன். அனைத்து உயிரையும் அடிமை கொண்டவன். அவன் சேவடிச்சிறப்பால்தான் எல்லா நல்ல தன்மைகளும் எனக்கு வந்தன; என இன்பமுடன் பாடுகிருர்.

"நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாம் யார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழை யோர்காதிற்
கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினேமே"

யாரும் சொல்லத் துணியாத கருத்தை — இச்சகத்தில் பிறந்தால், மாயையின் மகிமையால் துன்பம்தான் தொடரும் என்ற கருத்தை முறியடித்து, இன்பமே எந்நாளும் எனத் துணிந்து கூறுகிருர். நாம் யாருக்கும் அடிமையில்லை என் றும், ஆண்டவனுக்கேதான் அடிமை யென்றும், ஆன்மீக விடுதலை உணர்வோடு, ஒப்பற்ற உயர் நிலையில் பேசுகிருர்.

இந்திரனது செல்வத்தை ஒத்தது — சங்க நிதி—பதும நிதி என்ற இரண்டும். அது எத்தனை எத்தனை கோடிகள் கொண்டதோ? — நமக்குத் தெரியாது. அளவைக்கும் அடங் காதது. அந்த இரு நிதிகளையும் தனக்குத் தந்தாலும் அதோடு விண்ணையும் மண்ணையும் தன்னையே ஆட்சிபுரியச் செய்தா லும், அந்தச் செல்வம் பொங்குவார் செல்வம் அல்ல; அது மங்குவார் செல்வம்தான், என்று சொல்லி, செல்வத்தின் நிலையாமையை உணர்த்தி அதே நேரத்தில், அங்கங்கள் தொழு நோயின் காரணமாகக் குறைந்து, சீழ்வடிந்து, துர் நாற்றம் வீசுகின்ற உடம்போடு, பசுவை உரித்து உண்ணு கின்ற சேரிவாழ் புலையர்களாக இருந்தாலும்,அவர்கள், கங் கையைச் சடையில் கொண்ட பங்கமிலாப் பரம்பொருளுக்கு அன்புடையவர்களாக இருப்பார்களேயாளுல், அவர்கள்தான் தாம் வணங்கும் கடவுளர் என்று கூறுகின்ற உள்ளப்பாங்கு, உறுதிப்பாடு வேறு எவருக்கும் ஏற்படாத ஒன்று.

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வாஞளத் தருவரேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்த ரல்லராகில்
அங்கமெலாம் குறைந்தொழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே''

முன்னவர், எவ்வளவு தனவந்தரானாலும், அவர் எவ்வளவு செல்வம் பெற்றவராக இருந்தாலும், அவ்வளவையும் அள்ளித்தர வல்லமை படைத்தவராயினும் அவர் ஆண்டவனுக்கு அன்பராக இல்லாமல், வம்பராக இருந்தால் அவரையும் அவர் செல்வத்தையும், அவர் வழங்கும் பெருநிதிகளையும் மாசுபடர்ந்த தூசாக மதிக்கின்ற அப்பர் பெருமான், புலையரை — பசு உரித்துத் தின்னுபவரை – அழுகிய தொழு நோயரை — அவர் ஆண்டவனுக்கன்பர் என்றால், அவரே தம்மால் வணங்கப்படும் தெய்வம் என்றெண்ணித் துதிக்கிறார். இது, பக்தியின் முதிர்ந்த அனுபவப் பேறுகும்.

இறைவனிடத்தில் கொண்ட அன்பின் மாட்சியின் காரணமாக அவனது அடியாரிடத்தில் செலுத்தும் ஆராக்காதல் நமக்குத் தெரிகிறது. தொண்டு செய்தே இன்பங்கண்டவர்— அப்பர்! தொண்டலால் துணையில்லை என்று கூறிக்கொண்டு, தொண்டு ஒன்றையே துணையாகக் கொண்டவர். சரியை மார்க்கத்திலே சாயுஜ்யம் பெற்றவர். தன்னைத்தானே உயர்வாக எண்ணிக்கொள்ளாமல் — அடக்கமான சுபாவத்துடன் தன்னிடத்தில் இல்லாத குறைபாடுகளைக் கூட இருப்பதாக எண்ணிப் பாடியவர்.

''குலம் பொல்லேன் குணம் பொல்லேன்
குறியும் பொல்லேன் குற்றமே பெரிதுடைய கோலமாய
நலம் பொல்லேன் நான் பொல்லேன் ஞானியல்லேன்''

என்று கூறுகின்றார்.

இத்தனையும் இல்லாதவரா இவர்? இல்லை. இல்லை. எல்லாம் உள்ளவர்கள் தன்னிடம் ஒன்றும், இல்லை என்றுதான் சொல்லுவார்கள். அதற்குப் பெயர்தான் 'பரிபக்குவம்' என்று பெரியவர்கள் கூறுவார்கள். பரிபக்குவம் அடைந்த இவருக்காக—இவரது முதிர்ந்த வயதிற்காக, கயிலயங்கிரியில் கோயில் கொண்டுள்ள கைலாசபதி, அவ்விடம் வரை இவர் சிரமப்பட்டு வருவதை அறிந்து அவ்வளவு தூரம் இவரை இடர்ப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடக்கூடாது என்ற பெருங்கருணையினால் ஐயாறு (திருவையாறு) ஆலயத்தில் தமது திருக்கோலக் காட்சியைக் காணுமாறு செய்தருளினார் என்றால், அப்பர் இப்புவியில் பெற்ற அரும்பேறுதான் என்னே? – இந்நிலையில் இறைவன் தனக்கு அருளிய விதத்தை, வியந்து அவரது சேவடியைத் திருவடியைத் தெய்வீகப் பொற்பாதத்தைப் பூங்கழலை, பொன்மலரைத் தான் கண்டது கண்டறியாத காட்சியென வியந்து பாடுகின்றார்.

"மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடுநீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயா றடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

என்று திருத்தாண்டகத்தில் அருள்நெறிச்செம்மல் தன் அற்புத ஆனந்தானுபவத்தை அருளுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஆண்டவனிடத்தில் வழி வழி அடிமையாக வந்த மரபில் உதித்தவர். இறைவனைத் தோழனுகக்கொண்டு, 'சகமார்க்கம்' என்று சொல்லுகின்ற தோழமை உணர்வில் ஆண்டவன் திருவடிப்பேற்றைத் துணையாகப் பற்றி நின்று உய்கதி பெற்றவர். ஒவ்வொரு பத்துப் பாட்டிற்கும் இறைவன் இவருக்கு ஒவ்வொரு காரியத்தையும் சாதித்துத் தந்ததாக இவரது வரலாறு சான்று பகர்கின்றது. பரவைநாச்சியாரை இவர் பார்த்ததும் அன்பு கொண்டார். அந்த விருப்பத்தையும் ஆண்டவனே நிறைவேற்றித் தந்தான் என்பதை,

"பரவையைத் தந்து ஆண்டானை ஏழையேன்
மறத்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே"

என்று போற்றிப் புகழ்ந்து பாடுகிறார். அடுத்துச் சங்கிலி நாச்சியார் என்கிற மாதரசியைப் பார்த்தவுடன், அவள் பேரில் பற்று ஏற்படுகின்றது. ஆண்டவனிடத்திலே விண்ணப்பிக்கிறார். இவரது புராணத்தைச் சிறப்பாக உணர்த்துகின்ற சேக்கிழார் பெருமான், தனது பெரிய புராணத்தில், சிவபெருமான், சங்கிலிநாச்சியாரிடத்தில் சிபார்சு செய்யும் வகையை மிக அழகாகச் சித்தரிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாருந் தவத்துச் சங்கிலிகேள்
சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்
உனை எனை இரந்தான்"

என்று சொல்லிப் பரிந்துரை வழங்குகிறார்.

தம்பிரான் தோழராகிய நம்பியாரூரருக்குப் பரிந்துரை வழங்கும் இறைவனே சங்கிலியிடம், 'சால என்பால் அன்புடையான்' என்று சொல்லும் அளவிற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உயர்ந்து விளங்குகிறார்.

இரு மனைவிகளைக் கொண்ட இவர்,

"நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே"

என்கிறார்.

இவரது பற்றெல்லாம், பாசமெலாம், ஆசை நேசங்கள் எல்லாம் ஆண்டவன்பால் இருந்தது என்பதற்குச் சான்றாக, கொடுமுடித் தேவாரத்திலே,

"மற்றுப்பற்று எனக்கின்றி நின்திருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை
வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனைநான் மறக்கிலும் சொல்லுநா நமச்சிவாயவே"

"வேறுபற்று ஒன்றறியேன். நின் திருப்பாதத்தையே இராப் பகல் எண்ணினேன். நான் என்ற ஆணவம், அகந்தை, செருக்கின்மிகுதியால் மறந்தாலும், உன் நாமம் என் நாவில் மறந்தறியா மனப்பழக்கத்தில் அது தவறாது உனையே உச்சரித்து உருப்போட்டுக் கொண்டிருக்கும்" என்று சிந்தை மகிழ்ந்து செப்புகிறார்.

திருப்பெருந்துறையில், ஆனந்தானுபவம் பெற்று குருவருள் மூலமாகத் திருவருளை எட்டிப் பிடித்த மாணிக்கவாசகர், சன்மார்க்க நெறி நின்றவர்.

சரியையில் அப்பரும், கிரியையில் சம்பந்தரும், யோகத்தில் சுந்தரரும், ஞானத்தில் மாணிக்கவாசகரும் நின்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா அதிகாரங்களும் இறைவனுக்கேயன்றி தனக்கு ஒன்றுமில்லை என்று சொல்லுவதும், பிறந்த அன்றே உடமைக்குச் சொந்தக்காரனுன இறைவன், உடல், பொருள், ஆவிக்கும் உரிமை உடையவன் என்பதைத் தான் உணர்ந்ததோடு உலகத்தையும் உணரவைக்கிருர்.

"ஆயக்கடவேன் நானே தானே, என்னதோ இங்கதிகாரம்?"

என்று கேட்டு,

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றேயனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றேர் இடையூறு எனக்குண்டோ எண்தோள்முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்நானே இதற்கோர்நாயகமே"

எதைச் செய்தாலும், எனக்கு நாயகன் நீ. அடக்குபவன் நீ. அடங்குபவன் நான். என்று சொல்லி, "முற்றிலும் ஒப்படைப்பு" என்று சைவத்திலும், "பரிபூர்ண சரணுகதி" என்று வைஷ்ணவத்திலும் கூறுகின்ற பாங்கில், உலகம் உய்ய உரைக்கின்ருர்.

ஆதியும் அந்தமும் இல்லாதவன் இறைவன்; ஒரு முன்னில்லான்; பின்பு என்றும் சொல்ல முடியாதவன்; பழமைக்கும் பழமையானவன்; புதுமைக்கும் புதுமையானவன்; பிறவாதவன்; இறவாதவன்; தோன்றினுல் தானே மறைவு?— தோற்றமும் இல்லை. மறைவும் இல்லை. காலங் கடந்தவன்; கால சம்ஹாரமூர்த்தி அவன். பல்லாண்டு என்னும் பதம் கடந்த அந்தப் பரமனுக்கே பக்தியின் முதிர்ந்த தோய்விலே பல்லாண்டு பாடுகிருர்—சேந்தனுர்!

"சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத்
தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர், சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்கே, பல்லாண்டு
கூறுதுமே"

திருமூலர் திருமந்திரம், சைவ சித்தாந்த சாத்திரங்களிலே சாலச்சிறந்த மகா மந்திரயந்திர, தந்திர யோக ஞான வைராக்யங்களை உணர்த்துகின்ற மிகப் பெரிய நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமிருந்து ஆண்டுக்கு ஒருமுறை ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் இருந்து மூவாயிரம் திருமந்திரங்களை அருளியவர் திருமூலர். அவரது பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உயர்ந்த தத்துவங்களை உள்ளடக்கி மகா யோகத்தை, மாபெரும் ஞானத்தை, நல்குகின்றன. பொதுவுடமை வாதியாகவும் அவர் திகழ்கின்றார்.

மாநகர நூலகம் யாழ்ப்பாணம்

"யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரைதானே"

"பொதுவாக இறைவனுக்கு ஏதோ ஒரு பச்சிலையை யாவது அர்ப்பணிக்க வேண்டும். பசுவைப் பார்த்த இடத்து ஒரு பிடியாவது பசும்புல் கொடுக்க வேண்டும். உண்ணு வதற்கு முன்னர், ஒரு பிடித்த பிடி சோறு ஏழைக்குக் கொடுக்க வேண்டும். தனக்குத் தெரிந்த நல்லுரையை மற்ற வர்க்குச் சொல்லியே தீரவேண்டும்" என்று சொல்லுகின்ற இவரது நல்லுள்ளம், பரந்து விரிந்த சமுதாய மனப்பான் யில் — அதன் மேம்பாட்டை எவ்வளவு குறிக்கோளாகக் கொண்டுள்ளார் என்பதைத் தெளிவாக்குகின்றது.

"நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று சொல்லும் இவரது போக்கு, சமுதாய வளர்ச்சிக்கு, ஞானி யர் கண்ட பாதை, ஞானியர் நடந்த வழி இதுதான் என்று புரிய வைக்கின்றது.

இவரது கருத்துப்படிபன்னிரெண்டாம் ஆண்டில் இச்சை துவங்குகின்றது. எழுபது ஆண்டுகள் வரை அந்த இச்சை தொடருகிறது. எண்பத்து இரண்டு ஆண்டில் ஆசையாகிற பசை அறுந்துவிடுகின்றது. மனிதனது வாழ்வியலை, சாஸ்திர நுணுக்கத்தோடு, யோக நிலை ஏறிநின்று ஞான போதனை செய்கிறார்.

பத்து மாதம், முன்னூறு நாட்கள், கருவிலே உருவாகிப் பிறக்கின்ற மனிதன், எண்பத்து இரண்டு வயதிலாவது உலக ஆசையிலிருந்து விடுபட வேண்டும் என்பதை இடித்துரைக்கிறார்.

"முட்டை பிறந்து முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
98404

பட்டது பார் மனம் பன்னிரண்டாண்டினில்
கெட்ட தெழுபதிற் கேடறியீரே''

இறைவனது அடியவர்கள் இதயம் கலங்கினுல் தேசம், நாடு அதன் சிறப்பு அழிந்திடுமாம். வாசவன் பீடமும், மாமன்னரின் பீடமும் கூட நாசமாகிவிடுமாம். இது நந்தி யின் ஆணை என அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுகிருர்.

''ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நந்நந்தி யாணையே''

எலும்பை விறகாகவும், உடலில் உள்ள இறைச்சியை பொன்போல வறுத்து எடுத்தும் இறைவனுக்குப் படைத் தாலும், அன்போடுருகி உளம் நெகிழ்ந்து செய்கின்ற வழி பாட்டிற்கு மேல் அவை ஈடாகாது என்பதை இறை தத்து வத்தோடு இணைத்துக் காட்டுகிருர்.

''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்த வொண்ணுதே''

என்கிருர்.

''நிறைமொழி மாந்தர் பெருமை, நிலத்து
மறைமொழி காட்டிவிடும்'' என வள்ளுவரும்,

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப''

என்று தொல்காப்பியமும் சொல்லியதற் கொப்ப, திரு மந்திரம் என்ற பெருநூல், நிறைமொழி மாந்தராக விளங் கிய திருமூலரது மறைமொழியேயாகும்.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பின் உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பின் உள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அழியக் கூடியதுதானே இந்த உடம்பு? என்று சிலர் உடம்பைப் பேணுவது கிடையாது அதற்குள்ளே உயிர்ப்பாய் கோயில் கொண்டுள்ளவன் ஆன்மீக நாதஞக விளங்கும், பரம்பொருள் என்பதைப் பரிபூரணமாக உணரும் பொழுது, உடம்பு இழுக்கானது அல்ல, உடம்பு பேணப்படவேண்டிய ஒன்று என்பது புரியும்!

நாம் விடுகின்ற சுவாசம், அதனுடைய விவரம் நமக்குத் தெரியுமே யாஞல், வாசியை அடக்கல் எவ்வளவு அவசியம் என்பதுவும் புலஞகாமல் போகாது. வாசி, வாசி என்று பேசுகின்றபோதே-'சிவா, சிவா' வருகின்றது. நாம்விடுகின்ற ஒவ்வொரு மூச்சிலும் சிவம் வெளிப்பட்டு உட்புகுகின்றது.

எல்லா உயிர்களுக்கும், ஒரு நிமிடத்திற்கு 15 சுவாசங்கள் வீதம் ஒரு மணிக்கு 900 சுவாசங்கள். ஒரு நாளைக்கு 21600 சுவாசங்கள் விடுகின்ருேம். இது விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒத்துக்கொள்கின்ற உண்மை. சாதாரணமாக நாம் இருக்கும் போது 12 அங்குல சுவாசம் வெளிவந்து, 8 அங்குல சுவாசம் உள்ளே செல்லுகின்றது. இயல்பாகவே 4 அங்குல சுவாசம் நஷ்டமாகின்றது.

நாம் பேசும் போது 16 அங்குலம் வெளிவந்து 8 அங்குலம் உள் சென்று 8 அங்குலம் வீணுகின்றது. நடக்கும்போது 20 அங்குல மூச்சு வெளி வந்து 10 அங்குலம் உள்சென்று 10 அங்குலம் நஷ்டமாகின்றது. கடினமான வேலை செய்யும் போது 24 அங்குல மூச்சு வெளிவந்து 12 அங்குலம் உட்சென்று 12 அங்குலம் கெட்டுவிடுகின்றது. சண்டை செய்யும் போதோ, 36 அங்குலம் வெளிவந்து 24 அங்குலம் உட்சென்று 12 அங்குலம் வீணேபோகின்றது. தூங்கும்போதோ 48 வெளி வந்து 30 உள்சென்று 18 நஷ்டமாகின்றது. ஓடும் போது 56 அங்குலம் சுவாசம் வெளிவந்து 28 உட்சென்று 28 வீணுகின்றது. போகத்தில் 64 அங்குலம் வெளி வந்து 24 மட்டுமே உட்சென்று பெரும்பகுதியான 40 அங்குலம் வீணடிக்கப்படுகின்றது.

இவ்வாறு தினம் வீணுன சுவாசங்கள் 7200. மொத்தம் 21,600 மீது இருப்பவை 14,400 தான். இந்த நஷ்டத்தை நிறைவு செய்தால், சிவம் விழிப்புறும். அதற்கு வழி, மூச்சடக்கி யிருக்கும் ஆசனங்கள், பிராஞயாமங்கள் செய்வதன் மூலம், வாசியை அடக்குதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாசியை அடக்கி யோக நெறி நின்றவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருமூலரும், பெரும் மிழலைக் குரும்ப நாயனுரும் ஆவார்கள். நாமும் ஏன் வாசியை (மூச்சை)க் கட்டுப்படுத்தி, நீண்டநாள் நல்வாழ்வு வாழ முயற்சிக்கக் கூடாது?

யுக யுகாந்திரமாக வாழ்ந்த நாழிகையிலிருந்து சதுர்யுகங்களுக்கும் கூட வருஷங்களைக் கணக்கெடுத்திருக்கிருர்கள்.

ஒரு நாளைக்கு 60 நாழிகை.
60 நாழிகைக்கு இரண்டு லக்ஷத்துப் பதினுயிரம் நொடி,
நொடி 60 கொண்டது 1 விளுடி,
60 விளுடி கொண்டது 1 நாழிகை,
60 நாளிகை கொண்டது 1 நாள்,
360 நாள் கொண்டது 1 வருடம்.
21600 நாழிகை கொண்டது 1 வருடம்.
21600 வருடத்தை 80ஆல் பெருக்க கிரேதா யுகமும்,
60ஆல் பெருக்க திரேதா யுகமும்,
40ஆல் பெருக்க துவாபர யுகமும்,
20ஆல் பெருக்க கலியுகமுமாகும்.

இந்த நால்வகையான யுகங்களிலும் ஐவகையான உற்பத்திகள் உண்டாகின்றன. அவை: புல், பூண்டு, செடி, கொடி, மரம் இவைகள் பூமியில் உண்டாகின்றன.

பின்னர் மிருகங்கள், பறவை இனங்கள், தோன்றின.

ஓர் அறிவு உடையன—புல், மரம், செடி முதலியன. இவை ஸ்பரிசம் (தொடுவது) மட்டும் அறியும்.

இரண்டு அறிவு பெற்றவை—சிப்பி, சங்கு முதலியன. இவை ஸ்பரிசம், ரசம் (தொடுவது, சுவை) அறியும்.

மூன்றறிவு உடையவை—கறையான், எறும்பு. ஸ்பரிச, ரச, கந்தம் (தொடுதல், சுவை, நாற்றம்) அறியும்.

நான்கறிவு உடையவை—தும்பி, வண்டு. ஸ்பரிச, ரச, கந்த, ரூபம் (தொடுதல், சுவை, நாற்றம், உருவம்) அறியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தறிவு கொண்டவை – பறவை, மிருகங்கள்.
சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்,
மேற்கண்ட அறிவுகளோடு ஒலியையும் உணரும்.

ஆறறிவுடைய மானிடம் ஞானமாகிய பேரறிவும் பொருந்தியுள்ளது என்று "நிஜானந்த போதம்" நிறையுணர்வை நமக்கு ஊட்டுகின்றது.

நான்கு வகை யோனிகளும்; பை, முட்டை, வியர்வை, வெப்பம் ஆகிய வித்துக்களால், உற்பத்தியாகின்றன. இவை எண்பத்துநான்கு லட்சம் பேதங்களாகின்றன (பிரிவுகள்)

| | | |
|---|---|---|
| இதில் தேவர்கள் | 14 | லட்சம் |
| மானிடம் | 9 | லட்சம் |
| மிருகங்கள் | 10 | லட்சம் |
| ஊர்வன, சர்ப்பவகைகள் | 11 | லட்சம் |
| நீர்வாழும் பறவைகள் | 10 | லட்சம் |
| தாவரம் | 20 | லட்சம் |
| பாதாள ராட்சஸ யோனிகள் | 10 | லட்சம் |

ஆக 84 லட்சம் பேதங்கள், நான்கு வகை யோனிகளிலிருந்து வியாபித்திருக்கின்றன.

பூதங்கள் 5 –பூமி, தண்ணீர், தீ, காற்று, வெளி.
(பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்)
பொறிகள் 5 –உடல், வாய், கண், மூக்கு, செவி.
புலன் 5 –ஒலி, ஒளி, உருவம், சுவை, நாற்றம்.
கரணம் 4 –மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
குணம் 3 –ராட்சஸம், தாமஸம் (மந்தம்), சாத்வீகம் (அமைதி).
மலம் 3 –ஆணவம், மாயை, கன்மம்.
தோஷம் 3 –வாதம், பித்தம், சிலேஷ்மம் (கபம்).
வினை 2 –நல்வினை, தீவினை.
அறிவு –ஒன்றே ஒன்று!

மானிட வாழ்க்கைக்குள்ளே ஏன்? உலகப் படைப்புக்குள்ளே மண்டிக் கிடக்கின்ற மர்மங்கள் எத்தனை எத்தனையோ?

இந்த மானிடன் பிறக்கும்போது எதையும் உடன் கொண்டு வந்ததில்லை. போகும்போது எதையும் கொண்டு போகப் போவதும் இல்லை. நடுவில் வந்த செல்வம் 'சிவம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தது என்று கருதிச் செயல்படாதவர்களுக்குத் தான தருமம் செய்யத் தெரியாத கபோதிகளைப்பற்றி என்ன சொல்லுவேன், இறைவா! என்று 'திருவேகம்பமாலை'யில் பட்டினத்தடிகள் பாடுகின்றார்!

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை, பிறந்துமண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை, யிடைநடுவிற்
குறிக்கு மிச்செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே"

"உயிரோடு சேர்ந்த உடல் அழிந்தாலும் உலகத்திலே 'பாவி' என்ற பெயர் எடுத்துவிடாதே. பெரிய பெரிய டாம்பீகமான ஆடம்பரங்களும், படாடோபமான பதவிகளும், பூமாலைகளும், புகழ்நாமங்களும் வேண்டாம். ஏ! மடமனமே! செத்தவரைப்போல திரி" என்கிறார்.

"ஆவியொடு காயமழிந்தாலும் மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமுங் கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப்போலே திரி"

மனிதன், மன அடக்கத்துடன் வாழும்முறையை, அருமைப் பாட்டுடன், எடுத்துக்காட்டுகிறார் — யாரும் துறக்க முடியாத அளவு, பெருந்துறவினைக் கைக்கொண்ட பட்டினத்தடிகள்.

காரைக்காலம்மையார், தனது அற்புதத் திருவந்தாதியில், தான் பிறந்து மொழி பயின்றதுமே ஆண்டவனது அருளைத் துய்த்து அவன்மேல் காதல்கொண்டு சேவடி சேர்ந்த வகையைச் சிந்தை குளிரக் கூறுகிறார்.

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம்
காதல் சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்" என்கிறார்.

கணவன் தன்னைத் 'தெய்வமாது' என்று எண்ணியவுடன் பேய் உடம்பு வேண்டிப்பெற்று, கயிலையங்கிரிக்குக் காலால் நடக்காமல், தலையாலே தான் ஊர்ந்து சென்று, இறைவனாலேயே, 'அம்மையே' என்று அழைக்கப்பெற்ற அரும்பேறு பெற்றவர் காரைக்காலம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைச் சிலர், வானத்தில் உள்ளவன் என்று சொல்லுகிறார்கள். மற்றும் எங்கெங்கோ இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் நானோ என் நெஞ்சத்திலேயே இருக்கிறான் என்று சொல்லுகிறேன் என்கிறார். எவ்வளவு உரிமை? அதைச் சொல்லுவதிலேதான் எத்தனை பெருமை?

"வானத்தான் என்பாரும் என்க, மற்றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தால் இருண்டமொய் யொளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத்தான் என்பன்யான்"

உள்ளத்தில் சிவபெருமானது எழில் ஓவியம், வண்ண வடிவு, அழகொழுகும் உருவம், அந்த நெடியதிருவுரு, சிவந்த மேனி, சிந்தனைக்கு இனியவன், வந்தனைக்கு உரியவன், தனது வாழ்வைப் பேரின்பமயமாக்கியவன், அவன் தனதுள்ளத்தில், ஊடுருவி நின்ற உணர்வில்,

"அழடா அங்கை சிவந்ததோ?
அங்கை அழகால் அழல் சிவந்த வாறோ?"

என்று கேட்கின்ற பொழுது இவரது உளப்பாங்கு நம்மால் உணரமுடிகின்றது.

கயிலையங்கிரியில் கோயில் கொண்டுள்ள உமா மகேஸ்வரருக்குத் தன்னுடைய சொல்லையே திரியாகவும், பொருளையே நெய்யாகவும், தன்னுடைய நாவையே விளக்கின் முகப்பாகவும், தான் பாடுகின்ற வெண்பாவே விளக்காகப் பெற்று ஏற்றினாராம். இதனைக் "கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி" யிலே நக்கீர தேவர் நயமாகப்பாடுகிறார்.

"சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமாய்
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச்—சொல்லறிய
வெண்பா விளக்காக வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க்கு ஏற்றினேன் பெற்று"

இப்படிப்பட்ட அருட்பாடல்கள் பலவற்றைப் பல ஞானியர்களும் பாடிப் பரமாத்மனை துதித்திருக்கிறார்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய அரும்பெரும் கதைகளை வகுத்துத் தொகுத்து விருத்தப்பாவிலே



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பாவாக ஆக்கி அளித்தவர் சேக்கிழார்பெருமான்! அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய மாபெரும் இலட்சியத்தை — அவர்கள்தம் இடையரு பக்தியைத் தமது "பெரியபுராணத்தில்"

"ஓடும் செம்பொனும் ஒப்பவே நோக்குவார்"

என்று ஆரம்பித்து,

"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்று அறிவுறுத்துகிறர்.

மண் ஓட்டையும், செம்பொன்னையும் ஒன்ருகவே கருதுபவர்கள், இந்த அறுபத்து மூன்று நாயன்மார்கள்! பக்தி செலுத்துவது ஒன்றுதான் தனது கடமை என்று எண்ணுபவர்கள். முக்திப்பேற்றைக்கூட அவர்கள் கேட்கவில்லை. முக்தியடைய அறுபத்து மூவருக்கும் அருகதையுண்டு. ஆனலும் பக்தியிலேயே அவர்கள் நிற்க விரும்புகின்றனர். நாள்தோறும் கூடிக்கொண்டு போகும் அன்பினில், கும்பிட்டு நிற்பதன்றி, மோட்ச வீட்டையும், தியாகத்தின் மூலம் விரும்பாது விளங்கியவர்கள் என்பதை நமக்குப் பெரியபுராணத்தின் முற்பகுதியிலேயே — முன்னுரையிலே இன்னுரையாக நமக்குச் சேக்கிழார் இயம்பி விட்டார்.

இராமகிருஷ்ணபரமஹம்ஸர், "தேவி! உன்னை அடுத்திருந்து வணங்கக் கொஞ்சம் ஆணவம் இருக்கட்டும், இரண்டறக் கலக்க நான் விரும்பவில்லை" எனச் சேக்கிழார் கருத்தையே அவரும் சிறப்பிக்கிறர்.

பெரியபுராணத்தில் மனுநீதிச் சோழனைப்பற்றிச் சொல்ல வந்த சேக்கிழார், அவனது நீதி தவருத நெறிமுறையை— ஆட்சியின் மாட்சியை, செங்கோலின் சீரை, வாய்மையின் தூய்மையை, உண்மையின் உயர்வை எவ்வளவு தூரத்திற்கு எடுத்தியம்ப முடியுமோ அவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டுகிறர்.

"மாநிலம் காவலனுவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னல் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த ஏழை ஒருவனுக்கு, ஒரு சிறு துண்டு நிலம் கிடைத்தால், அவன் அதனை எப்படிச் செய்நேர்த்தி செய்து, சிறந்த விளைநிலம் ஆக்குவானே அதுபோல, அயோத்தியாபுரியைச் சக்கரவர்த்தி தசரதன் பேணிப் பாதுகாத்து ஆட்சி செலுத்தினானும்.

உலகத்திலே முடியாட்சி நடந்தாலும், அது குடியாட்சியாக மலர்ந்து நின்றாலும், முடியாட்சிக்குரிய மன்னர்களும், குடியாட்சிக்குரிய தலைவர்களும், குடி தழுவிக் கோல் ஓச்சினால்தான், அவர்களது அடி தழுவி உலகம் வாழும் என்பதை, மறை தந்த வள்ளுவரும் நமக்குத் தெரிவிக்கிறார்.

"மன்னன் எவ்வழியோ, மன்னுயிர் அவ்வழி" என்பது பொருளாகின்றது.

இதனைச் சங்ககால இலக்கியத்தில் ஆடவர்கள் எவ்வளவு நல்லவர்களோ, அந்த அளவிற்கு நாடும் பண்பட்டதாக அமையுமெனப் புறநானூற்றில் ஔவை மூதாட்டி அறிவுரை – அறவுரை கூறுகிறார்.

காடு நாடாகாது; மேடு பள்ளமும் நாடாகாது என்று சொல்லி ஆடவர் வழிதான் நாடு சிறக்குமென அந்த மாபெரும் தெய்வ மாது கூறுகிறார்:—

"காடா கொன்றோ நாடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

இத்தனை மேற்கோள்களும், உவமை நயங்களும் இன்னும் எத்தனையோ வகைகளும், சேக்கிழார் பெருமான் கண்ட "மாநிலம் காவலனாவான்" என்ற பாடலுக்கு விளக்க உரையாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

செயற்கரிய செய்த சிவநேயச் செல்வர்களின் கதை, சிறுகதையல்ல. அது பெரிய புராணம்தான். இந்தப் பெரிய புராணத்தின் நடுநாயகமாக விளங்குவது, காரைக்காலம்மையாரின் புராணமாகும். காரைக்காலம்மையார் கயிலையங்கிரியில் சிவபெருமானுக்கு அருகே சென்றதும், சிவபெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் 'அம்மையே' என அழைத்ததும், அம்மையார் எண்ணு கிருர்; அதனை, அதன் பெரும் பொருளை நமக்குச் சேக்கிழார் சித்தரித்துக் காட்டுகிருர்!

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிருர்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க"

என்று துதித்தாராம்.

உலகத்தில் உள்ள எல்லாம் ஒருநாள் இல்லாது அழிந்து, ஒழியக்கூடியது. இறையன்பு ஒன்றுதான் நின்று நிலவக் கூடியது. ஆகையினுலே அந்த அன்பிற்கு, 'இறவாத மகிழ்ச் சியைத் தரக்கூடிய அன்பு' என்ற அடைமொழியிட்டு மற வாமை வேண்டுமெனத் தொடருகிருர்.

மண்ணிலே பிறந்தால் மாயை தொட்டுக்கொள்ளுகிறது. இன்பம் என்று எண்ணுகின்ற ஒன்று, கணப்பொழுதில் காணுது போய் விடுகின்றது. என்ன பெற்ருேம், என்ற ஏக் கம் வந்து சார்கிறது. சோர்வும் மெலிவும் சேர்கின்றது. மறுபடியும் எப்போ அந்த இன்பம் கிட்டும் என ஆவல் உந்துகிறது. கிடைத்ததில் திருப்தியோ அல்லது போதும் என்ற மனமோ, வந்திருப்பின் பரிபூரணத்வம் உண்டாகி யிருக்க வேண்டுமே! அதுதான் மனித மனத்திற்கு வருவ தில்லை.

பிறந்தால்த்தானே இந்தத் தொல்லை. இந்தப் பிறவியே இல்லாது ஒழிந்துவிட்டால், ஏது கவலை? பிறவியே வேண் டாம். துன்பமும் தொடர வேண்டாம். ஐயனே! அருளுடை மெய்யனே! பிறவிப் பிணியிலிருந்து என்னை விடுபடச்செய்து விடு. இன்னலற்ற — இன்ப துன்பமற்ற, வெளிக்குள் வெளி கடந்த, ஒளிக்கு ஒளியாய் விளங்குகின்ற இடத்திலே என் னைத் திளைக்கவிடு, என்றெல்லாம் தமது திருப்பதிகங்களிலே— இரட்டைமணிமாலையிலே, வேண்டிய காரைக்காலம்மையார், — புவனம் போற்றுகின்ற புனிதவதியார், பிறவாமை வேண் டுமென்று கேட்டுவிட்டு, பெண்களுக்கே உரித்தான சந்தேக மனப்பான்மையில், மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென் றும் மறவாமை வேண்டும் என்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவி வேண்டாமென்று கேட்பது எனது உரிமை. பிறவியை அறுப்பது அல்லது அறுக்காமல் மறுபடியும் மண்ணிலே பிறக்க வைப்பது, உன் சித்தம் என்ற நிலையிலேதான் வேண்டுகோள் அமைகின்றது. இறைவா! நீ ஆடிக்கொண்டே இருக்கிறாய். உன் ஆட்டத்தின் தாளத்திற்கேற்பப் பாட்டு வேண்டாமா? நீ ஆடும்போது உன்னடியின் கீழிருந்து நான் பாட வேண்டும் என்று முடிக்கிறார்.

'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்று அருணகிரி வேண்டிக் கேட்டதும், பாடும் பணியை, ஏணியாகப் பெற்றுவிட்டால், சங்கீதத்தின் மூலமாக சாயுஜ்யம் பெற்றுவிடலாம் என்று கருதியது போலத்தான் அம்மையாரின் உள்ளமும் நினைத்திருக்கின்றது.

கணவன் தன்னைத் தெய்வ மாது என எண்ணி, வேறுபட்டபோது, பேய் உடம்பு பெற்று, பெருநிலைக்கு ஆளானது சிறிய புராணமாக இருக்க முடியாது. இப்பேர்ப்பட்ட கதைகளைப் பெரிய புராணத்தில்தான் பார்க்க முடியும்.

ஆசையைவிட்டவர்கள்; பாசத்தை வென்றவர்கள்; ஆணவம் ஒடுங்கப்பெற்றவர்கள், மாயையிலிருந்து மனம் வென்றவர்கள், கர்மத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டவர்கள், இறைவன்பால் பேரன்புகொண்டவர்கள், பெரும் பணியிலே தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர்கள், எவ்வினமும் ஒன்றாகிப் பக்திகுலம் ஒன்றே என்ற உணர்வு பெற்றவர்கள், இறைவனுக்காக, அவனது அடியார்களுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள். இப்படிப்பட்ட ஆன்மீகபலம் எளிமையில் அருமை, எளிவந்த வான் கருணை, இத்தனையும் நிறைந்த பெரியவர்களின் அரிய வரலாற்றை, பக்திச் சுவையும் இலக்கிய ரசனையும் ஏறுபோல் பீடுநடை போட, இதயத்திலே இறையுணர்வு ஒன்றிக்கலக்கச் செய்த, மாபெரும்காவியம், பெரியபுராணம்தான்!

நமது இதிகாச புராணங்களில் — தேவார திருவாசகங்களில், திவ்யப் பிரபந்தங்களில் நாம் மனமொன்றி முறைப்படி அவைகளைக் கற்றுணர்ந்தால், உணர்ந்தபடி நடந்தால், மற்றவர்களுக்கும் நமது சாதனைமூலம் போதனை செய்தால், ஆசைக்கு அளவுண்டாகிக் காலக்கெடுவில் கொண்டுள்ள ஆசையும் குறைந்து, பாசமும் பாங்காக நம்மிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைபெற்று, ஆணவமும் தங்காது எங்கோ போய், மிஞ்சு வது அன்பாக, எஞ்சுவது இறையருளாக, 'ஏன் பிறந் தோம்?' என்ற வினுவிற்கு, நல்வினை கொண்டு தீவினையகற்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தின் உள்ளும், வைத்து மதிக்கப்படும் மாட்சிமை பெற்று, நாம் பெற்ற இன்பம் இவ்வுலகமும் பெற, வையகத்திற்கு வழிகாட் டியாகவும், நம்மால், வாழ்ந்து, வளர்ந்து, ஒளி நல்கித் திகழமுடியும்.

அத்தகுதிக்கு வேண்டிய அனைத்தையும், வேண்டத்தக் கது அறிந்தவனுகிய ஆண்டவன், நமக்கு மூலபண்டாரத்தை (அரிய பொக்கிஷத்தை) அள்ளி வழங்கியிருக்கிருன்.

காகம்கூடத் தனித்துக் கிடைத்த உணவைத் தானுக உண்பதில்லை. கூவியழைத்து, மற்றக் காகங்களையும் சேர்த் துக்கொண்டே உண்கிறது. அகண்ட, ஆழங்காணமுடியாத— கரைகட்ட முடியாத—பரிபூரண உண்மை ஆனந்தப்பொருள், சச்சிதானந்தமாய், எங்கும் பரந்து, எதிலும் நிறைந்து பொங்கிக் கிடக்கின்றது.

இந்த எடுத்த தேகம்—ஒருநாள்—என்ருே ஒருநாள் விழத் தான் போகின்றது.—அது உறுதியாக நமக்குத் தெரிகின்றது.

"பாவஞ் செய்யாதிரு மனமே; யமன்
கோபஞ் செய்தே கொண்டோடிப் போவான்"

என்ற சித்தர் வாக்கும், சித்தத்திலும் பதிந்துள்ளது.

"உலகத்தவர்களே! உறு பொருள்—உங்களுக்குத் தேவை யான செல்வம்—மானிட சமுதாயத்திற்கு மிக மிக வேண்டிய அத்தனையும் பெறச் சேர்ந்து வாருங்கள்" எனத் தாயுமானுர் தயவுடன் நம்மை அழைக்கிருர். சேர்ந்து ஒன்ருவோம் — சார்ந்து நின்று இறையருளைப் பெறுவோம்.

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்; அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம், பொங்கித் ததும்பிப்
பூரணமாய்க் கிடக்குதையோ, இன்புற்றிட நாம் இனி
எடுத்த தேகம் விழுமுன்
புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை தடுமாறித் திக்குத் தெரியாத காட்டில் தேடியலை யும் மனிதனுக்கு, அவன் எங்கு தான் செல்லவேண்டும் என் பதை, முடிந்த முடிபாகத் தெளிந்த அறிவாகப் படிந்த ஞானமாகப் புண்ணியத்தின் பயனுகக் கிடைத்துள்ள சைவ சித்தாந்த—வைணவ சித்தாந்த—வேதாந்தக்கருத்துக்கள், இந் திய தத்துவ தரிசனங்களில் (கோட்பாடுகளில்) எங்கும், எதி லும், எப்போதும் உண்மையை நல்கி, நன்மையை நாளும் விளைவிக்கின்றன.

வியாச பகவானது மகன் சுகர். வியாசர், தமது மகனை ஞானுேபதேசம்பெற, ஜனகமகாராஜாவிடம் அனுப்பினுர். ஜனகர், சுகருக்கு, வெறும் சாதமும், சாதத்திலே நேருங் கூறுமாக ஊசி மிளகாயும் போட்டுச் சாப்பிடச் சொன்னுர். ஏதும் சொல்லாமலே—எவ்வித மாறுபாடுமின்றி, சுகர் அத னைச் சாப்பிட்டார். ஜனகரோ, இனி உனக்கு நான் ஞானுேப தேசம் செய்ய வேண்டியதில்லை எனச் சொல்லி அனுப்பிவிட் டார். புலனடக்கம், பொறியடக்கம் வந்துவிட்டால் அதுவே ஞானமாகிறது.

உரு ஏறத் திரு ஏறுகிறது. இது கருதித்தான் வடலூர் வள்ளலாரும் “ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்” என்று வேண்டினுர். சத்சங் கம் அதாவது நல்லாரிணக்கம் இருந்துவிட்டால் அது ஜீவன் முக்திக்கு வழிகாட்டுமென ஆதிசங்கரரும் அறிவித்தார்கள். குருட்டு மாடுகூட மற்ற மாட்டின் கூட்டத்தில் சேர்ந்தால் வீடுபோய்ச்சேர்ந்துவிடுகின்றது.

பக்திக்கு வித்து அன்பு. அந்த அன்பு பலவகையில் பிரி கின்றது.

மனைவியின்பால் வைத்த அன்பு காதலாகிறது.

குழந்தையின்பால் வைத்த அன்பு வாஞ்சையாகிறது.

பொருளின்பால் வைத்த அன்பு ஆசையாகிறது.

பெரியோரிடமும் கடவுளிடமும் வைத்த அன்பு பக்தி யாகப் பரிணமிக்கின்றது.

இறைவனிடத்தில் கரைகடந்த காதலுடைமையே பக்தி யாகும் என்று சாண்டில்யரும் கூறுகிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்வியப்பிரபந்த ஆசிரியராகிய ஆழ்வார்—பக்தியிலே ஆழ்ந்து—தோய்ந்து—மூழ்கித்திளைத்துப் பரந்தாமனுடைய பச்சை மேனியை—பவளச் செவ்வாயை—தாமரைக் கண்ணை வர்ணித்துவிட்டு, அந்தப் பேரழகிலே சொக்கி நின்று, "மாதவா! கேசவா!! வைகுந்தா! நாராயணா!" என்று உள்ளூரத் தித்திக்கத் தித்திக்க அவன் நாமத்தைச் சொல்லுவதை விடப் பேரின்பம் வேறில்லை என்று கண்டுகொண்டு, எனக்கு இப்போதே தேவேந்திரப் பதவி கொடுத்தாலும் அந்தச் சுவை எனக்கு வேண்டாம். திருமாலது திருவுருவைப் பார்ப்பதும், அவன் திருநாமத்தைச் சொல்லுகின்ற இச்சுவையே போதுமெனப் பாடுகிறார்.

'பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா! அமரர்ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவைதவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

திருமூலரும் ஈசனது பக்தியிலே ஊறிநின்ற காரணத்தால், அந்த இறைவன், தீயைவிடக்கெட்டவர்களுக்குச் சுடக்கூடியவன்; அதே நேரத்தில், நல்லவர்களுக்கோ தண்ணீரை விடக் குளிர்ச்சி பொருந்தியவன். இப்படிப்பட்டவன் எனத் தெரிந்திருந்தாலும் மனிதர்கள் அவனது அருள் திறத்தை அறிந்து கொள்ளவில்லை. குழந்தை யாருக்கும், எவருக்கும் எப்போதும் எத்தீமையும் செய்ததில்லை. நல்லன்பர்களுக்கு அவன் குழந்தை போன்றவன். உலக உயிர்களுக்குத் தாயை விட நல்ல பொருள் ஒன்றில்லை. தாயினும் சாலச்சிறந்தவன் இறைவன் எனத் திருமூலர் திருமந்திரத்திலே இறைவனைப் பக்திச் சுவையோடு,

"தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணிய நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தான் சடையோனே" என்று கூறுகிறார்.

"கடவுளை விரும்பியவர்களுக்கே பக்தி கிட்டும்" என்று கடோபநிஷதம் சொல்லுகின்றது.

"One single moment of Madness of Extreme love to God brings us eternal freedom"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுளின் மேல் அளவுகடந்த அன்பினுல் ஏற்படும் ஒரு நிமிடப் பித்து, நமக்கு என்றும் அழியா விடுதலையைத் தரும்" என பக்தியோகத்திலே சுவாமி விவேகானந்தா எழுதுகிருர்.

பக்திபண்ணுமல் பாவஞ் செய்து என்ன பலனைக் காண முடியும்—சுத்தி வந்து சுமையைத் தாங்கி எச்சுகத்தை — இச் சகத்தில் நாம் எய்திவிட இயலும்?—

பக்தன் சித்தனுகிருன். சித்தன் என்ருல், பரிபூரணம் அடைந்தவன்; எல்லா ஆற்றலும் உடையவன்; நிம்மதியு டையவன்; அவன் சித்துக்களை விரும்புவதில்லை. பக்தனுக்கு இன்பதுன்பமில்லை.

பக்தன், பிறர் துன்பத்தில் வருந்திப் பிறர் இன்பத்தில் தானும் மகிழ்வான் — இந்த இடத்தில், மற்ற மனிதர்களை யும் நம்மால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான்மட்டும் வாழ வேண்டும்; பிறர் எக்கேடு கெட்டாலும் தன் நினைவிலே மூழ்கித் தானே வாழ நினைத்துச் செயல்புரி பவன் மனிதனல்ல—மிருகம். தானும் வாழ்ந்து பிறரும் வாழட் டும் என்று எண்ணுபவன் இருக்கிருனே அவன் சராசரி மனிதன்.

தன் துன்பத்தைப் பொருட்படுத்தாது, பிறருக்கெனவே உழைத்துத் தன்னலம் மறந்தவன் தெய்வம். உலகிலே இவ் வுத்தமர்கள் மிகச்சிலரே.

ஒரு நபிகள்; ஒரு ஏசு; ஒரு புத்தர்; ஒரு காந்தி; ஒரு வள்ளலார் இப்படிப்பட்ட தெய்வீக புருஷர்களை நாம் விரல் விட்டு எண்ணிவிட முடியும். உலகத்தை உய்விப்பதற்கென வே உதித்த உத்தமர்கள்; தெய்வீக புருஷர்கள்.

"துன்பத்தில் வருந்ாது, இன்பத்தில் மகிழாது; விருப் பம், பயம், கோபம், இவைகளை விட்டிருப்பவனையே ஞான நிலை பெற்ற முனிவன் என்று கூறப்படும்" எனக் கீதை, முனி வனுக்கு —அவன் எப்படியிருப்பான் என்பதற்குப் பாதை நமக்குக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பொருள்கள் ஒரே இடத்தில் இருப்பதற்கில்லை. மனிதனுக்கு இக வாழ்வில் ஈடுபாடு அதிகமாகிவிட்டால் அவன் பரத்தைப்பற்றி நினைத்துப் பார்ப்பதற்குக்கூட நேரமிருப்பதில்லை. அப்துல் ரகூீம் கானு என்பவர், "என் கண்களுக்குள்ளே ஆண்டவன் அழகிய ரூபத்தை வைத்தபின், வேறு ஒரு பொருளுக்கும் அங்கு இடமில்லை; சத்திரத்தில் ஆள் நிறைந்திருந்தால், வழிப்போக்கன் அங்கு நிற்க நினைப்பானு?" என்று கேட்டார்.

முருக பக்தராகிய நக்கீரர், சங்கத் தமிழிலே சந்தத் தமிழ் பாடுகிருர்—

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்"

என்றது போல இறைவனையன்றி இதரத் துணைகளை விட்டொழிக்க வேண்டும்.

"உற்ருரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்ருரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்ருலத்தமர்ந் துறையும்
கூத்தா உன் குரைகழற்கே
கற்ருவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே"

என்ற மனநிலை வரவேண்டும்.

பிரகலாதன், தகப்பனை விட்டான்;
விபீஷணன், சகோதரனை விட்டான்;
பரதன், தாயை வெறுத்தான்;
பலிச்சக்கரவர்த்தி, தன் குருவையே புறக்கணித்தார்;
கோபியர்கள், தங்கள் கணவர்களை விடுத்தனர்;

'துணையான சுற்றங்கள் அத்தனையும்
துறந்தொழிந்தேன்" என்ருர் மணிவாசகர்!

குழந்தை, தாயின் முகத்தையே நோக்கும்;
கற்புக்கரசி, கணவனையே கருதுவாள்;
ஆறு, கடலையே நோக்கும்;
பசும்புல், வானத்தையே பார்க்கும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிற நோக்கங்களை விடவேண்டும், ஒரு நெறிய மனம் வேண்டும்" என்றார் ஞானசம்பந்தரும்!

உலககுரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளும், 'தன்னையறிதலே பக்தி' எனப் பலமுறை அருளியதையும் அறியலாம்.

'Who know not the soul; No not-the Lord'
எவன் தன்னையறியவில்லையோ அவன் தலைவனை அறியமுடியாது.

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல்த் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத் தானிருந்தானே"

சீவன் சிவனாகின்ற நிலையும் இதுதான்!

"அழிஞ்சல் மரத்தின் விதை வெடித்து எங்கு சென்றிருந்தாலும், அவை தாமாகவே வந்து அந்த மரத்தையே திரும்ப அடையும். அவ்விதைகள் போலவும், கணவனைப் பின்பற்றும் பதிவிரதை போலவும், மரத்தை ஆதரவாகச் சுற்றிக் கொண்டு படரும் கொடி போலவும், கடலைத்தேடிக் கலக்கும் நதி போலவும், மனமானது ஈசனது பாதார விந்தங்களை அடைவதுதான் பக்தி எனப்படும்" எனப் பக்திக்குப் பரவசமான இலக்கணத்தை—இதயத்தைத் தொடும் இலக்கியமாகச் சிவானந்த லஹரி சித்தரிக்கின்றது.

பூஜையிலும், அதுமாதிரி விஷயங்களிலும் ஆர்வங் காட்டுதலே 'பக்தி' என்று பராசர் மகன் வியாசர் கூறுகிறார்.

வியாசர், வேதத்தை முறைப்படுத்தியவர்; மகாபாரதத்தையும், பாகவதத்தையும் நமக்குத் தந்துள்ளார். அவரது கருத்தை நாரத பகவான் நமக்குத் தருகிறார். மனிதன் தத்தம் மூர்த்திக்குச் செய்யும் பூஜைகளின் அங்கங்கள் பதினாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆவாஹனம் | — | இறைவனை அழைத்தல். |
| 2 | ஆசனம் | — | இருக்கை கொடுத்தல். |
| 3 | பதயம் | — | திருவடிகளைக் கழுவ நீர் கொடுத்தல். |



98404
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 அர்க்யம் — மரியாதையைக் காட்ட
நீர் கொடுத்தல்.
5 ஆசமனம் — அருந்தத்தண்ணீர்கொடுத்தல்.
6 மதுவர்க்கம் — பால் அல்லது பழம்கொடுத்தல்.
7 ஸ்நானம் — நீராடல்.
8 வஸ்திரம் — உடை கொடுத்தல்.
9 யஞ்ஞோ பவீதம் — பூணூல் போடல்.
10 கந்தம் — வாசனைத்திரவியமளித்தல்,
அக்ஷதை கொடுத்தல்.
11 புஷ்பம் — மலர் சாத்தல்.
12 தூபம் — சாம்பிராணி போடுதல்.
13 தீபம் — விளக்கு.
14 நைவேத்யம் — பிரசாதம்.
15 தாம்பூலம் — வெற்றிலை பாக்கு.
16 நீராஞ்சனம் — சூடம் காட்டுதல்
(குடமெடுத்தல்) முதலியன.

மனிதன், உயர்ந்த நிலை பெற்ற பின்னருங்கூட இந்தப் பூஜையைத் தொடர்ந்து செய்யலாம் என்று ஸ்ரீ சங்கரர் கூறுகிறுர்.

இந்தப் பூஜையை வற்புறுத்தி நாவுக்கரசரும் நல்ல தொரு தேவாரம் பாடுகிறுர்.—

“நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
‘சங்கரா’ ஜய போற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்
ஆரூரா! என்றென்றே அலறுநில்லே”

பக்திக்கு ஆறு எளிய வழிகளை நன்முன்னோர் கையாண்டனர்:

1 பாராயணம்
2 கதா காலட் சேபம்
3 சங்கீர்த்தனம்
4 தோத்திரம்
5 நாமம்
6 ஜபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையருது நாமம் சொல்லி நன்மை அடைந்தவர்கள் நம் தேசத்திலே எண்ணிலர். ஒரு கல்லை எறிந்தால் பல காக்கைகள் பறந்தோடுவது போல ஒரு நாமம் சொல்லிய வுடன் பல பாவங்கள் சிதறியோடுமென்று இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னர்.

ஆரூரில் கோயில் கொண்டுள்ள தியாகேசப்பெருமானை ஒரு பெண்ணுக்கு மறக்க முடியாமல் அந்நினைவிலே உறக்கம் கெட்டு, உணவுகெட்டுப் போனதால் உடல் மெலிந்து, கை யிலே பூண்டுள்ள வளையல்களும் தாமாகக் கழன்று கீழே விழுந்ததைப் பக்திச் சுவையுடன் சுந்தரர் தம் செந்தமிழில் பாடுகிருர்.

“பறக்கும் எம் கிள்ளைகாள்!
பாடும் எம் பூவைகாள்!
அறக்கண் என்னத் தகும்
அடிகள் ஆரூரரை
மறக்க இல்லாமையும்
வளைகள் நில்லாமையும்
உறக்கம் இல்லாமையும்
உணர்த்த வல்லீர்களே!”

என்று கசிந்துருகினர்.

சிவபிரான் வரம் கொடுக்க விரும்பியபோது. காரைக் காலம்மையார், “உனை என்றும் மறவாமை வேண்டும்” என் றும், ‘புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க நீ, வரந்தர வேண்டுமென’ அப்பரடி களும் இப்புவியில் வேண்டினர்.

பூஜித்து, வாசித்து, யோசித்துக் காணமுடியாதவனை —பராசக்தியை நேசித்துக் காணமுடியுமென ஞானியர் கண்ட னர்.

“பூசித்துக் காண்பேனே
பூவில் நகைப்பவளே
வாசித்துக் காண்பேனே
வாய்மனத்துக் கெட்டாதாய்,
யோசித்துக் காண்பேனே
ஓங்கி உலகளந்தவளே!
நேசித்துக் கண்டிடவே
நெஞ்சுருகி நின்றேனே!”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திக்குச் சாதனமும் பயனும் பக்தியேதான். அறிவு, பக்தியால் பெறும் பொருளுமன்று; அறிவு, பக்திக்குச் சாதனையும் அன்று. அறிந்து கொள்வது வேறு; அனுபவிப்பது வேறு.

அனவரதமும் வழிபட்டுக்கொண்டே இருப்பதன்பொருள் —இன்னும் இன்னும்—மேலும் மேலும் வழிபட வேண்டும் என்பதுதான். சங்க இலக்கியமான பரிபாடல் பக்திக்குப்பண்பாக விளக்கம் இருவரிகளிலேயே இயம்புகின்றது.

"துன்னத் துன்னி வழிபடுவதன் பயன்
இன்னும் இன்னும் அவையாகுக என்று"

இம்மட்டோ? ஆழ்வாரது பெரிய திருமொழி, தேனெழுகப் பால்சுரக்கப் பக்தியுடன், நானும் சொன்னேன்; நான் சொன்னால் மட்டும் போதுமா? நமக்குத் திரும்பச் சொல்லுங்கள்; என்கிறார்! அகத்துறையிலே பார்த்தால் இப்பாடல் அந்நியமற்ற தன்மையில்—தலைவனையே நினைந்துருகும் பான்மையில் அன்பொழுகும் உள்ளத்தின் பிரதிபலிப்பாகத் தோன்றி, பக்தியின் சக்தியைப் பரிமளிக்கச் செய்கின்றது.

"தேனும் பாலும் அமுதும்
ஆய திருமால் நாமம்
நானும் சொன்னேன்
நமக்கும் உரைமின்
நமோ நாராயணவே"

ஆம்! 'நாராயண' வெனச் சொன்னால் அவர் யாராயினும் நல்லன பலவும் பெறமுடியும். அது கண்டுதான், ஆழ்வார், தமிழிலே உள்ள ஒரு லட்சத்து முப்பத்தேழாயிரத்து முப்பத்திரண்டு சொற்களிலே, நலம் தரும் சொல் ஒன்றுண்டு; அது "நாராயண எனும் நாமம்" என அருளினர்.

"நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் அது
நாராயண எனும் நாமம்"

எதை மனிதன் காப்பாற்றாமல் விட்டுவிட்டாலும், நாவைக்கட்டாயம் மனிதன் காப்பாற்றியே தீரவேண்டும். "யாகாவாராயினும் நாகாக்க" என்றார் வள்ளுவரும். நாவைக் காப்பதோடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிற்கு நலமும் கூட்டிக்கொள்ள வேண்டுமேயானால், அவன், 'நாராயணு' எனும் நாமத்தை உச்சரித்தே ஆக வேண்டும். 'நாராயணன்' பகவான்! அவனிடத்தில் ஐஸ்வர்யம், வீர்யம், புகழ், திரு, ஞானம், வைராக்யம் ஆறுகுணங்களிருப்பதால் அவனுக்குப் பகவான் என்ற பெயரும் உண்டாயிற்று!

நாம் மனித வாழ்வு வாழும் வரை, தெய்வத்தை மனிதனுகவோ, மனிதர் மூலமாகவோதான் காணவேண்டும். அப்படிப்பட்ட பெரியோர்கள் எளிதாகக் கிடைப்பார்களா?— மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்கினுல், வார்த்தை சொல்ல, அதிர்ஷ்ட வசமாய்ப் பெரியோர்களின் தரிசனம் கிடைக்கும்.

இரும்பு, ரசகுளிகையால் பொன்னுக மாறுவதுபோல, நாமும் அவர்கள் சந்நிதியில் மாறுகிரும். மாற்றம் வருவது நமக்கோ பிறருக்கோ தெரிவதில்லை.

நல்ல விஷயங்களுக்குப் பலவித தடைகள், சங்கடங்கள், இன்னல்கள், எதிர்ப்புகள் எல்லாம் வரும். ஒருவன் கெடுவதற்குக் காரணம் கெட்ட சேர்க்கைதான். மந்தரையாகிய கூனியின் உறவால் ஏற்பட்டது இராம—இராவண யுத்தம். சகுனியின் உறவால் ஏற்பட்டது பாரத யுத்தம்.

பொருளல்லவற்றைப் பொருளென நினைத்தல் மோகம். அதன் விளைவால்; பற்று அவா, ஆசை, பேராசை இந்த நான்கும் ஏற்பட்டு, இதயத்தில் தினசரி போராட்டமாக—மனமே யுத்தகளமாக மாறி, வாழ்க்கையில் மனிதன் ஏமாறித் தடுமாறுகிருன்.

மம பிதா, மம மாதா, மமேயம், க்ர ஹினி க்ரஹம்.

என் தந்தை; என் தாய்; என் மனைவி; என் வீடு என்ற பற்றுக்களைப் பெருக்கிக்கொண்டுபோனுல் அமைதி ஏற்படாது. பற்றுக்களை, பாசங்களை அறுத்துக்கொள்வது அரிது. பொருளுடன் ஒட்டிக் கொள்பவன், உயர்நிலை அடைய முடியாது.

இராமலிங்க வள்ளலார், வீசி நடை நடந்தால் "மாசு வரும்" என்றஞ்சிக் கையைக் கட்டிக்கொண்டே நடந்தவர். கால்மேல் கால் போட்டிருக்கவும் பயந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள், திருவொற்றியூர் தெருவிலே, இயல்பான மனப்பாங்கின் வண்ணம், கையைக் கட்டிக்கொண்டே நடந்தார். அந்த வீதியில், ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த ஒரு சுவாமியார் – வீதியில் போகிற ஒவ்வொரு மனிதனையும் பார்த்து, "இதோ! நாய் போகிறது; பன்றி போகிறது; பாம்பு போகிறது; பல்லி போகிறது" என்றெல்லாம் சொல்லிவந்தவர், இராமலிங்கர் வீதியில் போவதைப்பார்த்து, "இதோ மனிதன் போகிறான்" என்றாராம்! இராமலிங்கர் தான் மனிதர் என்றால் —— நாம் யார்? யோசிக்க வேண்டாமா?

சித்தர் ஒருவர், மனிதரிலே பலவகையிருப்பதைப் பரிவுடன் நமக்குக் காட்டுகிறார். பறவையைப்போல எதிலும் பறக்கின்ற மனமுடையவனும் உண்டு. ஆம். நாம்தான் பார்க்கிறோமே! தேர்தல் காலங்களிலே மனிதன் பறவை போல பறக்கிறான். இரண்டெழுத்து, மூன்றெழுத்துள்ள பதவிகளுக்காக மனிதன் அங்கும் இங்கும் எங்கும் ஓடுகிறான். பதவிக்காக மனிதன் பலரையும் நாடுகிறான். ஒரு சில பதவிகள் ஐந்தாண்டுகளோடும், வேறு சில பதவிகள் மூன்றாண்டுகளோடும், இன்னும் சில பதவிகள் ஓராண்டு காலத்திலும் முடிகின்றவைகளுக்காக மனிதன் பறவைபோல பறக்கிறான்.

அறுபத்துமூன்று நாயன்மார்களும், பன்னிரு ஆழ்வார்களும், மற்ற அடியார்களும், வள்ளுவரும், வள்ளலாரும், வேதகால ரிஷிகளும், மாஞானிகளும்,

| | |
|---|---|
| பசியோடிருந்தார்கள் | — "ப" — பசி |
| தனியே இருந்து தவமிருந்தார்கள் | — "த" — தனி |
| இரவு பகல் ஆண்டவன் நினைவில் விழிப்புடன் இருந்தார்கள் | — "வி" — விழிப்பு |

'பசித்திரு, தனித்திரு, விழித்திரு' என்று வள்ளலார் சொன்னபடி, அதற்கு முன்பே ஞானிகள்,

பசித்துத் தனித்து விழித்து இருந்ததால் "பதவி" வந்தது. அப்பதவிக்குக் கால வரையறை கிடையாது. அது நிலைத்த பதவி. முன் பகுதியில் சொல்லிய 'மரணமிலாப் பெருவாழ்வு' என்ற மாபெரும் பதவி பெற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரிலே பறவை போன்றவன் இருக்கிருன்; அடுத்து "விலங்கு" போன்ற மனிதனும் உண்டு. மனம் நொந்த பாரதியார் — '.நெஞ்சு பொறுக்குதில்லை; இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்'' என்ருர். வள்ளுவரோ, "மக்களே போல்வர் கயவர்''— மக்களைப் போலவே கயமை படைத்தவர்கள் தோற்றத்தில் ஒன்ருகவே இருப்பார்கள். இவர்களை இனம் பிரிப்பது இயலாத காரியம் என வேதனையுடனே அவரும் கூறுகிருர்.

விலங்கு, எதையும் செய்யும், செய்யலாம். ஞானமாகிய பேரறிவு — பகுத்தறிவு அதற்குக் கிடையாது. பகுத்தறிவு, ஞானம், அனைத்தும் பெற்றுவிட்டதாகச் சொல்லிக் கொள்ளும் மாமனிதன், குரங்குபோலக் காரியங்கள் செய்யலாமா? — செய்கிருனே? — செய்வதையும் செய்துவிட்டு, போலி சமாதானம், "அவன் செய்யவில்லையா? — இவன் செய்யவில்லையா?'' என்றும் பேசுகிருனே! — அட ஆண்டவனே! உன்னைத் தவிர இதற்குப் பதில் யாரால் சொல்ல முடியும்? உன்னைத் தவிர யாரால் அவனைத் திருத்தவும் இயலும்? —

கல்லைப் போன்ற மனிதர்களும் உண்டு.

கல்லேனும் ஐய! ஒரு காலத்தில் உருகும், ஆனுல் கருணைக்கு இணங்காத — இசையாத — இளகாத நெஞ்சிருக்கிறதே — அது நெஞ்சல்ல; நஞ்சு.

'மனத்திலே மாசில்லாமல் (குற்றமில்லாமல்) வாழ்ந்து விட்டால் அதுவே அனைத்து தர்மமாகும்' என்ருர் வள்ளுவர்.

உள்ளத்தனையது உயர்வு பெறலாம் என்பதைப் புரிந்தும், தெரிந்தும் அறிந்தும் வைத்துள்ள மனிதன், அகந்தையின் கடிவாளத்தால், மமதையின் மாயையால் இது தவறல்ல; இது தவறல்ல என்று தான்தோன்றித்தனமாய் மிருகம் போல உணர்ச்சிவசப்பட்டு, எதையும் செய்துவிட்டுப் பின், கலங்காது, கனியாது, உருகாது, 'கல்போல' இருக்கிருர்களே—அவர்களைப் பார்த்த சித்தர் —'மனிதரிலே கல்லுண்டு' என்ற சொல்லை அர்த்தபுஷ்டியோடு இணைத்துள்ளார் என்றே தோன்றுகின்றது. இவை மட்டுமா? மனிதரிலே மரமுண்டு:—

மதுரையிலிருந்து ஒரு மரம், தானுகத் திருச்சி வராது. அதற்குரிய ஆள், அதற்குரிய கருவியோடு சென்று வெட்டித் துண்டு போட்டு, வண்டியில் ஏற்றிஞல்தான் வந்து சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல சில மனிதர்கள் அக்கம் பக்கம் தெரியாது; அடுத்தவர் செயல் புரியாது; அதுபற்றியும் அக்கறைகொள்வதும் கிடையாது. யாராவது வலியவந்து கேட்டாலும் அசைந்து கொடுப்பதில்லை. இதெல்லாம் மனிதச்கூட்டமா? இல்லை; மரங்கள் என்கிருர்! இந்தச் சித்தர் ரொம்பவும் ஆழமான இதயம் படைத்தவர்; மனிதர்களைக் கூர்ந்து கூர்ந்து பார்த்திருக்கிருர். உள்ளத்தின் அடித்தளத்தை ஆராய்ந்து அதிலே மண்டிக்கிடக்கும் மாசு, தூசுகளைக் கிளறிப் பார்க்கிருர். அவருக்குத்தான் அங்கு இருப்பது இன்னதென்று புரிந்து தெரிந்திருக்கிறது.

நமக்கோ மற்றவர் உள்ளத்தை உணரும் சக்தி கிடையாது. மனிதர்களது உடலின் வெப்பத்தை அறிய கருவியிருக்கிறது. இரத்த அழுத்தத்தை அறியவும் கருவிகள் கண்டுபிடித்திருக்கிருர்கள். இரத்தக் குழாயின் துடிப்பை உணரும் மின்பெட்டி வந்திருக்கிறது. இலகுவாக மூச்சு வந்துகொண்டிருக்கவும் கருவி உள்ளது. இப்படி யெல்லாம் கண்டு பிடித்த விஞ்ஞான மூளைக்கு, இன்னும் மனிதனுடைய மனத்தில் நினைக்கும் நினைப்பை—அவனது எண்ணத்தை—அளக்கும் கருவி கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டுபிடிக்கவும் வேண்டாம். ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? அப்படி நமது மனத்தின் நினைப்பை—எண்ணத்தை—கனவை—கற்பனையைக் கண்டுகொள்ளக் கருவி வந்துவிட்டால் அட! கடவுளே! நாம் என்ன ஆவது?

நரக உலகிற்கும் கீழாக வேறு ஏதேனும் ஒருலகம் இருந்தால் அந்த இடம்தான் நாம் ஒளிந்துகொள்ள ஏற்றதாகிவிடும்.

மார்க்ஸ் அரேபியர் என்பவர் மேல்நாட்டு ஞானி. அவர் சொன்னுர்; யாருக்குச் சொன்னுர்; மனிதனுக்காகத்தான் பேசினுர்:—

“ஏ மனிதனே! நீ! இப்பொழுது எதைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிருய் என்று கேட்டால், தான் நினைத்த நினைப்பை—எண்ணத்தைக் கனவைக் கற்பனையை, உடனே வெளிப்படையாகச் சொல்லக் கூடிய அளவிற்கு அந்த நினைப்பு, உண்மை நிறைந்ததாய்—வாய்மை நிறைந்ததாய்—மெய்மை படர்ந்ததாய் இருக்க வேண்டும் என்ருர். அந்த மாதிரி நினைப்பவர், எண்ணுபவர் கோடியில் ஒருவராகத்தான் தேடிப் பிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமுதாயமா? இது?" சமுதாயம் என்ற பெயரே எப்படி வந்தது? ஏன் வந்தது? – சமதன்மையுடைய ஒரு கூட்டம்– அதுதான் சமுதாயம். சமதன்மை உடையவர்களாகவா நாம் இருக்கிறோம். நம்மிலே எத்தனை வேறுபாடுகள். வேறுபாடுகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம்; அல்லது அனுசரித்து ஒட்டு மொத்தமாக தட்டிப்போகப் பார்க்கலாம். எத்தனை எத்தனை மாறுபாடுகள் சமுதாயத்திலே தோன்றிக் களையாக வேரூன்றி விட்டன—என்பதையெல்லாம் இன்று நாம் பார்ப்பதைவிட, அன்றே சித்தர் பெருமான் சுத்த இருதயத்தோடு பார்த்துவிட்டுச் சித்தம் நொந்து பாடுகிறார்:

"மனிதரிலே நீர் வாழுஞ் சாதியுண்டு!"

நீரிலே திமிங்கிலமுண்டு; நீரிலே உள்ள சிப்பியிலே நல் முத்து உண்டு; மீனும் உண்டு. இந்த மீன் இருக்கிறதே-இது தனக்கு மூச்சுக் காற்றுத் தேவை என்கிறபோது, நீருக்கு வெளியே தன் தலையை நீட்டி, காற்றை இழுத்துக் கொண்டு, நீரிலே சுருண்டு, வளைந்து, நெளிந்து சென்றுவிடும். இது போன்ற மனிதர்கள்-தேவையான நேரத்தில் நமக்கு முன்னே தோன்றி, எதை எதையோ சொல்லி நம்மை ஏமாற்றித் தன் காரியம் முடிந்ததும், மீனைப்போல நெளிந்து, வளைந்து சென்றுவிடுவார்கள். பின்னர் அவர்களை நாம் நெருங்கவே முடியாது. எவ்வளவு பெரிய சமுதாய உண்மையை, முக்காலமும் உணர்ந்த முனிவர், எக்காலத்திலோ இயம்பிவிட்டார்!

மனிதக்கூட்டத்தின் இயல்புகள், இயக்கங்கள், தன்மைகள், தரங்கள், இம்மட்டோடு முடிந்துவிட்டனவா? என்ன? —இல்லை என்பதையுணர்த்த சித்தர்பிரான்,

"அநேக குல மனிதருண்டு" என்று தொடருகிறார்.

பல விசித்திர விநோதப் பிறவிகளையெல்லாம்–சுற்றிவருகின்ற உலகில் நாம் அன்றாடம் சந்திக்கிறோமே–அவர்களை எல்லாம் அறிந்துணர்ந்து கொள்ளவே, "அநேக குல மனிதர்" எனச் சொல்லி, அந்த எண்ணிக்கையை "எண்ணிலி"— கணக்கற்றதாக ஆக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதெல்லாம் காலக்கெடுவில் அழிந்தொழிந்து போகட்டும். என்ருவது ஒருநாள் இந்த சமுதாயம் சீர்திருந்தாதா? செம்மை நெறி படராதா? ஒப்பற்ற உள்ளத்தின் உண்மை விளங்காதா? என்ற அவாவில், சித்தர், "மனிதனை" நமக்குப் புரிய வைக்கிருர்.

"மனிதரிலே மனிதருண்டு" என்கிருர்.

மனிதர்—என்ருல் மனம் படைத்தவர்.
மன்—என்ருல் செம்மை.
செம்மை சேர்ந்தவர் மனிதர்.

குணம் கெட்ட மனிதனைப் பார்த்துச் சினம் சிந்துகிற நேரத்தில் "தூ! இவன் மனிதனு!" என்கிருேம். செயற்கரிய நற்காரியத்தைச் செய்து முடித்த மாமனிதனைப் பார்க்கும்போது, "இவரா, இவர் மனிதரில் மனிதன்" என்றுமன மகிழ்ந்து பாராட்டுகிருேம்.

திருவாற்றியூர் சுவாமியார், இப்படித்தான் எண்ணி, இராமலிங்கரை, "இதோ மனிதன் போகிருன்" என்று சொல்லியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இதற்குமேலும் போகிருர் சித்தர்!

"வானவரும் மனிதராய் வருவதுண்டு" என்கிருர்.

இந்நூலின் முதற்பகுதியிலே பார்த்தோமே – குருவருள் மூலமாகத்தான் திருவருள் பெறுவது என்று! — அதுபோல, தேவர்களும் மனிதர்களை உய்விப்பதற்காக மனித உருத் தாங்கி இறங்கியும் இரங்கியும் வருவதுண்டு. அதுதான் அவதாரம். அவதார புருஷர்கள். நாம் பிறக்கிருேம்—அவர்கள் அவதரிக்கிருர்கள், பிறப்பில் துன்பமுண்டு; அவதரிப்பில் துன்பமில்லை, இன்பமே.

நமக்காக—கருணைகொண்டு — வானவர்களும் மனிதர்களாகப் பிறந்து, நம்முடன் வளர்ந்து, நம்முடன் இருந்து, பேரின்ப வழிக்கு ஆற்றுப்படுத்துகிற நிமித்தகாரணத்திற்காக நிகழுகின்ற நிகழ்ச்சியை — அவதார தத்துவத்தை — அரிய பொருளை நமக்குப் புரியப் பேசுகிருர் சித்தர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் சரிதான்; கதை இதோடு முடிந்ததா?

மனிதரிலே பறவை, விலங்கு, கல், மரம், நீர்வாழும் பிராணிகள்; அநேக குல மனிதர்கள், மனிதரிலே மனிதர், வானவரும் மனிதராய் வருபவர், இவ்வாறெல்லாம், மனித சமுதாயத்தை இனம் பிரித்துக் கண்டுவிட்ட சித்தர், கடைசியாக ஒரு போடு போட்டார்; என்ன தெரியுமா?

"மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமை என்பர் மேலோர்"

சமுதாயச் சீர்கேட்டைக் கண்டு எவ்வளவு சீறமுடியுமோ அவ்வளவும் சீறிவிட்டு, சினத்தைக் கொட்டிவிட்டுக் கெட்டிக் காரத்தனமாகச் சித்தர்—தப்பித்துக் கொள்ளுகிருர்.

மனிதன், மனிதனுகப் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவிட்டான். இது போதாது; போதவே போதாது; இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ என்று எண்ணக்கூடாது; ஏங்கக்கூடாது; இப்பிறவி தப்பினுல் எப்பிறவியும் பிறவாது; பிறப்பறுத்துக் கொள்ள வேண்டும் என்று மேலோராகிய நூலோர் சொல்லுவதாகச் சொல்லி, தான் சமுதாயக் கண்ணேட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதாக நினைத்துக் கொள்ளுகிருர் சித்தர்!

பிறப்பு — இதற்கு எதிர்மறை இறப்பு.
பிறவி — இதற்கு எதிர்மறை இறவி.

இதனைத்தான் அருணகிரிநாதர், திருப்புகழிலே வேண்டினுர். 'பிறவியற இறவியற' — வேண்டாம் பிறப்பு; வேண்டாம் இறப்பு. பிறந்தால்தானே இறப்பு. பிறவாதவன் எப்படி இறப்பான்?

இப்பிறவியிலேயே — பிறவியை அறுத்துக்கொள்ள முடியுமா? இனி வரும் பிறவிக்குத் தடை செய்துவிட இயலுமா? என்பதெல்லாம் மிகப் பெரிய விஞக்கள்தாம்!

இனிச் சித்தரின் முழுப் பாடலுக்கும் வருவோம்.

"மனிதரிலே பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலே நீர்வாழுஞ் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரிலே மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமை என்பர் மேலோர்"

நாம் ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாகப் படித்து விட்டு, தெரிந்தோ தெரியாமலோ, சில பல பட்டங்களைப் பெற்றுவிட்டுக் கண்டதே காட்சி; கொண்டதே கோலம் என இறுமாறுகிறோம். நாம் பெற்ற அறிவு ஒரு பேரறிவா? நமக்கு எல்லாச் சாதனைகளும், நாம் பெற்ற போதனைகளின் மூலமாய் பெற்று விட்டோமா? நம் வேதனைகள் அனைத்தும் தீர்ந்து விட்டனவா? — தீரத்தான் வழி வகைகள் தெரிந்து கொண்டோமா? — இந்த வாழ்க்கை போதுமென்று சிலர் எண்ணுகிறோம். எண்ணிய உடன் வேறு சாதனங்கள் தேடா மல் இறக்கத் தெரிகிறதா? வாழ்ந்தது போதும் — மறுபடி யும் பிறக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். நாம் எண் ணிய உடன் பிறக்கத்தான் முடிகிறதா? சரி. பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சாக மனமில்லை. அதற்காக என்றுமே இறக்காமல் இருக்க முடிகிறதா? — இக் கேள்விகளெல்லாம் இந்நூலை எழுதுகிற நான் கேட்பதாக வாசகர்களாகிய நீங்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது. இதெல்லாம் மாணிக்கவாசகர் தம் திருவாசகத்திலே நம் மைப் பார்த்துக் கேட்கின்ற கேள்விகளாகும்.

நினைத்தவுடன் இறக்கவோ, பிறக்கவோ, சாகாதிருக் கவோ தெரியாத நாம் என்ன கற்றுத் தெரிந்து கொண் டோம்; "கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவா யிற்றே" மாபெரும் சிந்தனையை மாணிக்கவாசகர் நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

"செத்திடவும் பிறந்திடவும் இனிச்சாவா திருந்திடவும்
அத்தனையும் அறியாதார் அறியும் அறிவு எவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்தபொருள்; ஒருபொருளாம் பெரும்பயனை
அத்தன் எனக்கருளியவாறு யார்பெறுவார் அச்சோவே"

ஒத்த நிலத்தை; ஒத்த பொருளை; ஒரு பொருளாகிய பெரும் பயனை நல்கினால் — ஆண்டவன் அருளினால், எச் செயல்களும் எளிது போலும்; அதனைப் பெற்ற மகிழ்ச்சி யில், நான் பெற்ற இன்பம் — இவ்வையகத்தில் யாரே பெற் றார் எனக் கேட்கிறார் மணிவாசகர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுரை வேறு — அறவுரை வேறு.

அறிவுரையை அறிந்தவர்கள் எல்லாரும் வழங்கலாம். அறவுரை அப்படிப்பட்டதன்று. அறத்தின் பொருள், அறத்தின் அருமைப்பாடு அறிந்தவர்கள் மட்டுமே — அவற்றை உணர்ந்த ஞானிகளே அறவுரை வழங்கத் தகுதியுடையவர்கள். அப்படிப்பட்ட அறவுரைகள் எத்தனை எத்தனையோ நம் இந்து மதத்தின் — ஸனாதன தர்மத்தின் — புராதனப் பொக்கிஷத்தின் ஆணி வேர்களாக அமைந்துள்ளன.

ஓர் ஆங்கில ஆசிரியர், "I Can give it an understanding; but no tongue" என்கிறார். "அறிவால் உணர்வேன்; நாவால் சொல்ல முடியவில்லை" என்கிறார். அப்படிப்பட்ட உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளைக் கொண்டது நம்முடைய இந்து சமயமாகும்.

விண்ணகத்து வித்தகனை மண்ணகத்துக் கொண்டுவந்து மனிதனது கண்ணகத்துக் காட்டுவது நம்முடைய இந்து சமயமாகும். ஏனைய மதங்கள் எல்லாம் ":ஏ! மனிதனே! நீ பாவஞ் செய்யாதே; திருடாதே; பொய் சொல்லாதே; என்று சொல்ல, நம்முடை இந்து சமயம்,

'ஏ! மனிதனே! நீ பொய் சொல்ல நினைக்காதே;
பாவஞ் செய்ய எண்ணாதே;"

என்று சொல்லி, நினைப்பிலும்கூட வாய்மையும், தூய்மையும் வேண்டும் என்கிறது. வெறுமனே மதம் என்பது பல கோட்பாடுகள் மட்டும் கொண்டதாக இருத்தல், சிறப்பல்ல. இந்து மதத்தின் தனிச் சிறப்பு, 'கடவுளைக் கண்டேன்; முயற்சித்தால் மற்றவரும் காணலாம்" என்று உணர்த்துவது அதன் மேம்பட்ட தனிப்பட்ட உயர் சிறப்பாகும். சித்தாந்தம் என்பது, சித்தத்தினுடைய முடிவு அல்லது தெளிவு என்பதாகும். வேதாந்தம் என்பது வேதத்தின் முடிவு அல்லது தெளிவு எனக் கொள்ளலாம். 'நான்—அவன்' என்பது வேதாந்தம். 'அவன் நான்' என்பது சித்தாந்தம்' சித்தாந்திகள் ஓர் இடத்தில் 'சித்தாந்தத்தை ஜீவன்முத்தி சித்தித்தால்' சித்தார்த்தம் ஏற்போர் முக்திசித்தித்தவர், என சாதித்தாலும், பிறிதோர் இடத்தில், "சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால், சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே" என்று சொல்லி வேதாந்தத்தையும் அரவணைத்துக் கொள்கின்றார்கள்.

பிரிவு
சேவை
மாநகர நூலக
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வேதங்களும் உலகத்திற்கு தருமத்தை விளக்கிப் போதிக்கின்றன. நான்கு வேதங்கள் ருக், யஜுர், ஸாமம், அதர்வனம். இவற்றில் ருக் வேதம், தேவதைகளை வணங்கவும், யஜுர் வேதம் வேள்வி முறைகளுக்கு விளக்கம் கூறும். ஸாம வேதம், கலை விளக்கத்திற்கு, கலங்கரை விளக்காக அமைந்து இருக்கிறது. அதர்வன வேதம், பிரயோக மந்திரங்களுக்கு விளக்கம் தருகின்றது.

இந்த நான்கு வேதங்களுக்கும், நான்கு மஹா வாக்கியங்கள் உண்டு.

1 பிரக்ஞானம் பிரும்மம் — (உள்விழிப்பே உள்ளது)
2 அஹம் பிரும்மாஸ்மி — (நான் பிரும்மம்)
3 தத்வமஸி — (அது நீ)
4 அயம் ஆத்மா பிரும்மம் — (இந்த ஆன்மாவே பிரும்மம்)

இந்த நால்வகையான தருமத்தை வாழ்ந்து காட்ட நான்கு ஆஸ்ரமங்களை நமது பெரியோர்கள் வகுத்தார்கள்.

1 பிரம்மசரியம்
2 இல்லறம்
3 வானப்பிரஸ்தம்
4 சன்யாசம்.

முதல் இரண்டும் உறவு வழி. அடுத்தது இரண்டும் துறவு வழி. இந்த நான்கிலும், அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்களைப் பெறுகிறோம். இவற்றிற்கு நான்கு யோகங்கள் உண்டு.

1 ராஜயோகம்
2 கர்மயோகம்
3 பக்தியோகம்
4 ஞானயோகம்.

இந்த நான்கு யோகப்பயிற்சிகளுக்கும் சரியை, கிரியை யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்கள் உண்டு. இவைகளுக்கு தாஸ மார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்கு வழிகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழியில் பயின்ற சிவபக்தர்கள், அப்பர், ஞானசம் பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். விஷ்ணு பக்தர்கள் இந்த நெறியில் நின்றவர்கள். பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆண்டாள் நாச்சியார், நம் ஆழ்வார் ஆவார்கள். வேதாந்த சாதனங்கள் நான்கு:

1. நித்யா நித்திய விவேகம்.
(எது உள்ளது, எது அல்லது என்னும் அறிவு.)

2. இஹ அமுத்திர பலபோக விராஹம்.
(இங்கும் அங்கும் அவா வின்மை)

3. ஷட்ஸம்பத்து
(ஆறு நலங்கள்—சமம், தவம், திதீட்சை, உபரதி, சிரத்தை, சமாதானம்.)

4. முமுக்ஷதவம்.
(முந்தி வேட்டல், விழிப்பு, சொர்ப்பனம், கனவு, ஆழ் துயில்)

மனிதனுக்கு நித்தியம் (அதாவது, நிலைத்தது எது? நிலையாதது எது?) என்று புரிந்து கொள்வதற்கு அறிவு துணை செய்கிறது என்று சொல்லி வேதாந்தம் நமது சீரிய வாழ்க்கைக்கு நேரிய வழிகாட்டுகிறது. நித்தியார்த்யத்தைப் புரிந்து கொண்ட மனிதன் சாவைக்கண்டு அஞ்சுவது கிடையாது, தயங்குவது கிடையாது. இன்று வருமோ, நாளைக்கே வருமோ அல்லது மற்று என்று வருமோ என்று ஏங்கித் தவிப்பதும் கிடையாது. ஆன்மா நித்தியமான வஸ்து என்றும் பிரும்மம் நித்திய வஸ்து என்றும் உடல் அநித்தியமானது என்றும், அநுபவிக்கும் போக போக்கியங்களும் அநித்தியமானவை, என்பதை மிகத்தெளிவாக வேதாந்தசாரம் விரிவாக எடுத்துச் சொல்கிறது.

இந்த வேதாந்த சாரத்தைத்தான், சித்தாந்தத்திலும், சைவ நெறி நின்ற மணிவாசகர் தினை அளவு பூவில் உள்ள இன்பத்தை நுகருகிற 'ஏ மனிதனே?' 'இது உனக்குப் போதுமா?' நினைக்கும் பொழுதும், பேசும் பொழுதும் காணும் போதும், எப்போதுமே அனைத்து எலும்புகூட உருகிக் கனிந்து, கசிந்து, நெகிழ்ந்து ஆனந்தம் தரக்கூடிய தேன் சொரிகின்ற புன்முறுவல் இன்முறுவல் காட்டும் அந்த ஈசனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய வஸ்துவை, நினைந்து பார், என்று வேதாந்தத்திற்கு ஒருங்கிணைந்த சித்தாந்தக் கருத்தைத் தெரிவிக்கிறது.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ."

நித்யா நித்தியத்தை தெரிந்துகொண்டு ஞானிகளும் ரிஷிகளும் தனக்கென சேர்த்து வைத்துக்கொண்ட ஞானத்தைத் தவிர, வேறு எப்பொருளிலும் ஈடுபாடுகொள்ளவில்லை.

லோகாஸ் ஸமஸ்தா; ஸுகினோ பவந்து.

உலகத்தில் உள்ள அனைவரும் சுபீட்சமாக, சுகமாக, நிம்மதியாக, நித்யா நித்தியத்தைப் புரிந்து தெரிந்து கொண்டு வாழ வேண்டுமென வேதாந்திகள் வழிகாட்டினர்கள்.

நித்தியமானது முக்தியாகும். முக்தி என்பது கருவி இன்றி உணரும் நிலை. கருவியோடு உணரும் நிலை 'பெத்தம்' என்று சொல்லப்படுகிறது. ஆனந்தம் என்பது அனுபவத்திற்குரியது. வினையால் வருகின்ற அனுபவம்தான் அறுகின்றதே தவிர, அறிவால் வருகின்ற முக்தி அனுபவம் என்றும் உண்டு.

இறைவன், குணதீதன். குணங்கள் கடந்தவன். எண் குணத்தான். எப்படி? ஆன்மாக்களுக்குள்ள ராஜஸ, தாமஸ, சாத்வீக குணங்களைக் கடந்தவன்;

ஆன்மாவிற்கு அறிவுண்டு; அதனுல் அனுபவமும் உண்டு. எனவே முத்தி நிலை – அனுபவமாகிறது. ப்ரும்மத்திலே அழுந்துதல் முக்தி எனவும், உலகிலே அழுந்துவது பெத்தம் எனவும் ஆகின்றது. முக்தி என்பது, உணர்ச்சி விசேடமேயன்றி, கொடுப்பது வாங்குவதல்ல – இப்போது உலகியலில் (பெத்த நிலையில்) அவன் நம்மைக் கலந்து நிற்கிறுன். முக்தி நிலையிலே நாம் அவனைக் கலந்து நிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட ஞானியர்களாகிய ஆழ்வார்கள், துவாதஸ நாமம் என்று சொல்லக்கூடிய பனிரெண்டு நாமங்களில் பனிரெண்டு ஆழ்வார்களும் நாராயணனை நன்ருகத் துதித்தார்கள்.

| | | |
|---|---|---|
| 1. கேசவா | 2. நாராயணு | 3. மாதவா |
| 4. கோவிந்தா | 5. விஷ்ணு | 6. மதுசூதனு |
| 7. திருவிக்ரமா | 8. வாமனு | 9. ஸ்ரீதரா |
| 10. ரிஷிகேசா | 11. பத்மனுபா | 12. தாமோதரா. |

இதுபோல துவாதஸ மந்திரம், 12எழுத்துக்களை உடைய மகாமந்திரம் — வைஷ்ணவ சித்தாந்திகள் தமது வாழ்க்கையில் கண்ட சாயுஜ்யப் பேற்றிற்குத் துணையாக நின்ற மந்திரம் —

'ஓம் நமோ பகவதே வாசுதேவாய'

சைவசித்தாந்திகளுக்குரிய பனிரெண்டு ஜோதிர் லிங்கங்களும் அவைகள் இருக்கும் மாநிலங்களும் மனிதர்கள் அறிந்துணர்ந்தால் என்ருவதொருநாள் அந்த தரிசனம் அனைவர்க்கும் கிட்டாதா?

| | | |
|---|---|---|
| 1. | ஸோமநாதம் | (பம்பாய்) குஜராத் |
| 2. | ஸ்ரீசைலம் | (ஆந்திரா) |
| 3. | உஜ்ஜைனி | (மத்யப் பிரதேசம்) |
| 4. | ஓங்காரம் | ,, |
| 5. | பரவிவைத்யநாத் | (பம்பாய்) மராட்டா |
| 6. | பீமசங்கரம் | ,, |
| 7. | இராமேஸ்வரம் | (சென்னை) |
| 8. | நாகேசம் | பம்பாய் (மராட்டா) |
| 9. | வாரணுஸி | உத்தரப் பிரதேசம் — காசி |
| 10. | த்ரயம்பகம் | பம்பாய் (மராட்டா) |
| 11. | கேதாரம் | உத்தரப் பிரதேசம் |
| 12. | குஸ்மேசம் | பம்பாய் (மராட்டா) |

நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலே மிகச் சிறந்த பாடல் ஒன்று; மனிதனை உயர்த்திக்கொள்வதற்கு வழிகாட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிந்த குடியிலே ஒருவன் பிறந்திருந்தாலும்; தாம் பிறந்த குடியை உயர்ந்த குடியாக்கும்; இம்மைக்குரிய செல்வத்தையும் கொடுக்கும்; மறுமைக்கு வழிகாட்டும்; ஞானச் செல்வத்தையும் கொடுக்கும்; அடியார்கள் அடைகின்ற துன்பங்கள் எல்லாவற்றையும், அழித்து விடும்; அத்துன்பங்கள் நிலைத்து நிற்காமல், முடிவுபெறும்படியும் செய்யும்.

மிகப்பெரிய இன்பம் நிறைந்த வானுலகத்தையும், அளிக்கும். மிகுந்த அருளுடன் பெரிய நிலவுலக இன்பத்தையும் நிரந்தரமாகக் கொடுக்கும். நாம் நினைத்த காரியங்களில் எல்லாம் வெற்றியைத் தரும். மற்றும் நன்மைகள்—இன்பங்கள் தருவன எவை எவை என்று எண்ணுகின்றோமோ அவற்றையெல்லாம் அளிக்கும்.

நாம் வெறுத்தாலும் நமது அன்னை, நம்மை வெறுக்க மாட்டாள். நாம் செய்யும் பிழைகளையெல்லாம் பொருட்படுத்த மாட்டாள். நம்முடைய வளர்ச்சி ஒன்றையே குறியாய்க் கொண்டு நமக்கு நன்மையே செய்து வருவாள். அவளைக் காட்டிலும் நமக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வோர் வேறு யாருமில்லை. அவளைப்போலவே நன்மை தரும்— அத்தகைய நன்மை தரும் சொல்லை, எப்பொழுதும் மறக்காமல் சொல்வதற்கு நான் தெரிந்து கொண்டேன். அதுதான் 'நாராயணா' எனும் பெருமை நிறைந்த நாமமாகும் என்கிறார் – திவ்யப் பிரபந்தத்திலே பிறப்பறுக்கும் நாமத்தைக் கண்டு கொண்ட திருமங்கை ஆழ்வார்!

"குலம்தரும்; செல்வம் தந்திடும்; அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும், நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும்; மற்றும் தந்திடும்; பெற்றதாயினும்
ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்;"

திருமாலிடத்தில் மனதைப் பறிகொடுத்து 'திருமால் அல்லது தெய்வம் இல்லை', என்ற உணர்வு கொண்டார் பொய்கை ஆழ்வார். உள்ளத்தின் உறுதியால் திருமால் இடத்தில் கொண்ட மாபெரும் பக்தியால் 'திருமாலை அல்லது தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் ஏத்தேன்' என்று சொல்லுகின்றபொழுது சைவத்திலே மெய்கண்ட சிவாச்சாரியார் "யாதொருதெய்வம்கண்டீர் அஃதே அத்தெய்வமாகி மாதொரு பாகனுர் தாம் வருவர்" என்று விடாப்பிடியாக சிவபெருமானை சிந்திப்பதும் எமக்கு நினைவுக்கு வருகிறது.

பிறர் பொருளை விரும்பாமல், கீழாரோடு சேராமல் உயர்ந்தவர்களுடனே சேர்ந்து வாழுகின்ற மனிதர்கள் ஆனாலும் அவர்கள் உள்ளத்திலேயும் தெய்வ நம்பிக்கை குடிகொண்டிருக்குமேயானல் அது இன்றும் பெருமை அளிக்கும். பொன்மலர் மணம் பெற்று பொருளாவதுபோல் ஆகும். உள்ளம் உலகப் பாசத்தில் மயங்கி கோணல் வழியில் செல்லத் தொடங்கினுல் அப்போது அந்த தெய்வபக்தி குறுக்கிட்டு தடை செய்யும். உண்மையான தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் நல்ல ஒரு நெறியிலே வாழ்க்கை நடத்தத்தான் விரும்புவார்கள். ஆதலால் தெய்வ நம்பிக்கையும் இன்றி அமையாதது என்று ஆழ்வார்கள் அருளினுர்கள். இந்தப் பேர் உண்மைகளை பொய்கை ஆழ்வார் பாட்டு ஒன்று மெய்யை விரும்பும் மானிடனுக்கு மனத்நில் பதியும்படி உணர்த்துகிறது. தன்னுடைய வாழ்க்கை எப்படிப்பட்டது என்று கூறும் முறையிலே, உலகினர் இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் கருத்தை பொய்கை ஆழ்வார் மிகத் தெளிவாக அவற்றில் எழுதிய சித்திரம் போல சித்தரித்து இருக்கிருர்.

"நயவேன் பிறர் பொருளை நள்ளேன் கீழாரோடு
உய்வேன் உயர்ந்தவரோடல்லால்—வியவேன்
திருமாலை அல்லது தெய்வம் என்றும் ஏத்தேன்
வருமாறு எம் நம்மேல்வினை?"

பிறர் பொருளை விரும்பமாட்டேன், கீழான தன்மை உள்ளவர்களோடு நட்புக்கொள்ள மாட்டேன். உயர்ந்தோர்களுடனே சேர்ந்து வாழ்வேன். திருமாலைத் தவிர வேறு தெய்வத்தை, தெய்வம் என்று புகழமாட்டேன். வணங்கவும் மாட்டேன். ஆதலால் நம்மை நாடிப் பிறப்பு, இறப்பு துன்பத்தைத் தரும் வினை, இனி வரமுடியாது என முடிந்த முடிவாகத் தெரிவிக்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதத்தாழ்வார் செய்யுட்கள் பிரபந்தத்திலே இரண்டாவது திருவந்தாதி என்ற பெயரில் அமைந்து இருக்கிறது. அவ்வந்தாதியின் முதல் வெண்பாவிலேயே தமிழின் பெருமையை சொல்லி இருக்கின்றார் பூதத்தாழ்வார்.

"ஞானத்தை—அறிவைப் பெருக்கும் தமிழை விரும்பிய நான், அறிவாகிய சுடர் விளக்கு ஒன்றைக் கொழுத்தினேன். அந்தச் சுடர் விளக்கை எப்படி ஏற்றினேன் தெரியுமா? அன்பையே அகலாக — எண்ணெய், திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்தேன். அன்பின் முதிர்ச்சியான ஆசையையே நெய்யாகக் கொண்டேன். எம்பெருமானை எண்ணி, இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெயில் இட்ட திரியாகக் கொண்டேன். இவ்வாறு தகழி, நெய், திரி முதலியவற்றைச் சேர்த்து, நன்ருக மனம் உருகி ஞான ஒளியாகிய விளக்கைத் திருமாலுக்காக ஏற்றினேன்" என்கிருர்.

"அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு,
ஞானத் தமிழ் புரிந்தநான்"

இப்பாசுரத்தை நினைந்துருகிப் பாடுகின்றபோது, திருமூலரது திருமந்திரம் நெஞ்சிலே — நினைவிலே தோய்கிறது.

"உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்;
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"

திவ்யப்பிரபந்தத்திலே இரண்டாவதுதிருவந்தாதி பாடிய பூதத்தாழ்வாருக்கும், பன்னிரு திருமுறைகளிலே 10-ம் திருமுறை பாடிய திருமூலருக்கும் உள்ள மன ஒற்றுமையைச் சைவர்களும் வைணவர்களும் எண்ணிப் பார்த்து இதயம் மகிழ வேண்டும்.

அடுத்து இதே பூதத்தாழ்வார் 2-ம் திருவந்தாதியில் 74-ம் பாடலில், "நானே மிகவும் சிறந்த தமிழன்; தமிழனுக இருப்பதனுல் நல்லவனும் ஆனேன்; எம்பெருமானே! யானே சிறந்த தவத்தைச் செய்தவன் ஆனேன். ஏழ் பிறப்பிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் நான்தான் எல்லோரையும்விடச் சிறந்த தவத்தை உடையவனாய் இருக்கிறேன். சிறந்த பெரிய தமிழிலே நல்ல பாமாலை, உன்னிரண்டு பாதங்களிலும் சூடும்படி கூறினேன்" என்கிறார்.

தமிழுக்கு எவ்வளவு சிறப்புத் தர வேண்டுமோ அவ்வளவையும் அள்ளிப் பொழிகிறார். தமிழன் நல்லவன்; என்பதைத் தமிழகம் பிறந்த பேற்றால் தூயவன் ஆனேன் என்கிறார். தமிழர் சமுதாயம் உலகத்திற்கு வழிகாட்டி என்பதைப் பாவிலே இழையோடச் செய்கிறார். "யானே தவம் செய்தேன்" என்று ஆழ்வார் அருளுவதும், 'யானேயோ தவம் செய்தேன்' எனச் சிவனடியாராகிய மணிவாசகர் உரைப்பதும் நாம் ஒன்று கலந்து உய்த்துணர வேண்டிய ஒப்புவமையாகும்.

"இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்" எனப் பூதத்தாழ்வார் பூரிப்புடன் பொலிவுடன் கூறுவதைப் பார்க்க, திருமூலர் திருமந்திரத்தில்,

"என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்ற வரிகளும் நினைவில் நிற்கின்றன.

அடியார்களுக்குள்ளேதாம் அவர்கள் சைவர்களாக இருந்தாலும் வைஷ்ணவர்களாக இருந்தாலும், பக்தி நெறியிலே—எவ்வளவு ஒற்றுமையான தோய்விருக்கிறது என்பதை அறிந்தவர்கள் உணர முடியும்.

திருமாலின் இரண்டு பெரிய திருவடிகளுக்கும் — சூடும்படி ஆழ்வார் நற்றமிழ்ப் பாமாலை பாடினாராம். திருமாலின் திருவடியும், பாதகமலம்–சிவபெருமான் திருவடியும் பாதகமலம்தான் — இதிலே சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் பேதாபேதம் கிடையாது.

மனிதர்களாகிய நம்மிடத்தில் இருப்பது ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்கள். இவைகள், சிவபெருமானுடைய அல்லது கண்ணபிரானுடைய திருவடிப் பேற்றைத் துய்க்கவொட்டாது தடையாக இருப்பவை ஆதலினால் இம்மலங்களைப் பரிபாஷையில் 'பாதக – மலம்' என்



98404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருர்கள். இறைவனுடைய பாத — கமலத்தில் பற்று வைத்து விட்டால் மனிதர்களது பாதக — மலம் அறும் என்ற எண்ணத்தில், அவாவில், பூதத்தாழ்வார்,

"இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்" என்று வருணிக்கிருர். இனி முழுப்பாடலுக்கும் வருவோம்.

"யானே தவம் செய்தேன்; ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம் உடையேன்; எம்பெருமான்; யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பொருந் தமிழன் நல்லேன் பெரிது"

'இருந்தமிழ் நன்மாலை' என்கின்றபோது—காவிய புலவர் ஒருவர், "இருந்தமிழே உன்ஞல் இருந்தேன் – இமையோர் விரும்பும் பெருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்"

என்று தமிழுக்கு – அதன் ஆற்றலுக்கு – அதன் தொன்மைக்கு — அதன் தன்மைக்கு – அதன் மென்மைக்கு—அதன் இளமைக்கு—அதன் ஐந்திலக்கணத்திற்கு –(எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, ஐவகை இலக்கணங்களைக் கொண்டது தமிழ்) பெருமிதம் கொண்டு பாடுவதும் நினைவு கூர வேண்டிய ஒன்று!

'இருந்தமிழ்' என ஆழ்வார் இயம்பிய திவ்யப் பிரபந்த ஒரு சொல், எங்கெங்கோ நம்மை இட்டுச் செல்கின்றது.

அகத்தியரின் அருமைபற்றி உணர்த்தவந்த கம்பன்,

'என்றுமுள தென்தமிழ் இயம்பி
இசை கொண்டான்" என்றும்,

"தழற்புரைச் சுடர்க்கடவுள்
தந்த தமிழ் தந்தான்" என்றும்,

தமிழின் தொன்மைக்கு—அதன் பழமைக்கு இலக்கணம் கூறுவதும் ஒப்பிட்டு உணரவேண்டியதாகும்.

தமிழை–அதன் நயத்தை – அதன் இனிமையை – எழிலை அள்ளிப் பருகி ஆனந்தித்து ரஸானுபவத்தில் பாமாலை சூடியவர்கள் ஆள்வார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையகல—வேதனை நீங்க, சாதனையில் நாதனைக் காணப் பேயாழ்வார் நம்மை அழைக்கிறார்—

எந்த மதத்தைப் பின்பற்றினாலும் சரி; எந்த தெய்வத்தை வணங்கினாலும் சரி; அந்த மதத்தின் கொள்கையிலே நம்பிக்கை வைக்க வேண்டும்; எந்த தெய்வத்தை வணங்கினாலும் சரி; அந்தத் தெய்வத்தினிடம் உறுதியான நம்பிக்கை வேண்டும். இப்படியிருப்பவர்கள்தாம் உண்மையான பக்தர்கள் ஆவார்கள் என்ற உண்மையைப் பேயாழ்வார் ஒரு வெண்பாவிலே விளக்கிச் சொல்லுகிறார்.

"அதுநன்று; இது தீது என்று ஐயப்படாதே
மதுநின்ற தண்துழாய் மார்வன்—பொதுநின்ற
பொன்அம் கழலே தொழுமின்! முழுவினைகள்
முன்னம் கழலும் முடிந்து"

"உங்கள் உள்ளத்திலே ஐயம் கொள்ள வேண்டாம்; அது நல்லது; இது கெட்டது ஆதலால் இதைவிட்டு அதைப்பற்றுவோம் என்று எண்ணவும் வேண்டாம். எது நல்லது, எது கெட்டது என்ற சந்தேகங்களும் வேண்டவே வேண்டாம்.

தேன் சிந்துகின்ற குளிர்ந்த அழகிய துளசிமாலையை அணிந்த மார்பையுடைய திருமால், எல்லோருக்கும் பொதுவாக நின்றவன். அவனுடைய அழகான பாதங்களை வணங்குங்கள். இவ்வாறு, திருமாலைத் தொழ நினைத்தார்களானால் போதும்; உடனே உங்கள் வினைகள் எல்லாம் நீங்கள் தொழுவதற்கு முன்பே ஓடிப்போய்விடும். மீண்டும் உங்களைத் தொடவே மாட்டாது. முடிவாக விலகிபோய்விடும்" என்கிறார். மனிதர்களது மனத்திலே படிந்துள்ள வினையகல-வேதனை நீங்க எவ்வளவு சுலபமான பக்திவழி நமக்குப் பாங்காகப் பேயாழ்வார் எடுத்துப் பேசுகிறார்?—

ஒரு பெண்; பெண்ணென்றால் பேயும் இரங்கும். அப்படிப்பட்ட தையலாள் ஒருத்தி, திருமாலின் உருவத்தை—நெடிய திருவுருவை; அழகிய நீள் கண்களை; பவள உதடுகளை; கதுப்புக் கன்னங்களை; உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்தாள்; அவனுடைய மாபெரும் பண்புகளையும் எண்ணி உருகினாள். அவனருள் இன்னும் வரவில்லையே என்றும் திகைப்படைந்தாள். சிறுபொழுது தெளிவுடன் இருப்பாள். கைகூப்பி வணங்குவாள்; உடனே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருவரங்கத்தில் வாழ்கின்றவனே" என்று வாய்விட்டுக் கூறு வாள். மறுபடியும் வணங்குவாள். அப்பொழுதே, தனது குளிர்ந்த கண்களிலே நீர் பெருகும்படி வந்தருள் செய்வாய் என்று பல தடவை சொல்லிச் சொல்லி மயங்குவாள். உடனே அந்தி நேரத்திலே — பகலும் அல்லாத இரவும் அல்லாத நேரத்திலே பிரகலாதனைக் காக்கும் பொருட்டு — அவன் உன்னிடம் கொண்டிருந்த அன்பை நிறைவேற்றும் பொருட்டு இரணியனுடைய உடம்பைப் பிளந்த பெருமானே! என் துயரத்தைத் தீர்க்கக்கூடாதா? என்பாள்! அலை வீசும் பாற்கடலைக் கடந்து தேவர்களுக்கு அமுதம் அளித்து அவர்களைக் காப்பாற்றிய கருணைக் கடவுளே! ஆரா அமுதனே! என் துயரத்தைக் களைய முன்வரலாகாதா? உன்னை நேரே கண்டு உன் பாதங்களை அடைவதையே உறுதியாகக் கொண்டிருக்கிறேன். இத்தகைய பெண்ணை, ஏன் வீணாக மயங்கி வருந்தும்படி செய்கிறாய்?" என்று மெய்யுருகி வேண்டுவதாக நம்மாழ்வார் பாடுகிறார்.

"சிந்திக்கும்; திசைக்கும்; தேறும்; கைகூப்பும்
திருவரங்கத்து உள்ளாய் என்னும்
வந்திக்கும்; ஆங்கே மழைக்கண் நீர்மல்க;
"வந்திடாய்" என்று என்றே மயங்கும்
அந்திப்போது அவளின் உடல் இடந்தானே
அலைகடல் கடைந்த ஆரமுதே!
சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த
தையலை மையல் செய்தானே"

எவ்வளவு பெரிய உருக்கத்தை ஊட்டும் — உணர்வை வாட்டும், இதயதாகத்தைக் கொட்டும், இனிய நாத வீணையை மீட்டும் பாட்டிது! பெண்ணாகவே — அவளிதயத்தில் வேதனை தாளாது புண்பட்டுப்போன சோக கீதமாகவே இசைக்கிறாரே நம்மாழ்வார்; கண் கலங்கும் பெண்ணை — செய்வதறியாது திகைக்கும் நங்கையை — அன்பு செய்யும் வம்பை அரவணைத்துக் கொள்ள வராத மோகத்தை முற்றிலும் நம் சித்தத்தில் பதிவு செய்கிற பாசுரம் இது. இதனைவிட அனன்னிய (பிரிவற்ற) பக்தி நிலையை யாரால் வருணிக்க இயலும்? என நாம் வியக்கின்றோம் — இல்லையா?

இதே பெண்ணரசிக்குக் கேசவன், மாதவன் வராத தாகத்தால் விரக்தி ஏற்படுகின்றது. வேதனையுடன் ஆதார ஸ்ருதியிலே பாடுகிறாள் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெஞ்சமே! நீயும் எனக்குத் துணையாக இல்லை; என்னை விட்டு என் காதலனிடம் போய்விடுகின்றாய்! இந்த இரவோ விடியவில்லை. நாழிகையும் நீண்டுகொண்டே போகின்றது. ஊழிக்காலம்போல அது நீளுகிறது. பகைவர்களைச் சினந்து அழிக்கும் கடுமையான வில்லையுடைய என் தலைவனாகிய 'காகுத்தனும்' வரவில்லை. செத்துத் தொலைந்தாலாவது இத் துயரம் ஒழிந்துவிடுமென்றால் 'சாவதற்கும்' வழியறியேன். தீவினையையுடைய நான், இப்படிப் பெண்ணாகப் பிறந்து வாடுகிறேன் என்று பாடுகிறாள்; பாடி வருந்துகிறாள்.

"நீயும் பாங்கல்லை காண் நெஞ்சமே! நீள் இரவும்
ஓயும் பொழுதின்றி ஊழியால் நீண்டதால்
காயும் கடுஞ்சிலை என் காகுத்தன் வாரானால்
மாயும் வகையறியேன்; வல்வினையேன் பெண்பிறந்தே"

"பெண்ணாகப் பிறந்தால் இப்புவியில் படுந்துன்பம்
பாரனைத்து மறியப் பாவாக்கி விட்டாரே நம்மாழ்வார்!"—

நம்மாழ்வாரின் இதயம், பெண்ணிதயத்தில், நின்று பேசுவதாகவே நம்மால் எண்ண முடிகிறது. அவரை அணு கவே கருத முடியவில்லை. இதே கருத்தை — இதே நயத்தை மணிவாசகரும், திருப்பெருந்துறை உறை சிவபெருமானிடம் கனிந்துருகிப் பாடும் போது நம்மால் காணமுடிகின்றது.

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே!
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
யாரொடு நோகேன்; யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரிவாயே!"

பக்தி நெறியில்-பரவச உணர்வில் சைவமும் வைணவமும் கலந்து இணைந்து ஒன்றாகி உவப்புடன் நடைபோடு வதைப் பக்தி எனும் பண்பிலே தோய்ந்து நின்றால் நாமும் அக்காட்சியைப் பார்த்து ரசித்து மகிழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விஷ்ணு' என்ருல் எங்கும் (வியாபித்து) பரவியிருக்கும் பொருள்.

இது கருதித்தான், மகாகவி பாரதியார், காக்கைச் சிறகிலும், தீயிலும், பச்சை மரங்களிலும்கூட அந்தப் பரம்பொருளைப் பார்த்துப் பாடியிருக்கிருர்!

''காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரியநிறம் தோன்றுதையா நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—நினைத்
தீண்டுமின்பம் தோன்றுதையா நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையா நந்தலாலா''

கவிஞன், மாதவனை எப்படியெல்லாம் — எங்கெங்கெல்லாம் — எதிலெல்லாம் கண்டு கவிபாடிக் களித்திருக்கிருன்?

நம்மாழ்வார் பற்றி, பாஷ்யக்காரர்—

''பரநார்த்தம் (பிறர் துன்பம்) நெஞ்சிலே படுகையிலே, நாட்டுக்காகத் தாம் மன்ருடுகிருர்'' என்கிருர்.

காயம்பட்ட ஒருவனைக் கண்டதும், ''நான் அனுதாபப் படுவதில்லை'' என்ருராம் ஒருவர்!

''அய்யோ! அவ்வளவு கடின சித்தமா?'' என்று கேட்டவர் திகைத்தார். அந்தப் பேரறிஞரோ,

''நான் அனுதாபப்படுவதில்லை; ஆனுல், நானே அந்தக் காயம்பட்டவனுகிவிடுகிறேன்'' என்ருராம்!

இது போல, பிறர் துன்பங்களைத் தன் துன்பங்களாகக் கருதினுர் நம்மாழ்வார்.

'நாரா' என்ருல் புருஷ தத்துவத்திலிருந்து தோன்றிய பூதர்கள் முதலிய பிரபஞ்சங்கள்,

'அயனன்' என்ருல் அமர்ந்திருப்பவன்.

'ஆதிசேக்ஷம்' என்ருல் எஞ்சியிருப்பது என்பது பொருள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலககெலாம் ஒழிந்து போன பிறகும் எஞ்சியிருப்பது சர்ப்பம்—சக்தியின் சின்னம்.

உறங்குகின்ற மனிதரிடை உணர்வும் அழகும் இருக்காது. அரங்கத்துப் பெருமானது துயில், அழகின் எல்லையாக அமைந்துள்ளது.

மனிதனுக்கு இரு கைகள்; மாலுக்கு நான்கு கைகள்; ஒரு கையில் சங்கு:—அது ஓங்காரம் அல்லது பிரணவம்.

மற்றொரு கையில் தர்மசக்கரம். உலகைக் காப்பாற்றுகிறது. தர்மம் செய்கிறவர்களைக் காக்கவும், அதர்மம் செய்கிறவர்களை அழிக்கவும் வல்லமை பெற்றது.

இன்னொரு கையில் கதை. மற்றொரு கையில் கமலபுஷ்பம்:

அசுர, பாங்கைத் திருத்த கதை. தீயோருக்குத் தண்டனை கொடுக்க கதை. நல்லோருக்கு அவன் கமல மலர் போன்றவன்.

ஸ்ரீ வைஷ்ணவம் என்ற விசிஷ்டாத் வைத சித்தாந்தம்,

சித்து — அறிவுடையது
அசித்து — அறிவற்றது என்ற இரண்டையும் இசைகின்றது.

"யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயம் தோறும்
தோய்வு இலன்; புலன் ஐந்துக்கும்
சொலப்படான்; உணர்வின் மூர்த்தி
அவரவர் தம தமது
அறிவு அறிவகை வகை
அவரவர் இறையவர் என அடி அடைவார்கள்"

என நம்மாழ்வாரும் ஸ்ரீ வைணவ சித்தாந்தத்தைச் செப்புகிறார்.

ஸ்ரீ வைஷ்ணவர்கள், பக்தியை ஆறுவகையாகக் கண்டார்கள்.

தேசிய நூலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 அம்பரீசன் — மதுர பக்தி
2 ஹனுமான் — தாஸ பக்தி
3 அர்ஜுனன் — சக பக்தி
4 யசோதை — வாத்ஸல்ய பக்தி
5 ராதை — பிரேம பக்தி
6 கோபியர் — சகி பக்தி

இதனைப் போலத்தான் சைவ சித்தாந்தங்களும், உறவு கோல் நட்டு, உணர்வுகயிற்றினுல் முறுக வாங்கிக் கடைந்து ஆண்டவனை—அவனருட்பேற்றைத் துய்த்தார்கள்.

'இறைவன் ஒருவன்' எனக்கண்ட சைவர்கள், நெருப்பு சிவனுகவும்; நெருப்பிலே உள்ள சூடு உமாதேவியாகவும்; நெருப்பிலே உள்ள சிவப்பு விநாயகமாகவும்; நெருப்பிலே உள்ள ஒளி சுப்ரமண்யமாகவும், தீயிலும், சூட்டிலும் அதன் நிறத்திலும் ஒளியிலும்கூடச் சிவனைச் சிந்தித்தார்கள். கரவிலா உறவு, கடவுளை அவர்களுக்குக் காட்டியது; கண்டார்கள்.

விஞ்ஞானத்தின் மூலமாக உலகத்தைப் பார்க்கின்ற போது, கடவுள் உண்டா, இல்லையா என்பது கேள்வியல்ல; தலைவன் ஒருவன் வேண்டும் என்பது துலக்கமாக விளங்கும்.

"ஒருவன் ஒருத்தி ஒன்று என்று
உரைத்திடும் உலக மெலாம்
வருமுறை வந்து நின்று போதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்" (சித்தியார்)

இதனை யாரே மறுக்கவல்லார்?

'சங்காரம்' என்ற சொல்லுக்குப் பொதுவாக "அழித்தல்" என்று கூறுகிருர்கள்.

'சங்காரம்' என்ற சொல், அழித்துவிடுதல் அல்ல; 'சங்காரம்' என்ற சொல்லுக்குச் சரியான பொருள்:—

'இளைப்பாற்றுதல்' என்பதாகும். இந்த மாக்கருணையை மனிதர்கள் புரிந்து கொண்டால் சாவைப்பற்றிய அச்சம் அல்லது சங்கடம் யாருக்கும் எப்போதும் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெரியவர், "அனுதி கேவலத்திலிருந்து ஆன்மாக்கள் பிறப்பினை எய்துகின்றன. அவையாவும் முக்தியடைந்த பின், இறைவனின் ஐந்தொழில் என்னவாகும்?" என்று கேட்டார்.

ஆன்மாக்கள் எண்ணில. எத்தனை ஆன்மாக்கள் முக்தி அடைந்தாலும், தொகை எண்ணிலியாகவே இருக்கும். ஆகவே, இறைவனுடைய ஐந்தொழிலும் நித்யமாகவே இருக்கும்.

"Any thing is added with in infinite number the result will be infinite. Similarly if any thing is Subtracted from the infinite number the result will be infinite"

இது கணித சூத்திரம் கண்ட உண்மை. இதனையே,

ஓம் பூர்ண மத: பூர்ணமிதம், பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண மேவ விசிஷ்யதே

"ஓம் சாந்தி—சாந்தி—சாந்தி"

"அது பூர்ணம், இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் தோன்றியுள்ளது. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்ததும் எஞ்சி நிற்பதும் பூர்ணமே" என்று ஈசாவாஸ்ய உபநிஷதம் கூறுகின்றது.

வேத நூல்களை, வியாசபகவான், எல்லாவற்றையும் சேகரித்து, அவற்றை வகைப்படுத்தித் தொகை செய்து, ருக்; யஜுர்; சாம; அதர்வனம் ஆகிய நான்காகப் பிரித்து வைத்தார். ஒவ்வொரு வேதமும், வியாச முனிவரின் மாபெரும் ஞானத்திறத்தால் — பேரறிவின் வல்லமையால்; மூன்று; தொகுதிகளாக — அதாவது — மந்திரங்கள் பிராம்மணங்கள் உபநிஷதங்கள் எனப் பிரித்துச் சீர்செய்யப்பட்டன.

இந்த உபநிஷதங்கள் அனைத்தும், மனித சமுதாயம் எக்காலத்தும், பண்பாட்டுடன், நாகரிகத்துடன், கலாச்சாரத்துடன் வாழ்வதற்கான வழிவகைகளை மிகத் தெளிவாக விளக்குகின்றன என்பதை, அவற்றை அறிந்துணர்ந்தோர், அனுபவ உண்மையாக ஏற்றுக்கொள்ள முடியும். இந்தவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான உபநிஷதங்கள் சுமார் 283 இருப்பதாகச் சொல்லுகிறர்கள். இவற்றிலே 108 உபநிஷதங்களை சாத்திர நுணுக்கம் அறிந்தவர்கள் ஒத்துக் கொண்டாலும், 11 உபநிஷதங்களையே சிறந்த வாக்காக எல்லாரும் ஏற்றிப் போற்றி, அவற்றிற்கு விளக்க உரைகள் எழுதியுள்ளனர்.

உபநிஷதங்களை வழங்கிய உயரிய முனிவர்கள், மனிதர்களது அகத்தில் இருக்கின்ற உலகங்களை மிக நன்ருக ஆராய்ந்தறிந்து, எல்லாவற்றிற்கும் அடிப்படையான கருத்து எது என்பதைப் புரிந்து வெளியிட்டார்கள். அதாவது, எக் கருத்துக்களை அறிந்த பின், வேறு எதையும் அறியவேண்டியதில்லையோ, எதைப் பார்த்த பின், வேறு எதையும் பார்க்க வேண்டியதில்லையோ அப்படிப்பட்ட மாபெரும் மன நிறைவை அடைந்து விட்டார்கள். இவ்வரிய பெரிய ஞானியர்கள் நடந்த பாதையிலே நாமும் சென்று அவர்கள் கண்ட அடிப்படையான மூலப்பொருளை நாமும் உணர்ந்து ஏன் உயர்நிலை அடையக் கூடாது?—

"ஊரிலேன் காணியில்லை
உறவு மற்ருெருவர் இல்லை
பாரில் நின் பாத மூலம்
பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே ஓ!
கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா!
அரங்கமா நகருளானே"

என்று ஆழ்வார் கதறுகிருர்.

"I am empty; anaching
am I dont Know why—"

"நான், வெறுமையாய் இருக்கிறேன். அவஸ்தைப்படுகிறேன். ஏனென்று எனக்குத் தெரியவில்லை?" என்று மேல் நாட்டறிஞன் 'பால் சைமன்' பரிதவிக்கிருன்.

'மாயையற்ற மெய் வழியில், இருளகன்ற ஒளிமிகு பாதையில், மரணமற்ற அமரத்துவ நிலையை அடைய எனக்கு வழிகாட்டுவாய்' என உபநிஷதம் மனமிக உருகிப் பிரார்த்திக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதன தர்மத்தை அல்லது புராதன தர்மத்தைப் போதிக்க வந்த இந்து மதத்தின் ஆணிவேர் போன்றது காயத்திரி மந்திரம். அது,

"ஓம் பூர்புவஸ்வஹா
தச் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந பிரோச தயாது"

என்று அருளுகின்றது. ஆதித்ய பகவானுடைய ஜோதியை உள்ளத்தில் அமைத்துக் கொண்டு தியானிப்போமாக. அதாவது, "பாவ எண்ணங்களைப் பெருமல், பகவான் ஆதித்தன் காப்பாளுக என்று இதயகீதம் இசைக்கின்றது. இதனிலும் மனிதன் கடைத்தேற வேறு சாதனங்கள் வேண்டுமோ?"

மனிதன் உய்ய — மனிதன் உயர — மனிதன் தெய்வீக நிலை பெற எத்தனை மந்திரங்கள், ஜபங்கள், தவங்கள் இருக்கின்றன? அவற்றை எப்படி எல்லாம் நமது பெரியவர்கள் உருப்போட்டு உருப்பட்டிருக்கிருர்கள்!

ஜபமாலை 108 மணி கொண்டது. ஜபம் புரிகின்றவர்களில் இம்மைப் பயன் கருதுவோர், கீழ்நோக்கியும், முத்தி நலங் கருதுவோர் மேல்நோக்கியும், நாயகமணி தாண்டாது ஜபிக்க வேண்டுமென — ஜபத்தில்கூட இலக்கணம் கண்டு சொன்ன நமது ஞானியர்களை நாம் மறக்கத்தான் முடியுமா?

இந்திய தத்துவ ஞானங்களை அறிவால் அறிந்து, உணர்வால் புரிந்து கொண்ட ஜி. யு. போப், "இந்திய மதங்கள் அனைத்திலும், சைவசித்தாந்தமே மிக மேம்பட்டது என்பதில் ஐயமில்லை" என்ருர்.

கௌடி என்பவர்,

"சைவ சித்தாந்தம், இந்திய சிந்தனைகளது உணர்வின் சிகரம்" என்ருர்.

"வேதாந்தத்தின் தெளிவே சைவ சித்தாந்தம்" எனப் பெரியோர் கண்டனர்.

வேதத்தின் சாரம் — வேதாந்தம். வேதத்தின் உட்பொருள் — வேதாந்தம். இப்படியாகப் பல பொருள் வேதாந்தத்திற்குச் சொல்லலாம். வேத காலத்தின் கடைசியில், உபநிஷதக் கருத்துக்களை மையமாக வைத்துச் சித்தரிக்கப்பட்டது வேதாந்தம்.

சர்க்கரையில் பல தின்பண்டங்களைச் செய்கிறார்கள். எந்த வகையான தின்பண்டங்களைச் செய்தாலும் சர்க்கரை ஒன்றுதான். அதேபோல உலகத்தில் பலவிதத் தோற்றங்கள் இருப்பினும், எல்லாவற்றிலும் கலந்து நிற்பது 'பரபிரும்மம்'தான் என்பது ஆதிசங்கர பகவத் பாதாளின் அரிய உபதேசமாகும்.

இதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், காசி விசுவநாதர், நான்கு நாய்களுடன் சண்டாள வேஷத்தில் ஆதிசங்கரர் முன் தோன்றினார். வழியை விட்டு விலகுமாறு ஆதிசங்கரர் கூறினார்.

யார் ஒதுங்குவது? உடலா? ஆத்மாவா? என்று அந்தச் சண்டாளன் கேட்டான். அச்சண்டாளன் பெரிய தத்துவ தர்சனம் அறிந்தவன் என்பதை ஆதிசங்கரர் உணர்ந்து, அவன் பேரில், "மனிஷா பஞ்சகம்" பாடினார். அதன் கடைசி சுலோகத்தின் பொருள்:—

"இந்திரன் முதலானோர் அனுபவிக்கும் சுகம், பரப்ருமத்தின் ஒரு திவலைதான். தத்துவ ஞானியோ, அப்பரமானந்தத்தில் மூழ்கியிருக்கிறான். தான் என்ற அகங்காரம் போய் விடுகின்றது. அப்போது அந்த ஞானி, வெறும் பிரும்மமாகவே ஆகிவிடுகிறார்."

இந்த உயர் நிலைக்கு வேதாந்தம், மனிதனை இட்டுச் செல்கின்றது என்பதை அறியும்போது, வேதாந்தம் வெறுமனே வாய்ப்பந்தல் போடாது, மனிதனது நற்கதிக்கு, இவன் அவனாவதற்கு, ஜீவன் சிவனாவதற்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்தர் மெய்யுருகி,

"If all the oceions are ink,
If all the trees pens,
If the earth is paper,
His glory cannot be written"

என்று பாடினூர். "இந்த உலகில் உள்ள கடலெல்லாம் மையாக, இந்த உலகில் உள்ள மரமெல்லாம் பேனுவாக, இந்த உலகில் உள்ள நிலப்பரப்பெல்லாம் தாளாக மாற்றி எழுதினுலும், ஆண்டவனே! உன்னுடைய பெரும் புகழை எழுதிவிட்டோம் என்ற இறுமாப்பு வரவில்லையே" என்ருராம்.

அதுபோல,

சித்தாந்த வேதாந்தத் தெளிவுகளை, விளக்கங்களை நயங்களை, மேம்பாடுகளை எந்தளவுதான் எடுத்துச் சொன்னுலும், எழுதினுலும் அவை பரந்த — ஆழங்காணமுடியாத கடல் ஆகையினுல், அவற்றை முழுமையும் சொல்லிவிட்டோம்; எழுதிவிட்டோம் என்ற எண்ணம் என்னவோ இதயத்தில் உதயமாகவில்லை. சொல்ல வேண்டிய — எழுதவேண்டிய பல்லாயிரக்கணக்கான விஷயங்களில் இப்போது எழுதியவை சிலதிலும் சிலவே. மிகப் பல மீதம் இருக்கின்றன.

எழுதியவற்றைக் கொண்டு எண்ணிப்பார்த்தால், எங்கேயோ செல்லுகின்ற மனிதனை — அவனது மனத்தை — அவனது உள்ளத்தை — உணர்வைக் கொஞ்சமாவது தொட்டுப் பார்க்கச் செய்து,

எங்கேயோ போகின்ற நாம்,

எங்கேதான் போக வேண்டும்! என்று நினைக்கவைத்து 'அது இங்குதான்' என்ற உறுதிப்பாட்டிற்கு வழிநடத்திச் செல்லுமேயானுல்,

தரணிபெற்ற இன்பம் தான் பெற்றதாக எண்ண முடியும்! எண்ணத் தெரிந்த இதயம் படைத்த மனிதனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்னுடன் வா!—

அதோ தெரிகிறதே கடல் — அலைமோதும் கடல்;
அதற்கு ஓய்வுண்டா? உறக்கமுண்டா? இரவுபகலுண்டா?
ஒன்றின்மேல் ஒன்ருக எத்தனை எத்தனை அலைகள்?—

அந்த அலைகள் ஓயட்டும்; அதன்பின் நீராடுவோம் என்று நீ நினைக்கிருயா? அது முடியாது; அந்த அலை ஓயாது. அலையோடு அலையாக நீ உன் தலையை நனைத்துக் கொள்; காரியம் முடிந்ததா? எங்கேயோ செல்லுகின்ற ஏ! மனிதனே! உலக பந்த பாசங்கள் என்னும் அலைக்குள்ளே நீ அகப்பட்டிருந்தாலும், ஒரு கணம், எல்லாவற்றையும் மறந்து, 'தியானம்' செய். நீ எங்கே செல்லுகிருய் என்பதும், எங்கே செல்ல வேண்டும் என்பதுவும் உனக்குப் புரிந்துவிடும்.

கடல் கண்ட மகனே! அதோ தெரிகிறதே—
அதுதான் ஆறு. பார்த்தாயா?—

எவ்வளவு தெளிந்த நீரோட்டம் என்பது தெரியுமே! மலையிலே உற்பத்தியாகும் ஆறு — எவ்வளவு தெளிவாக ஆரவாரமில்லாமல் அமைதியாக ஓடி, அக்கம்பக்கம் உள்ள நிலங்களுக்கெல்லாம் கால்வாயாக மாறிப் பசுமை தந்து கடைசியில் கடலோடு சரணடைகின்றது என்பதைக் காண்கிருயே — இதிலிருந்து நீ என்ன அறிகிருய்?—

எங்கேயோ செல்லுகின்ற எனதன்புச் சகோதர மனிதனே! இங்கே வா! வானமுகட்டைத் தொட்டு நிற்கும் இந்த மாபெரும் மலையைப் பார்!

எத்தனைபேர் உடைக்கிருர்கள்; எத்தனைபேர் வேட்டு, வெடி வைத்துப் பெயர்த்தெடுக்கிருர்கள்—இந்த மாமலை ஏதாவது முணுமுணுக்கிறதா? தன் நிலையில் தான் மாற்றம் அடைகின்றதா? நீ எங்கே போக வேண்டும் என்பதை இந்த— மலை உனக்குக் கற்றுத் தந்த பாடத்தை நீ மறந்துவிட முடியுமா?—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நிலையில் மாருது அடங்கி நிற்கும் உன் தோற்றம் இந்த மலையைவிட உயர்ந்தது என்று பெரியவர்களும் சொன்னுர்களே என்பதையும் நினைந்து பார்!

அதோ அடர்ந்த கானகம்! அங்கு ஏன் நான் வரவேண்டும்? என்கிருயா? நீ வந்தே ஆகவேண்டும்.

விண்ணைத் தொட்டு நிற்கும் மரங்களைப் பார்; நீயா அந்த மரங்களுக்கு தண்ணீர் ஊற்றினுய்; உன்னுல் அம் மரங்களுக்கு ஏதாவது பயன் உண்டா? பயன் கருதாது அம்மரங்கள், வேரிலிருந்து, கனிவரைக்கும் உனக்கு எத்தனை யோ வகையில் பயன்படுகின்றனவே! அக்கானகம் இருப்ப தால்தானே வானமும் மழைபொழிகின்றது. வையகமும் வாழ் கின்றது என்பதை நீ நினைத்தாயா? நீ இந்த சமுதாயத்திற் குப் பயன் கருதாது ஏதாவது செய்திருக்கிருயா? எண்ணிப் பார் மனிதனே!

மானுடச் சகோதரனே! ஏன் உடம்பு குளிருகிறதா? போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்கிருயே!— இந்தக் குளிரைக்கூட உன்னுல் தாங்கிக்கொள்ள முடியவில்லையா?— உனக்குக் குளிரைத் தருவது எது என்று எண்ணினுயா? அது தான் காற்று. அக்காற்றை — அதன் உருவத்தை நீ பார்க்க முடியாவிட்டாலும், அது எங்கும் எதிலும் கலந்திருக்கிறது. உன் உடலுக்குள்ளேகூட அது குடிகொண்டிருக்கிறது. அக் காற்றில்லாவிட்டால் நீ மூச்சை மறந்து விடுவாய், அக்காற் றுக்கு உன்னுல் ஏதேனும் உபகாரம் உண்டா?

“பூமியைக் கீழ் நோக்கிப் பார்க்கும் ஒருவன் நாத்தி கம் பேசலாம்; வானத்தை மேல் நோக்கிப் பார்க்கும் எவ னும் கடவுள் இல்லை என்று சொல்ல மாட்டான்” என்று ஆப்ரஹாம் லிங்கன் சொன்னுர். அதிசய அற்புதங்கள் நிறை ந்த வானத்தை நிமிர்ந்து பார். காலைக் கதிரவன் தன்னெளி பரப்பி வராவிட்டால் வையகம் உய்யுமோ? வட்ட நிலா வடி வாய் வந்து ஒளி பரப்பி உலகை உவகைக்குள்ளாக்குவதை யும் பார்! அவ்வான், கருணை மழை பொழியாவிடில் கடல்



98404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்த இவ்வுலகம் கடைத்தேறுமா? அப்படிப்பட்ட வானத்தைப் பற்றி உன் மனத்தில் என்ருவது நன்றி உணர்ச்சி எழுந்ததுண்டா? அதன் தன்மையில் ஆயிரத்தில் ஒரு பங்காவதுதானும் நின்றுயர வேண்டும் என்று நீ நினைத்ததுண்டா?

பூமியைத்தான் கீழ்நோக்கிப் பார்க்கிறேன். நீ அதனை என்ன பாடு படுத்துகிருய்? உன் உணவிற்காக, உன் நலத்திற்காக உன் வளர்ச்சிக்காக நீ தோண்டுகிருய்; வெட்டுகிருய் — என்னென்னவோ செய்கிருய்! இம்மட்டோ? உன் அசுத்தமான கழிவுப் பொருள்களையும்கூட அது வாய் பேசா மௌனியாக ஏற்றுக்கொள்ளுகிறதே! — பொறுமை நிறைந்த அந்த பூமாதேவிக்கு என்ருவது நீ வணக்கம் செலுத்தியதுண்டா?

கடலும், ஆறும், மலையும், காடும், வானும், புவியும், பயன் கருதாது உனக்கெனவே உழைக்கும்போது, நீ யாருக்கெனப் பிறந்தாய் மகனே! — நீ பாருக்கென உழைத்து, உழைப்பின் வியர்வையிலே உன்னுள்ளே கோயில் கொண்டுள்ள உத்தமனையும் தரிசித்து, நீ அவனுகி, அவன் நீயாகி, தத்துவங் கடந்த முத்திப்பேறு,

"இன்று வருமோ? நாளைக்கே வருமோ மற்று
என்று வருமோ? அறியேன் எம் கோவே!"

என இறையடியில், ம — என்னுடையது, ந — இல்லை, என்னுடையது ஒன்றுமில்லை — இறைவனே எல்லாம் உன்னுடையது என்று அர்ப்பணித்து,

"துன்றுமல மாயையற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்"

இன்ருே, நாளையோ, என்ருே வரும் என்ற நம்பிக்கையில் நீ இருந்தால் — நீ நடந்தால் — நீ செயல்புரிந்தால்,

நீ எங்கேயோ சென்று, எட்டாதனவெல்லாம் எட்டிப் பிடித்து இன்பநிலை எய்தி விடுவாய்! என்றும் மரணமிலாப் பெருவாழ்வில் திளைப்பாய்! அதற்கு உன் மனமே சாட்சி!

வாழ்க மனிதனே! வளர்க நீ! உயர்க நீ!



KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3438 c c

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org